628

NEW METHOD
TAMIL READER

628

FOR STANDARD VI

(Prepared according to the Elementary School Syllabus 1939)

BY

VIDWAN - PANDIT N. KANAKARAJA IYER, B.O.L.

OFFICE OF THE REGISTRAR OF ... 27 FEB 1942 MADRAS

T.G. GOPAUL PILLAI
TEPPAKULAM ⁎ TRICHINOPOLY

PRICE
As. 8

புதுமுறைத் தமிழ் வாசகம்

ஆரும் வகுப்பிற்கு உரியது

[1939-ல் வெளியிடப்பட்டுள்ள ஆரம்ப பாடசாலைகளின்
பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது.]

494.81186

ஆசிரியர் :
வித்வான் - பண்டித, N. கனகராஜையர், B.O.L.
தமிழாசிரியர், மஹாராஜா கலாசாலை, புதுக்கோட்டை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

963

T. G. கோபால் பிள்ளை
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1941 [விலை அணா 8

First Edition 1941.

THE B. N. PRESS. MADRAS.

முகவுரை

புதுமுறைத் தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்டு வெளிவரும் இந்நூல் வரிசை, **ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகட்கு** 1939-ஆம் வருஷத்தில் சென்னை கல்வித் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள **புதிய பாட திட்டப்படி** தயாரிக்கப்பெற்றது. அப்பாட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இதன்கண் இடம் பெற்றுள்ளது.

இக்காலத்து மாணவர்கள் தம்மளவில் உலகச் செய்திகளை அறிதற்கு வேண்டும் அளவு பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவையும் பொது அறிவையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட திட்டத்தில் கண்டுள்ளபடியே ஒவ்வொரு பாடத்தி லும் போதிய **அரும்பத விளக்கம், பயிற்சி, இலக்கணம்** முதலியன தரப்பெற்றுள்ளன. கதை, விஞ்ஞானம், பயிர்த்தொழில், கைத்தொழில், சுகாதாரம், சரித்திரம், சம்பாஷணை, நாடகம் முதலிய பலவகைப் பாடங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் எழு தப்பட்டுள்ளன. வகுப்புக்கு ஏற்றவாறு நடை உயர்த்தப் பெற் றுள்ளது. **மௌன வாசிப்பின்** அவசியம் கதைப் பாடங்கள், வரலாற்றுப் பாடங்கள் மூலம் வற்புறுத்தப்பட்டுள்ளது. பலவகைக் **கடிதங்கள், அழைப்பு இதழ்கள், எழுதுதல்** முதலியன வும் வகுப்புக்கு ஏற்றவாறு தரப்பெற்றுள்ளன. பலவகைக் **கட்டுரைகள்** எழுதுதற்கு மாதிரிக் கட்டுரைகள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. **கட்டுரைப் பயிற்சி** பாடந்தோறும் வற்புறுத்தப் பெறுகின்றது. அந்தந்த வகுப்புக்கு ஏற்ற முறை யில் **இலக்கண பாடங்கள்** எளிய முறையில் தரப்பெற்றுள்ளன.

இப்புத்தகம் **செய்யுட் பாடம்** (1) நீதிப்பகுதி, (2) கதைப் பகுதி, (3) பலசுவைப் பகுதி என முத்துறைகளைச் சுவையுறப் பெற்றுள்ளது நோக்கத்தக்கது. இங்கும் **அரும்பதவுரை, கேள்விகள்** ஆகியவை தரப்பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், இப் புதுமுறைத் தமிழ் வாசகம் இக் கால மாணவர்களுக்குத் தமிழ்ச் சுவையும் உலக அறிவும் ஊட்டும் எனத் துணிந்து கூறலாம். இதனை அறிஞர் உலகம் வரவேற்கும் என்னுந் துணிபுடையேன்.

1—9—1941,
மஹாராஜா கல்லூரி,
புதுக்கோட்டை.

N. கனகராஜையர்.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	கடவுள் ...	1
2.	எனது உல்லாசப் பிரயாணம் ...	7
3.	கம்பர் ...	13
4.	கூட்டுறவு இயக்கம் ...	19
5.	உலகுக்கு என்ன பயன்? (பாட்டு) ...	24
6.	சர் ஜகதீச சந்திரபோஸ் ...	27
7.	காலத்தை அளக்கும் கருவிகள் ...	32
8.	குறிப்புகளினின்று கதையை விவரித்து எழுதுதல் ...	39
9.	மயிலும் வான்கோழியும் (பாட்டு) ...	46
10.	கடிதங்கள் ...	49
11.	காலம் தவருமை ...	56
12.	காகிதம் ...	62
13.	பொற்கைப் பாண்டியன் ...	70
14.	உழவு (பாட்டு) ...	76
15.	மலைகளும் நதிகளும் ...	80
16.	மின்சாரம் ...	88
17.	ஆதிரை என்னும் கற்பரசி ...	93
18.	உடலைப் போற்றும் முறை ...	102
19.	வீரப் பெண்மணி (நாடகம்) ...	110
	செய்யுள் பாடம்:	
I.	நீதிச் செய்யுட்கள் ...	118
II.	கதைச் செய்யுட்கள் ...	132
III.	பலசுவைச் செய்யுட்கள் ...	138

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

புதுமுறைத் தமிழ் வாசகம்

1. கடவுள்

இவ்வுலகத்தையும் இதிலுள்ள பொருள்களையும் நாம் உற்று நோக்கும்போது, இவை எப்படி உண்டாயின என்னும் வினா நம் மனத்தில் தோன்றும். விதை ஒன்றை நிலத்தில் ஊன்றினால், அது முளைத்துச் சிறிது சிறிதாக வளர்ந்து பெரிய மரமாகிறது. ஆலம் விதை கடுகுபோல மிகவும் சிறியது; அதிலிருந்து முளைத்து வளரும் மரமோ மிகப் பெரியது. மிகப் பெரிய மரம் மிகச் சிறிய விதையில் எப்படி அடங்கிற்று?

கடலைப் பாருங்கள்: அது இரைந்து பேரொலி செய்யும்போது எவ்வளவு அச்சமாக இருக்கிறது! ஆயினும், அது தன் எல்லையைக் கடந்து வருவதில்லை. அது கரையை உடைத்துக் கொண்டு ஊருக்குள் புகுமாயின், உலகம் என்ன பாடுபடும்! அவ்வாறு கடலானது பெருக்கெடுத்து நாட்டை அழிக்காமல் தன் எல்லைக்குள் அடங்கி நிற்பதற்குக் காரணம் என்ன?

நிலத்தை உற்றுப் பாருங்கள்: அதில் புல் பூண்டுகளும் செடி கொடிகளும் முளைத்து வளர்ந்து மிக்க அழகாய்த் தோன்றுகின்றன. சிட்டுக்குருவி முதல் தீப்பறவை வரை எத்தனை வகையான பறவைகள் இருக்கின்றன! அவை எப்படி உற்பத்தியாயின? அவைகளுக்கு இரை எப்படிக் கிடைக்கின்றது? அவை ஆகாயத்தில் பறப்பதும், இரை தேடுவதும், கூடுகள் கட்டிக்கொண்டு வாழ்வதும் எவ்வளவு வியப்பு! இப்பறவைகளில் சில எவ்வளவு இனிமையாய்ப் பாடுகின்றன!

இவ்வுலகத்தில் எத்தனையோ வகையான மிருகங்கள் காணப்படுகின்றன. அவை எங்கிருந்து வந்தன? அவை உயிரோடிருப்பதற்கு ஆகாரம் வேண்டுமன்றோ? அஃது அவைகளுக்கு எவ்வாறு கிடைக்கிறது? உலகத்தில் எத்தனையோ கோடி மனிதர்கள் இருக்கின்றனரே! அவர்கள் அனைவருக்கும் உணவும் உடையும் எவ்வாறு கிடைக்கின்றன?

உலகத்திற்கு வெளிச்சம் கொடுப்பது சூரியன் அன்றோ? அந்தச் சூரியன் எப்படி உண்டாயிற்று? இராக்காலத்தில் சந்திரன் ஒளியைத் தருகின்றது; எண்ணிறந்த நக்ஷத்திரங்களும் பல்லாயிரம் விளக்குகளைப்போல் ஆகாயத்தில் விளங்குகின்றனவே! அன்றியும், அவை நீல நிறமான விண்ணில், நீல நிறப் பட்டில் வயிரக்கற்கள் பதித்தாற்போலக் காணப்படுகின்றன அல்லவா? மேலும், அவை காலம் தவறுமல் தத்தமக்குரிய இடங்களில் தோன்றுகின்றன; உரிய காலத்தில் மறைகின்றன. அவைகளை அவ்வாறு செய்விப்பவர் யார்?

இவற்றை எல்லாம் நாம் நன்கு ஆராய்ந்து பார்த்தால், இவற்றிற்குக் **காரணகர்த்தர்** ஒருவர் உண்டென்பது தோன்றும். ஒரு பானையை நாம் பார்த்தால், அதை வனைந்த குயவன் உண்டென்பதை நிச்சயிக்கிறோம். அதுபோல இவ்வுலகத்தையும் அதில் உள்ள பொருள்களையும் நாம் ஊன்றி நோக்குவோமாயின், இவற்றை **ஆக்கிய ஒருவர்** இருக்கவேண்டும் எனத் துணிவு கொள்கிறோம் அல்லவா? **அவரே கடவுள்.** அவர் உலகத்தையும் அதிலுள்ள பொருள்களையும் படைத்துக் காத்து அழிக்கும் **வல்லமை** உடையவர். அவரே எல்லாப் பொருள்களுக்கும் தலைவர். மனிதராகிய நாம் சிற்றறிவு உடையவர்கள். நம்மால் மேற்கூறியவைகளில் ஒன்றையும் உண்டாக்க முடியாது. ஆகையால், நாம் அவரைக் கடவுள் என்கிறோம். பேரறிவுடையார் அவர் ஒருவரே. கடவுள் என்னும் பதத்திற்கு மனம், மொழி, மெய்களைக் '**கடந்து நிற்பவர்**' என்பது பொருள்.

"கடவுள் யார்? அவர் எங்கே இருக்கிறார்? அவரைப் பார்த்தவர்கள் யாராவது உண்டா?" என்று இங்ஙனம் சில கேள்விகளைச் சிலர் கேட்கலாம். உலகத்தையும் அதிலுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்துக் காக்கும் பரம்பொருளே கடவுள். அவர் உலகில் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து இருக்கின்றார். அவர் இல்லாத இடமில்லை. அவருக்கு உருவம் கிடையாது. ஆகையால், நாம் அவரை நம் கண்களால் பார்த்தல் முடியாது. ஆயினும், கடவுள் சிறந்த அன்பர்களிடத்தில் அருள் கொண்டு சிற்சில உருவங்களுடன் வெளிப்படுதல் உண்டு. நாம் அவ்வுருவங்களைக் கொண்டே, கண்களால் காணமுடியாத கடவுளை வழிபடுகிறோம்.

கடவுள் ஒருவரே; உலகத்தில் சமயங்கள் பல; பல மதத்தினரும் ஒரே பரம்பொருளை வெவ்வேறு பெயர்களால் துதிக்கின்றனர். ஆகையால், கடவுள் ஒருவர் உண்டென்பதில் ஐயமில்லை. அவர் எங்கும் இருப்பவர்; ஆதலால் அவரைச் '**சர்வ வியாபகர்**' என்கிறோம்.

"கடவுள் எப்பொழுது பிறந்தார்? எப்பொழுது இறப்பார்?" என்று நீங்கள் கேட்கலாம். அவர் ஒரு காலத்தில் தோன்றியவர் அல்லர்; என்றும் உள்ளவர்; எக்காலத்திலும் அழியாதவர். ஆகையால் அவருக்குப் பிறப்புமில்லை; இறப்புமில்லை. அவர் எல்லாம் அறிந்தவர். நாம் மறைவாகச் செய்யும் எந்தச் செயலையும் அவர் அறிவார். உலகத்தில் எந்த இடத்திலும் எக்காலத்திலும் நடைபெறும் செயல்களில் அவர் அறியாதது ஒன்றுமில்லை. ஆகையால், அவரை, '**முற்றும் உணர்ந்தவர்**' என்பார்கள். அவர் எல்லாக் காரியங்களையும் செய்ய வல்லவர். அவரால் செய்யலாகாத செயல் எதுவுமில்லை. ஆகையால், அவரை '**எல்லாம் வல்லவர்**' என்கிறோம்.

கடவுள் மிக்க அருள் உடையவர். அவரது அருளினால் உலகம் நடைபெற்று வருகிறது. நாம் வாழ்வதற்கு இடமாகிய

இவ்வுலகையும், நமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை யும், நமது உடலையும், அதிலுள்ள கருவிகளையும் படைத்தவர் கடவுள். ஆகையால், நாம் அவரை மறவாமல் உள்ளன்போடு வாழ்த்தி வணங்கவேண்டும். கடவுள் தீயவர்களை வெறுப் பார்; நல்லவர்களை விரும்புவார். ஆதலின், நாம் நற்செயல் களைச் செய்து நல்லவர்களாக ஒழுகவேண்டும். அவ்வாறு செய்வோமானல், அவர் நமக்கு என்றும் அழியாத பேரின் பத்தைத் தருவார். பிள்ளைகளே! நீங்கள் நாள்தோறும் கடவுளை அன்போடு நினைத்து வழிபடுங்கள்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."

1. அரும்பத விளக்கம்

உற்று நோக்குதல் - ஊன்றிப் பார்த்தல்; விண் - ஆகாயம்; உரிய காலம் - குறிப்பிட்ட நேரம்; வனைந்த - செய்த; துணிவு - நிச்சயம் (தைரியம்); பரம்பொருள் - மேலானபொருள், கடவுள்; கடந்து நிற்பவர் - தாண்டி நிற்பவர், அப்பால் நிற்பவர், எட்டாத வர்; சர்வ வியாபகர் - எங்கும் நிறைந்தவர்; அருள் - கருணை; காரண கர்த்தர் - காரணமாக இருந்து படைப்பவர், முதற் கடவுள்; எண்ணிறந்த - கணக்கில்லாத. (எண் + இறந்த= எண்ணிறந்த.)

2. கேள்விகள்

1. கடவுள் என்னும் பதத்திற்கு என்ன பொருள்?
2. கடவுள் யார்? அவர் எங்கே இருக்கிறார்?
3. கடவுள் யாரை வெறுப்பார்? யாரை விரும்புவார்? ஆகை யால், நாம் எவ்வாறு ஒழுகவேண்டும்?
4. நக்ஷத்திரங்களின் காட்சி ஆகாயத்தில் எவ்வாறு தோன்றுகிறது?

3. இலக்கணம்

I. நீங்கள் பிழையின்றி எழுதத் தெரிந்துகொள்ளத் தக்கவை :—

(1) அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு } இவற்றின் முன் க, ச, த, ப என்பவற்றை முதலிலே உடைய சொற்கள் வரின், அந்தக் க, ச, த, ப மிகும்.

(உ-ம்.) அந்த + பையன் = அந்தப் பையன்.
அங்கு + பார் = அங்குப் பார்.

(2) இரண்டாம் வேற்றுமை உருபுக்கு (ஐ-க்கு) முன் வரும் க, ச, த, ப மிகும்.

(உ-ம்.) அவனை + கண்டேன் = அவனைக் கண்டேன்.
பசுவை + பார் = பசுவைப் பார்.

(3) நான்காம் வேற்றுமை உருபுக்கு (கு-வுக்கு) முன் வரும் க, ச, த, ப மிகும்.

(உ-ம்.) அவனுக்கு + கொடு = அவனுக்குக் கொடு.

(4) ஆக, ஆகி, ஆய், வித, பற்றி, எல்லா, வகை-இவற்றின் முன் வரும் க, ச, த, ப மிகும்.

(உ-ம்.) நல்லவனாக + போனான் = நல்லவனாகப் போனான்.
நல்லவனாகி + போனான் = நல்லவனாகிப் போனான்.
நல்லவனாய் + போனான் = நல்லவனாய்ப் போனான்.
பலவித + பொருள்கள் = பலவிதப் பொருள்கள்.
அதைப்பற்றி + பேசு = அதைப்பற்றிப் பேசு.
எல்லா + பிள்ளைகள் = எல்லாப் பிள்ளைகளும்.
பலவகை + புத்தகங்கள் = பலவகைப் புத்தகங்கள்.

II. (1) வாக்கியம் :—'முருகன் பாடம் படித்தான்' என்பது போலக் கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர் (சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து நிற்றல்) வாக்கியம் எனப்படும்.

(2) எச்சச் சொற்றொடர்:— 'முருகன் பாடம் படித்து', 'முருகன் பாடம் படிக்க', 'பாடம் படித்த முருகன்' என்பன போலக் கருத்து முடியாமல் (எச்சமாய்) வரும் சொற்றொடர்கள் எச்சச் சொற்றொடர் ஆகும்.

III. நிறுத்துக் குறிகள்:—இவை, படிக்கும்பொழுதும் எழுதும் பொழுதும் கவனிக்க வேண்டுபவை. கருத்து விளங்க வாசிப்பதற்கு இவை அவசியமானவை.

(1) **,** இது **காற்புள்ளி**. ஆங்கிலத்தில் **'காமா'** எனப்படும். இது பெரிய வாக்கியங்களில் பொருள் விளங்கும் பொருட்டு வினையெச்சத்தை அடுத்து இடப்படுவது; சில இடங்களில் எழுவாயை அடுத்தும் வரும்.

(2) **.** இது **முற்றுப்புள்ளி**. ஆங்கிலத்தில் **'புல்ஸ்டாப்'** எனப்படும். வினைமுடிபுள்ள வாக்கிய முடிவில் இது இடத்தக்கது.

(3) **!** இது **வியப்புக்குறி**; ஆங்கிலத்தில் **'எக்ஸ்கிளமேஷன்'** எனப்படும். வியப்பு, வருத்தம், ஏமாற்றம், பரிதாபம் முதலியன வருமிடங்களில் இடத்தக்கது. விளிக்கப்படும் இடத்திலும் இதனை இடுதல் உண்டு.

(4) **?** இது **கேள்விக்குறி**; ஆங்கிலத்தில் **'இன்டராகேஷன்'** எனப்படும். இது வினாப்பொருளைத் தரும் வாக்கியங்களின் இறுதியில் அமைக்கத்தக்கது.

(5) "........" இவை **மேற்கோள் குறிகள்**; ஆங்கிலத்தில் **'கொடேஷன்'** எனப்படும்; பிறர் சொல்லியவற்றை நேர்கூற்றாகத் தெரிவிக்கும் இடங்களில் முதலிலும் ஈற்றிலும் இடத்தக்கவை; இவற்றுள் முன்னுள்ளதைத் தொடங்கும் இடத்திலும் பின்னுள்ளதை முடிக்கும் இடத்திலும் இடவேண்டும்.

பயிற்சி

1. தக்க இடங்களில் தக்க நிறுத்துக் குறிகளை இடு :—
   (1) அடடா அவனை ஏன் அடித்தாய்
   (2) என்ன அவனா இவன்
   (3) ஐயோ பாவம் அவன் விழுந்துவிட்டான்
   (4) நான் கடைக்குப் போனேன் ஆறணா கொடுத்தேன் புத்தகம் வாங்கினேன்
2. முற்றுச் சொற்றொடர்கள் எவை? எச்சச் சொற்றொடர்கள் எவை?
   (1) அவன் வந்தான்
   (2) அவன் வந்து போய்
   (3) அவள் அங்கிருந்து குதித்து
   (4) நான் அவனைக் கண்டேன்
   (5) அவன் என்னைப் பார்த்ததும்
   (6) நான் அவற்றைப் பார்க்க

2. எனது உல்லாசப் பிரயாணம்

[மஹாபலிபுரம்]

சென்ற சனிக்கிழமை காலை வண்டியில் நானும் என் ஆசிரியரும், என் வகுப்புப் பிள்ளைகளும் சென்னையைவிட்டுப் புறப்பட்டோம்; பல்லவ அரசர்கள் காலத்தில் சிறந்த துறை முகப் பட்டினமாக விளக்கம் பெற்றிருந்த மஹாபலிபுரத்தை அடைந்தோம். மஹாபலிபுரம் சென்னைக்குத் தெற்கே சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள கடற்கரைப் பட்டினம். அது **மாமல்லபுரம்** என்று வழங்கப்பட்டதாம். கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட 'மாமல்லன்' என்னும் **பல்லவ அரசனுல்** அந்நகரம் 'மாமல்லபுரம்' எனப் பெயர் பெற்றது. தொண்டை நாட்டு வைணவத் தலங்களுள் அஃது ஒன்றாகக் கருதப்பட்டது. திருமங்கை ஆழ்வார் அதனைத் 'திருக்கடன் மல்லை' எனக் கூறியுள்ளார். இந்நகரத்தின் பெரும்பாகம் கடலுக்கு இரையாகி விட்டது. எஞ்சியுள்ள பகுதியில் உள்ள அற்புதங்களைக் காணவே மக்கள் போய் வருகின்றனர்.

மஹாபலிபுரத்தில் 'பாண்டவர் இரதங்கள்' என்னும் பெயருடைய ஐந்து கற்கோயில்கள் இருக்கின்றன. அவற்றின் ஒரு பகுதி **மஹேந்திர வர்மன்** என்னும் பல்லவ அரசனாலும், மேற்பகுதி அவன் மகனான **நரசிம்ம வர்மனாலும்** குடையப்பட்டன. இவை தனித்தனியே கற்பாறைகளில் குடைந்து சீரிய சிற்பங்களுடன் அமைக்கப்பட்டுள்ள ஒரே கல்லால் ஆன கோயில்கள் ஆகும். இவற்றுள் மிகப் பெரியது தர்மராஜரதம். இது மூன்று வாயில்நிலைகளை உடைய மூன்று அடுக்குக் கோவிலாய்ச் சித்திர வேலைப்பாடுகளுடன் மிளிர்கின்றது. இரண்டாம் அடுக்கின் நடுவில் கர்ப்பக்கிருகம் மாடம்போலச் சிறியதாக வெட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடியில்

சோமஸ்கந்த விக்கிரகம்செதுக்கப்பட்டுள்ளது.இந்தஇரதத்தை அடுத்துப் பீமன் இரதம் முன்னும் பின்னுமாக மண்டபங்கள் குடைந்து நிருமிக்கப்பட்டுள்ளன. அர்ச்சுனன் இரதத்திற்கும் திரௌபதி இரதத்திற்குமாகச் சேர்ந்து ஒரு முன் மண்டபமும் யானை விக்ரகமும், சிங்கச் சிலையும் மாறி மாறி இருக்கின்றன. திரௌபதி இரதம் என்பது துர்க்கையின் கோவிலே ஆகும்.



மஹாபலிபுரத்துக் கல் இரதங்கள்

இது கூரை வீட்டைப் போலக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. நகுல சகாதேவர் இரதங்கள் அரைகுறையாகக் காணப்படு கின்றன. இவ்விரதங்களில் காணப்படும் சிற்பவேலை பெரு வியப்பையும் திகைப்பையும் உண்டாக்குகிறது.

திரௌபதி இரதத்தின் முன்புறம் ஒரே கல்லில் செதுக் கப்பட்ட யானையின் உருவச்சிலை ஒன்றுண்டு. இதனை அடுத்

துப் **பகீரதன்** தவத்தைக் குறிக்கும் சிற்பம் இருக்கிறது. அச் சிற்பம் சுமார் 29 கெஜம் நீளமும் 10 கெஜம் உயரமும் உடையது. அதில் மனிதர், தேவர், மிருகங்கள் தம் உருவங்கள் நூற்றைம்பதுக்கு அதிகமாக உள்ளன. இரண்டு பக்கங்களிலும் பெரிய பாறைகளால் அடைக்கப்பட்டு, அவற்றின் நடுவே தோன்றும் ஒரு பெரும் பிளவும், அப்பிளவில் நாகர், நாக கன்னியர் சிலைகள் காணப்படலுமே அதன் சிறந்த பாகமாகும். அப்பிளவு இயல்பாகவே மழைநீர் பாயும் அருவியின் வழியாகும். அது, கங்கை தேவலோகத்திலிருந்து இறங்குவதைக் குறிப்பதாகும். மழைக்காலத்தில் அதன் வழியாகப் பெய்யும் மழை நீரும் அப்பாறையின்மீது தங்கும் மேகமும் மின்னல் ஒளியும் கங்கை வந்த வேகத்தால் ஏற்பட்டனபோல் இயல்பாகவே அவ்வரலாற்றைச் சிறப்பித்துக் காட்டுகின்றன. பிளவுக்கு வடபுறத்தில் ஒரு யானை, அப்பிளவுக்கு நேராகத் தன் துதிக்கையை நீட்டிக்கொண்டு இருப்பது போலவும், அதன் பின்புறம் மற்றொரு யானை நிற்பது போலவும் அமைத்துள்ள சிற்பியின் கற்பனைத் திறம் வியந்து பாராட்டத் தக்கது.

அதன் தெற்கில் ஓர் இடத்தில் **கண்ணன்** கோவர்த்தன கிரியைக் குடையாக ஏந்திக் கோக்களையும், கோபாலரையும் காப்பதுபோலச் சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. பலவித ஆயுதங்களை ஏந்திய எட்டுக் கரங்களுடன் **துர்க்காதேவி**, சிங்கத்தின் மீது ஏறி, மகிஷாசுரனை வதம் செய்வதுபோல ஆக்கப்பட்டுள்ள அரிய சிற்பம் கண்டு களிக்கத் தக்கது. அதற்கு எதிரில் திருமாலின் சேஷசயனம் மிக்க வேலைப்பாடு அமைந்ததாகக் காணப்படுகிறது. பூமகளை அணைத்துக்கொண்டு, பாம்பின் தலையில் நின்றபடி தேவரது துதியைக் கேட்டவண்ணம் நிற்கும் திருமாலின் ஆதிவராக அவதாரச் சிற்பமும், மாவலியிடம் வாமனராய் வந்து மூன்றடி மண் வேண்டி மூவுலகம் அளந்த வாமன அவதாரச் சிற்பமும் கண்ணையும் கருத்தையும்

ஈர்ப்பனவாகும். இங்ஙனம் அழகொழுக அமைந்துள்ள சிற்பங்கள் பல.

ஆதிவராக மூர்த்தியின் கோவில் மிகப் பழைமையானது; திருமங்கை ஆழ்வாரால் பாடப்பெற்றது. பூதத்தாழ்வார் இப்பதியிலேதான் அவதரித்தார். கடற்கரையில் விஷ்ணுகோவில் ஒன்று இருக்கின்றது. அதன் பின்புறம் அலைகள் அடித்த வண்ணம் இருக்கின்றன.

மஹாபலிபுர வருணனை சொல்லும் தரத்ததன்று. நேரில் கண்டு களிக்கத்தக்க அவ்வழகிய காட்சிகளை ஏடுகளில் எழுதுதல் இயலாத காரியம். கண்ணுடையோர் கண்டு களிப்பாராக. நம் முன்னோர் சிற்பத் திறமையையும், மலையைக் குடைந்து ஆலயமாக்கும் பேராற்றலையும் கண்ணுற் கண்டு களிக்க மஹாபலிபுரமே சிறந்த க்ஷேத்திரமாகும்.

1. அரும்பத விளக்கம்

வைணவத் தலம் - பெருமாள் கோவில் உள்ள ஊர்; மிளிர்கின்றது - விளங்குகின்றது; கர்ப்பக்கிருகம் - மூலஸ்தானம்; நிருமிக்கப்பட்டு - செய்யப்பட்டு; துர்க்கை - காளி; திகைப்பு - பிரமிப்பு; சிற்பம் - உருவம்; சிற்பி - கல்லில் சித்திரம் அமைப்பவன்; கிரி - மலை; வதம் - சொல்லுதல்; சேஷசயனம் - பாம்புப் படுக்கை; வாமனர் - குள்ளர்; ஈர்ப்பன - இழுப்பன.

2. கேள்விகள்

1. மஹாபலிபுரம்—இதன் வேறு பெயர்கள் எவை?
2. பாண்டவர் இரதங்களை வெட்டுவித்தவர் யார்?
3. அவற்றைப்பற்றி நீ யாது அறிவாய்?
4. பகீரதன் தவத்தைக் குறிக்கும் சிற்ப வேலைப்பாட்டை விளக்கு.
5. திருமாலின் எந்த அவதாரங்கள் எப்படி விளக்கப்பட்டுள்ளன?

6. திருமங்கை ஆழ்வார், பூதத்தாழ்வார்—இவர்கள் கூறப் பட்ட சந்தர்ப்பம் என்ன ?

7. மஹாபலிபுரம் அளிக்கும் காட்சி யாது ?

3. இலக்கணம்

1. **சொல் :**—ஓர் எழுத்துத் தனித்தேனும் இரண்டு முதலிய சொற்கள் தொடர்ந்தேனும் ஒரு பொருளைத் தெரிவிப்பது **சொல்** அல்லது **பதம்** எனப்படும்.

(உ-ம்.) ஆ (பசு) — ஓர் எழுத்துச் சொல்.
ஆடு — ஈரெழுத்துச் சொல்.
அம்மி — மூவெழுத்துச் சொல்.
கடகம் — நாலெழுத்துச் சொல்.
கங்கணம் — ஐந்தெழுத்துச் சொல்.

2. **சொற்கள் :**—(1) பெயர்ச்சொல், (2) வினைச்சொல், (3) இடைச்சொல், (4) உரிச்சொல் என **நான்கு வகைப்படும்.**

(உ-ம்.) (1) முருகன்—**பெயர்ச்சொல்** (பெயரைக் குறிப்பது).
(2) வந்தான், வந்து, வந்த—**வினைச்சொல்** (வினையைக் குறிப்பது).
(3) இனி, மற்று, (அவ) னை—**இடைச்சொல்** (சொற்களின் இடையில் வருவது).
(4) சால, உறு, தவ, நனி—**உரிச்சொல்** (பெயர், வினைகளின் குணத்தை உணர்த்துவது).

பயிற்சி

1. கந்தன் வந்தான், வள்ளி போனாள், இனி வருக, சாலப் பேசினான், நனி தின்றாள், உறு புகழ், கண்ணன் கழுதை, வால் நீளம் — இவற்றில் உள்ள பெயர், வினை, இடை, உரிச்சொற்களைக் கூறு.

2. இப்பாடத்தின் முதல் பிரி (பாரா)வில் உள்ள நால் வகைப் பெயர்களைச் சொல். (இவ்வாறு கட்டம் அமைத்து எழுது.)

வாக்கிய எண்	பெயர்ச்சொல்	வினைச்சொல்	இடைச்சொல்	உரிச்சொல்
1.				
2.				
3.				
4.				
5.				
6.				

3. முதல் பிரிவில் உள்ள ஒன்று முதல் ஐந்து எழுத்துக்கள் வரை உள்ள சொற்களை எடுத்து எழுது :—

வாக்கிய எண்	ஓர் எழுத்துச் சொற்கள்	ஈர் எழுத்துச் சொற்கள்	மூவெழுத்துச் சொற்கள்	நான்கு எழுத்துச் சொற்கள்	ஐந்து எழுத்துச் சொற்கள்
1.					
2.					
3.					
4.					
5.					
6.					

4. மஹாபலிபுரத்தைப் பற்றி 20 வரிகளில் வியாசம் (கட்டுரை) எழுது.

5. பாண்டவர் இரதங்கள் - பகீரதன் தவம் - விஷ்ணு ஆலயங்கள் - மஹாபலிபுரச் சிறப்பு: இக் குறிப்புகளைக் கொண்டு இப்பாடப் பொருளை நான்கு பிரிவுகளில் கட்டுரையாக எழுது.

3. கம்பர்

கம்பர் சோழநாட்டில் மாயூரத்திற்கு அடுத்த திருவழுந்தூரில் பிறந்தவர். இவர் பெற்றோர் இன்னவர் எனத் திட்டமாகக் கூறக்கூடவில்லை. இவர் திருவழுந்தூரில் உள்ள காளி கோயிற் பூசாரியால் வளர்க்கப்பட்டவர் என்று பிற்காலத்தார் எழுதி வைத்துள்ளனர். இவர் காளி வரம் பெற்று இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர் என்பதும் கூறப்படுகிறது.

"இவர் காளிங்கராயனது குதிரையைச் சாகவும், பிழைக்கவும் பாடினார்; (1) கம்பங் கொல்லையைக் காவல் செய்தமையால் 'கம்பன்' எனப் பெயர் பெற்றார்; (2) அரசனைக் கண்டு அஞ்சி நின்றபோது அரசன், 'இக் கம்பனே (கம்பம்போல நிற்பவன்) குதிரை சாவப் பாடியவன்!' என்றதிலிருந்து 'கம்பன்' எனப்பட்டார்; (2) 'கம்பநாடு' என்பது சோழநாட்டின் ஒரு பகுதி; அங்குப் பிறந்ததால் இவர் 'கம்ப நாடர்' என்னும் பெயர் பெற்றார்" என்று கூறப்படும் செய்திகள் யாவும் பிற்காலத்தார் கூற்றுகளாம். இவை எவ்வளவு உண்மையானவை என்பதைக் கூறல் இயலாது.

கம்பர் வாழ்ந்த காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு ஆகும்; அஃதாவது இரண்டாம் குலோத்துங்க சோழனது காலமாகும். அக்காலத்தில் தொண்டை மண்டலம் சோழரது ஆட்சியில் இருந்தது. எனவே, தென்னார்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த திருவெண்ணெய் நல்லூர் என்பது சோழநாட்டைச் சேர்ந்து இருந்தது. அப்பதியில் பெருநிலக் கிழவராக விளங்கியவர் **சடையப்ப வள்ளல்** என்பவர். சடையப்பர் வரையாத வள்ளன்மை உடையவர்; உயர்குணங்களுக்கு இருப்பிடம் ஆனவர். அப்பெரியார் கம்பரை ஆதரித்து வளர்த்திருத்தல்

கம்பர்

வேண்டும் என்பது கம்பர் பாடியுள்ள இராமாயணத்தில் உள்ள குறிப்புக்களால் உணரப்படுகிறது. கம்பர் பல இடங்களில் அவ் வள்ளலது அறச் செயலை உவமை வாயிலாகக் கூறியுள்ளார். தமக்கு வள்ளல் செய்த பேருபகாரத்திற்குப் பதிலாகவே கம்பர் அவர் பெயரைப் பல இடங்களில் குறிப்பிட்டு அழியாத புகழுக்கு அவரைப் பாத்திரர் ஆக்கினர். சடையப்ப வள்ளலிடம் இருந்தபோதோ, அவரை அடைவதற்கு முன்போ கம்பர் இலக்கண-இலக்கியங்களைக் குறைவறக் கற்றவராதல் வேண்டும்.

கம்பரது கவித்திறனைக் கண்டு அனுபவித்த சடையப்ப வள்ளல், அவரைக் குலோத்துங்க சோழனுக்கு அறிமுகப்படுத்தி, சமஸ்தானப் புலவராக்கி இருத்தல் வேண்டும். சடையப்பர் தூண்டுகோலாலும் அரசன் ஊக்கத்தாலும் கம்பர், இராமாயணத்தை மிகப் பெரியதோர் காவியமாகப் பாடி இருத்தல் வேண்டும். கம்பர் வடநூலாகிய வான்மீகி இராமாயணத்தை உள்ளத்திற் கொண்டு, தாம் பாடுங் காலத்தையும் தமிழ்நாட்டு நிலைமையையும் தமிழர் பழக்க வழக்கங்களையும் மனத்திற் பதித்தவராய், வான்மீகி இராமாயணத்தைப் பல இடங்களில் தழுவியும், சில இடங்களில் மாற்றியும், தமிழர் மனப்போக்குக்கு இசையப் பாடியுள்ளார்.

கம்பர் பாடிய இராமாயணம் கம்ப ராமாயணம் எனப் பெயர் பெற்றது. அவர் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை 10,500 செய்யுட்களில் வளம்பெறப் பாடியுள்ளார். அவர் பாடிய பெருநூல், அக்காலத்துப் பெரும் புலவரால் பாராட்டப்பட்டிராவிடின், அஃது இந்நாட்டில் இன்று இடம் பெற்றிராது என்பதில் ஐயமே இல்லை. ஆதலின், கம்பராமாயணம் அக்காலப் புலவரால் போற்றப்பட்டதாகும். அஃது இக் காலப் புலவ

ராலும்—ஏன்? எக்காலப் புலவராலும் போற்றப்படும் என்பதில் ஐயம் இல்லை.

ஆங்கிலத்தில் பெயர் பெற்றவர் **ஷேக்ஸ்பியர்**; வடமொழியிற் பெயர் பெற்றவர் **காளிதாஸர்**; தமிழிற் புகழ் பெற்றவர் **கம்பர்**. 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்', 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்று நாட்டில் வழங்கிவரும் கூற்றுகள், கம்பருடைய கல்விப் பெருக்கையும், கவித் திறனையும் வெள்ளிடை மலைபோல விளக்குவனவாகும். கம்பர் உலகியல் அறிவையும் நூல் அறிவையும் நன்கு பெற்றவர். ஆதலின், அவர் பாடல்கள் எக்காலத்தும் பொருத்தமுடையனவாக அறிஞரால் பாராட்டப்படுகின்றன.

இத்தகைய பெருங்காவியத்தைச் செய்துதவிய கம்பர் பெருமானைத் தமிழராகிய நாம் மறத்தல் இயலுமோ? நீங்கள் பெரியவர்கள் ஆன பிறகு, அவரது அரிய நூலைப் படித்துத் தமிழ் அருமையையும், பாட்டு நயத்தையும், காவியச் சிறப்பையும் அனுபவித்தல் உங்கள் பெருங்கடனாகும்.

1. அரும்பத விளக்கம்

மாயூரம் - மயில் பூசித்த இடம் (மாயவரம் எனப்படும் ஊர்); கூற்றுகள் - சொல்பவை; தொண்டை மண்டலம் - சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய ஜில்லாக்கள் அடங்கிய நிலப்பகுதி; பெருநிலக் கிழவர் - ஜமீந்தார்; வள்ளல் - தரும குணத்தவர்; கோடல் - கொள்ளுதல்; மரபு - வழக்கம்; வரையாத - அளவற்ற; வள்ளன்மை - கொடுத்தல்; இலக்கியம் - செய்யுள் நூல்கள்; திறன் - சக்தி; காவியம் - ஒருவனது வாழ்க்கை வரலாற்றை விளக்கிக் கூறும் பெரிய நூல்; இசைய - பொருந்த; காண்டம் - நூலில் உள்ள பெரும் பிரிவு; வெள்ளிடை மலைபோல் - சமவெளியில் இருக்கும் மலை தெளிவாகக் காணப்படுவதுபோல.

2. கேள்விகள்

1. 'கம்பர்'—இப்பெயர் எக்காரணங்களால் வந்தது என்பர்?
2. சடையப்ப வள்ளல்—குறிப்பு எழுது.
3. கம்பராமாயணம்—யார் பாடியது? இதன் சிறப்பு யாது?
4. கம்பராமாயணத்திற்கும் வள்ளலுக்கும் உள்ள சம்பந்தம் என்ன?
5. கம்பரைப் பற்றிய பழமொழிகள் எவை?
6. ஆங்கிலம், வடமொழி, தமிழ்—இம்மொழிகளில் சிறந்த புலவர் யாவர்?

3. இலக்கணம்

1. வடசொல் :—தமிழில், சம்ஸ்கிருதச் சொற்களும் வந்து வழங்குகின்றன. அவை வடநாட்டில் வழங்கியதால் 'வடசொல்' எனப்படும்.

(உ-ம்.) ஹாரம், கமலம், காரணம், சந்தோஷம், ராஜா, ஹநுமான், ஸ்ரீதரன், புஷ்பம்.

குறிப்பு :—ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ இவை சம்ஸ்கிருத எழுத்துகள்.

2. திசைச்சொல் :—தமிழ் நாட்டிற்கு வெளியே உள்ள (வடமொழி அல்லாத) பிறமொழிச் சொற்கள் தமிழில் வழங்குகின்றன. அவை திசைச்சொற்கள் (பல திசைகளில் உள்ள நாடுகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள்) எனப்படும்.

(1) கிராம்பு, ஜன்னல், சாவி, அலமாரி—போர்ச்சுகீஸியச் சொற்கள்.

(2) ஜமீன், சுமார், மேஜை, ரஸ்தா—பாரசீகச் சொற்கள்.

(3) ஆசாமி, இலாகா, வசூல், முன்சீப், மாமூல்—அரேபியச் சொற்கள்.

(4) அல்வா, கிச்சடி, ஆஜர், தர்பார், தபால், ஜாப்தா, மசாலா, ஜோடு, சோதா, டாணு—இந்துஸ்தானிச் சொற்கள்.

(5) ஹார்பர், பேனு, பென்ஸில்—ஆங்கிலச் சொற்கள்.

பயிற்சி

1. இப்பாடத்தில் உள்ள வடசொற்களை எடுத்து எழுது.
2. இப்பாடத்தில் வரும் திசைச்சொற்களைச் சொல்லு.
3. முதல் பிரிவில் உள்ள மூன்று-நான்கு எழுத்துச் சொற்களைக் கூறு.
4. இரண்டாம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
5. மூன்றும் பிரிவில் உள்ள பெயர், வினை, இடை, உரிச் சொற்களை எழுது.
6. இப்பாடத்தைக் கம்பரே கூறுவது போலக் கூறு.
7. இதனைச் சடையப்பர் கூறுதல் போலக் கூறு.
8. இதனைச் சோழ மன்னன் கூறுதல் போலக் கூறு.
9. கம்பர் இளமை - வள்ளல் நட்பு - இராமாயணம் பாடுதல் - அதன் சிறப்பு: இவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு, இப்பாடத்தின் பொருளை நான்கு பிரிவுகளில் கட்டுரையாக எழுது.
10. ஒவ்வொரு பிரிவிற்கும் அதன் கருத்து அமையப் பொருத்தமான தலைப்புக் கொடு.
11. இப்பாடத்தை மௌனமாகப் படித்துக் குறிப்புகள் எடு.
12. 'கம்ப ராமாயணம்' என்பது பற்றி 10 வரிகள் எழுது.

4. கூட்டுறவு இயக்கம்

மக்கள் இயக்கத்தை எவ்வளவு பயன்படுத்துகிறார்களோ, அதற்கேற்ற முறையில் இலாபத்தை அடைவது என்னும் நிபந்தனைமீது கூட்டுறவு வியாபாரம் செய்வதற்கு எளியவர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்தலே **கூட்டுறவு இயக்கம்** எனப்படும். விவசாயிகட்கும் கைத்தொழிலாளர்க்கும் சிறிது வருவாய் உடையவர்க்கும் சிக்கனத்தையும் சுயமுயற்சியையும் விருத்தியாக்க இந்த இயக்கம் இன்றியமையாதது. இங்கிலாந்து, ஜெர்மனி, டென்மார்க், ஹாலண்ட் முதலிய மேனாடுகளில் இவ்வியக்கங்கள் உண்டாகி, மக்களை மேல்நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

மனிதர் பலர் ஒன்றுசேர்ந்து சிறிது தொகை முதல் போடுதல் வேண்டும்; அம்முதலைக் கொண்டு வியாபாரம் நடத்தல் வேண்டும்; உறுப்பினர் தமக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் தம்மால் ஏற்படுத்தப்பட்ட கடையிலேயே வாங்குதல் வேண்டும்; ஆண்டு முடிவில் உண்டாகும் இலாபத்தில் செலவைக் கழித்து, மீதியில் முதல் தொகைக்குரிய வட்டியையும் கழித்து, எஞ்சிய தொகையைக் கடையில் பொருள்களை வாங்கிய உறுப்பினர்க்கு அவர்கள் வாங்கிய பொருள்களின் மொத்த விலைக்குத் தக்கவாறு பங்குபோட்டுக் கொடுத்தல் வேண்டும். இதுவே கூட்டுறவு இயக்கத்தின் சிறந்த **இரகசியம்** ஆகும்.

இச்சிறந்த முறையால் எளியவர் தம் பொருளாதார நிலையை மேம்படுத்த வழியுண்டாகிறது. அவர்கள் தாங்கள் ஸ்தாபித்த கடையில் வாங்கும் பொருள்கள் பிற கடைகளில் வாங்கும் பொருள்களைவிடச் சிறந்தவையாகும். ஏனெனில், பெரும்பாலும் கடைக்காரர் இலாபத்தில் கண்ணுங்கருத்துமாக இருப்பார்களே அல்லாமல், சரக்குகளை நல்லவையாக வாங்கிக்

குறைந்த இலாபம் வைத்து விற்பதில்லை. அதிக விலையைத் தந்த போதிலும், பெரும்பான்மை மட்டச் சரக்கையே பெற நேரிடுகிறது. பொருள்களின் நிறையும் அளவும் சரியாக இருப்பதில்லை. கூட்டுறவுக் கடையில் இத்தகைய வேறுபாடுகள் உண்டாக இடமில்லை. அங்கு நல்ல சரக்கைப் பெறலாம்; சரியான நிறையும் அளவும் காணலாம். தகாத முறையில் மிகுந்த இலாபம் பெறவேண்டும் என்னும் நோக்கம் இல்லை. இவையே கூட்டுறவு இயக்கக் கடைகட்கு இருக்கும் **சிறப்புகள்** ஆகும்.

இக்கூட்டுறவு இயக்கக் கடைகள் கவனிக்கவேண்டும் விதிகள் பின்வருவன ஆகும் :—(1) கூட்டுறவு இயக்க உறுப்பினர் அனைவரும் தமது கடையிலேயே வாங்குதல் வேண்டும்; கடை உறுப்பினரையும், உறுப்பினர் கடையையுமே நம்பி இருத்தல் வேண்டும். (2) கடையில் நடைபெறும் வியாபாரம் ரொக்க வியாபாரமாகவே இருத்தல் வேண்டும். கடன் தருவதால் பணம் வசூலாகாமற் போகலாம்;பணம் வெளியில் தங்குவதால் வியாபாரக் குறைவு உண்டாகும்; வரவரப் பணக் கஷ்டம் ஏற்பட்டு, இறுதியில் நஷ்டமே கடைக்கு உண்டாகும். (3)கடைக்கு வேண்டும் சரக்குகளை அவை உண்டாகும் இடங்களிலிருந்தே வரவழைத்தல் வேண்டும். அதனால், பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். பொருள்கள் நன்றாக இருப்பதுடன், குறைந்த இலாபத்திற்கும் விற்கப்படுவதால், இவ்வியக்கத்தில் உறுப்பினர் மிகுதியாகச் சேர்வர்.

ஐரோப்பிய நாடுகளில் **டென்மார்க்** மிகச் சிறிய நாடாகும். அதன் மக்கள் 35 இலக்ஷம்பேர் ஆவர். இக்குறைந்த ஜனத்தொகையுள்ள அச்சிறிய நாடு, கூட்டுறவு இயக்கத்தால் உயர்நிலையை அடைந்து வருகின்றது. ஒரு காலத்தில் அந்நாட்டுச் செல்வ நிலை தாழ்ந்திருந்தது. ஆனால், இன்று டென்மார்க்கின் வரலாறு வியப்புறும் விதமாக அமைந்துள்ளது. ஒருபோது அந்நாட்டிற்கு

அமெரிக்காவிலிருந்து கோதுமை கப்பல் கப்பலாக வந்தது. ஆனால், இன்று அந்நாட்டார் தம் நாட்டிலேயே தமக்கு வேண்டும் தானியங்களை உற்பத்தி செய்கின்றனர். அவர்கள் தமக்குள்ளே கூட்டுறவு இயக்கங்களைத் தாபித்தனர்; விவசாயிகட்கு அரசாங்கம் பொருள் உதவியும் செய்தது; விவசாயிகள் தமக்கு வேண்டிய ஏர், எரு, விதை முதலியவற்றைக் கூட்டுறவுக் கடைகளிலேயே பெற்றனர். கால்நடைகட்கு வேண்டும் தானியங்களை விற்கும் சங்கங்கள், பயிராகும் பொருள்களை விற்கும் சங்கங்கள், பால் பண்ணைகள், கோழிப் பண்ணைகள், ஏழை விவசாயிகட்குப் பொருள் உதவும் சங்கங்கள் என்பன ஏற்பட்டு விட்டன. குடியானவர் பயிர்வேலை இல்லாதபோது பசுக்களின் பாலைக் கறந்து சுகாதார முறைப்படி பச்சை வெண்ணெய் எடுத்துக் கூட்டுறவு முறையில் வியாபாரம் செய்கின்றனர்.

அவர்கள் ஆடு, பன்றி, கோழி இவற்றை வளர்க்கின்றனர்; இவற்றின் இறைச்சியையும், கோழி, வாத்து இவற்றின் முட்டைகளையும் விற்றுப் பணம் சம்பாதிக்கின்றனர். அந்நாட்டுப் பள்ளிகளில் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிய போதனையே சிறந்த இடம் பெற்றுள்ளது. இங்ஙனம் அந்நாட்டார் அனைவரும் கட்டுப்பாடாகக் கூட்டுறவு இயக்கத்தை ஆதரித்து வருதலால் அந்நாடு செழுமையுற்றுத் திகழ்கின்றது.

இந்திய மக்கள் ஒற்றுமையும், செல்வமும் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டுமாயின், நமது நாட்டில் கூட்டுறவு இயக்கங்கள் ஆயிரக்கணக்கில் தோன்றுதல் வேண்டும். அவ்வியக்கங்களாற்றான் நம் நாட்டு ஏழை விவசாயிகள் உயர்நிலையை அடைதல் கூடும்.

1. அரும்பத விளக்கம்

இன்றியமையாதது - அவசியமானது; எஞ்சிய - மிகுந்த; எளியவர் - ஏழைகள்.

2. கேள்விகள்

1. கூட்டுறவு இயக்கம் என்பது யாது?
2. இந்த இயக்கம் எந்த நாடுகளில் இருக்கிறது?
3. இதன் சிறந்த இரகசியம் யாது?
4. கூட்டுறவு இயக்கக் கடைகட்கு உள்ள சிறப்புகள் எவை?
5. இக்கடைகள் கவனிக்க வேண்டும் விதிகள் எவை?
6. டென்மார்க் தேசம் எவ்வாறு முன்னேற்றம் அடைந்தது?
7. நம் விவசாயிகள் டென்மார்க் நாட்டாரைப்போல என்னென்ன செய்தால் முன்னேறலாம்?

3. இலக்கணம்

1. ஆறுவகைப் பெயர்ச்சொற்கள் :—

(1) கண்ணன், தலைவன் —பொருட்பெயர்.
(2) வீடு, ஊர், காடு —இடப்பெயர்.
(3) ஆவணி, நாள், பகல் —காலப்பெயர்.
(4) கண், கிளை, வால் —சினைப்பெயர்.
(5) பசுமை, நன்மை, இன்பம்—குணப்பெயர்.
(6) பார்வை, வரவு, போதல் —தொழிற்பெயர்.

2. எண்ணுப் பெயர்கள் :—

ஒன்று, நூறு, ஆயிரம் முதலிய எண்கள்.
ஒருவர், நூற்றுவர், ஆயிரவர் முதலிய பெயர்கள்.

3. அளவைப் பெயர்கள் :—

கால், அரை, வீசை, முழம், படி, மரக்கால், மைல் முதலியன.

4. முறைப் பெயர்கள் :—

தந்தை, அத்தை, மாமன், மகன் முதலிய பெயர்கள்.

பயிற்சி

1. இப்பாடத்தின் முதல் பிரிவில் வந்துள்ள அறுவகைப் பெயர்களைக் கூறு.

எண்	பொருட் பெயர்	இடப் பெயர்	காலப் பெயர்	சினைப் பெயர்	குணப் பெயர்	தொழிற் பெயர்

2. இரண்டாம் பிரிவில் உள்ள அளவைப் பெயர்களைச் சொல்லு.

3. மூன்றும் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.

4. அப்பிரிவில் உள்ள வடசொல், தமிழ்ச்சொல், திசைச் சொற்களைச் சொல்.

5. ஒவ்வொரு பிரிவையும் படித்து, அதன் கருத்தை விளக்கும் தலைப்புக் கொடு.

6. இப்பாடத்தைக் (1) கூட்டுறவு இயக்கம், (2) அதன் வேலை முறை, (3) அதன் நன்மை, (4) முடிவு: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரையாக எழுது.

5. உலகுக்கு என்ன பயன்?

[பாட்டு]



“என்னால் உலகுக் கென்ன பயனே ?”
என்றொரு சிறுவன் எண்ண மிட்டான் ;
மண்ணைக் கிண்டி மண்ணுள் மறையும்
புழுவைப் பார்த்தான்; பொறுமையோ டப்புழு



கீழ்மண் மேலாக் கிளறுந் தொழிலைக்
கண்டு மகிழ்ந்தான்; கரையான் கூட்டம்
வருவது பார்த்தே மனத்தைச் செலுத்தினான்;
அவைஅணி அணியாய் அழகிய புற்றை



அமைத்துச் செல்லும் அழகைக்கண்டான்;
மலரில் நுழைந்து மதுவைத் திரட்டும்
தேனீ ஒன்றைத் தானே பார்த்தான்;
உச்சி மரத்தில் உயரத் தொங்கும்



பலர்க்குப் பயன்படும் பணியையும் பார்த்தான்;
கூட்டினுள் தேனைக் கூட்டும் அழகையும்
எவ்வழி யாலும் எல்லா வுயிரும்
உலகிற் குழைக்கும் உண்மை உணர்ந்தான்;

“ மனிதப் பிறப்பு வாய்க்கப் பெற்ற
யானும்இங் ஙனமே என்னுல் இயன்ற
பணிகளைத் தகுந்த படிசெய் துலகிற்(கு)
உழைப்பவ னுகி உயர்வு பெறுவேன்;
எனக்கே உதவ இனிநான் வாழேன்;
பிறர்க்குப் பயன்படப் பெரிதும் முயல்வேன், ”
எனமனந் துணிந்தே இனிதுசென் றனனே.

1. அருஞ்பத விளக்கம்

அணி அணியாய் - வரிசை வரிசையாய்; அணி - வரிசை, அழகு, ஆபரணம்; மது - தேன்; திரட்டும் - சேர்க்கும்; பணி - வேலை, தொண்டு.

2. கேள்விகள்

1. சிறுவன் பார்த்த பொருள்கள் யாவை?
2. அவை ஒவ்வொன்றும் என்னென்ன வேலைகள் செய்து கொண்டிருந்தன?
3. அவற்றைக் கண்ட சிறுவன் தன்னுடைய கடமையைப் பற்றி என்ன முடிவு செய்துகொண்டான்?

3. இலக்கணம்

மூவிடப் பெயர்கள்:

தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற இவ்விடங்களைச் சேர்ந்த பெயர்கள் முறையே தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் எனப்படும்.

(உ-ம்.)	ஒருமை	பன்மை
தன்மைப் பெயர்-	நான், யான்	நாம், யாம், நாங்கள்.
முன்னிலைப் பெயர்-	நீ	நீர், நீங்கள்.

படர்க்கைப் பெயர்-	ஆண்பால்-அவன் பெண்பால்-அவள் ஒன்றன்பால்-அது	பலர்பால் - அவர்கள் பலவின்பால்-அவை

குறிப்பு:—தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர்களில் **எண்** மட்டும் தோன்றும்; படர்க்கைப் பெயர்களில் **திணை, பால், எண்** இவை தோன்றும்.

பயிற்சி

1. அடியிற் கண்ட வாக்கியங்களில், தன்மைப் பெயர்களையும், முன்னிலைப் பெயர்களையும் எழுவாயாக அமைத்து எழுது:—

(1) ஒரு சிறுவன் மதுவைத் திரட்டும் தேனீ ஒன்றைப் பார்த்தான்.

(2) அறிஞன் உண்மையை உணர்கிறான்.

2. அடியிற் கண்ட வாக்கியங்களில் **நாம், நீர்** என்ற எழுவாய்களை வைத்து வாக்கியத்தைத் திருத்தி அமைக்க:—

(1) எனக்கே உதவ இனி நான் வாழேன்.

(2) பிறர்க்குப் பயன்படப் பெரிதும் முயல்வேன்.

3. இப்பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்களைச் சொல்லு.

4. இதில் வந்துள்ள வினைமுற்றுகளைக் கூறு.

5. இதில் உள்ள இரண்டு, மூன்று, நான்கு, எழுத்துச் சொற்களை எழுது.

6. இதில் உள்ள அளவை எண்ணுப் பெயர்களைக் கூறு.

7. இதில் உள்ள பெயர், வினை, இடை, உரிச் சொற்களை எழுது.

8. இப்பாட்டின் பொருளை 10 வரிகளில் சுருக்கி எழுது.

9. இதனை அச்சிறுவனே கூறுவதுபோலக் கூறு.

10. சிறுவன் கண்டவை—அவற்றின் செயல்கள்—சிறுவன் உணர்ச்சி—முடிவு: இவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு இப்பாட்டின் பொருளை நான்கு பிரிவுகளில் எழுது.

6. சர் ஜகதீச சந்திர போஸ்

உலகத்தில் இதுவரை எவரும் கண்டறியாத தாவர சாஸ்திர நுட்பங்களை முதன் முதலில் கண்டறிந்து உலகம் வியப்புறச் செய்த பெருமை **சர் ஜகதீச சந்திர போஸ்** என்பவரையே சார்ந்ததாகும். இவர் வங்க மாகாணத்தில் பிக்ரம்பூர் என்னும் கிராமத்தில் 1858-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆந் தேதி பிறந்தார். இவர் தந்தையார் **பகவன் சந்திர போஸ்** நிறைந்த



கல்வி அறிவு உடையவர்; அரசாங்க உத்தியோகஸ்தர். அவரிடம் வளர்ந்து வந்த ஜகதீச சந்திரர் உழைப்பு, ஊக்கம், முன்னேற்ற உணர்ச்சி, கூர்மையான அறிவு இவற்றைப் பெற்று விளங்கினர்; பள்ளிப் பிள்ளைகளோடு பழகிக் கிராம வாழ்க்கை, தொழில் முறை, பயிர்த்தொழில் முதலியவற்றை நன்கறிந்தார். இவர் கல்கத்தாவில் உள்ள செயின்ட் ஜேவியர் கல்லூரியிற் சேர்ந்து பி.ஏ., பட்டம் பெற்றார்.ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறிய இவர், இங்கிலாந்து சென்று, லண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1885-ல் இயற்கைத் தத்துவ சாத்

திரத்தில் **பி. எஸ்ஸி.** (B. Sc.) என்னும் பட்டத்தைப் பெற்றார்.

மேனாட்டுக் கல்வி முடிந்ததும், போஸ், தாய் நாட்டை அடைந்தார்; கல்கத்தாவில் உள்ள மாகாணக் கல்லூரியில் பூத பௌதிக சாஸ்திரப் பேராசிரியராக அமர்ந்தார். இவர் ஆராய்ச்சிகள் பல செய்து, தாம் கண்டறிந்த பல உண்மைகளைப் பத்திரிகைகளில் எழுதி வெளியிட்டார்; பின்னர் மின்சார அலைகளைப்பற்றித் தீவிர ஆராய்ச்சி செய்து, அதனை லண்டன் ராயல் சங்கப் பத்திரிகையில் வெளியிட்டார். இவ்வற்புத ஆராய்ச்சியே போஸின் பெயரை முதன் முதலில் உலகெலாம் அறியச் செய்தது. அதுமுதல் மேனாட்டார் பலர் இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகட்குப் பொருள் உதவி புரிந்து வந்தனர். போஸின் பெருமையை உணர்ந்த வங்க அரசாங்கம் இவர் ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவிகள் அளித்தது.

லண்டன் சர்வகலாசாலையார் இவருக்கு **டி. எஸ்ஸி.** (Doctor of Science) என்னும் பட்டத்தை அளித்தனர். அக்காலத்தில் மின்சார அலைகளைப்பற்றி இங்கிலீஷ்காரர் ஒருவரும், அமெரிக்கர் ஒருவரும், போஸும் ஆக மூவரே ஆராய்ந்து வந்தனர். அவருள் வெற்றி பெற்றவர் போஸே ஆவர். லண்டன் ராயல் சங்கத்தார் போஸை இங்கிலாந்துக்கு அழைத்தனர். போஸ் அங்குச் சென்று தம் ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படக் காட்டிப் பெரும்புகழ் பெற்றார். போஸ் 1915-ஆம் ஆண்டு லண்டன் ராயல் சங்கத்தார் வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்றார்; அவருடைய ஆராய்ச்சிகட்குரிய மிக மெல்லிய நுட்பமான கருவிகளைக் கண்டு வியந்த வெள்ளையர், 'இவை எங்குச் செய்யப்பட்டவை?' எனக் கேட்டனர். போஸ் நிமிர்ந்து நின்று, 'இவை எம் தாய்நாட்டில் செய்யப்பட்டவை' என்று விடையளித்தார். வெள்ளையர் வியப்படைந்தனர்.

இவர் ஆராய்ச்சியிற் கண்ட உண்மைகள் யாவை? (1) தாவரங்களுக்கும் விலங்குகட்கும் நரம்புத் தொடர்பு ஒன்றே. (2) மரத்து வாழ்க்கை மனித வாழ்க்கையோடு ஒத்துக் காணப் படுகிறது. (3) நாகரிக மக்களைப்போலவே மரங்களும் இரவு பன்னிரண்டு மணிக்குத் தூங்கத் தொடங்கிக் காலை எட்டு மணிக்கு விழிப்படைகின்றன. (4) மரங்கட்கு மயக்க மருந்தைத் தந்து அவற்றை வேரோடு எடுத்து வேறு இடத்தில் நட்டு உயிரோடு வளரச் செய்யலாம். இவையும் பிறவும் இவர் கண்டறிந்த ஆராய்ச்சி உண்மைகள் ஆகும்.

இவ்வாராய்ச்சிகள் எவரைத்தாம் பிரமிப்படையச் செய்யா? பாரிஸ், வியன்னு, பெர்லின், ரோம், டோக்கியோ, காலிபோர்னியா, நியூயார்க், சிகாகோ முதலிய நகரங்களிலுள்ள சர்வகலாசாலையார் போஸை வரவழைத்து, ஆராய்ச்சிச் சொற் பொழிவுகளைக் கேட்டு வியந்து பெருமைப்படுத்தினர். ஆங்காங்கு இவர் பெற்ற கௌரவப் பட்டங்கள் பல. "உலகிற் சிறந்து விளங்கும் ஒப்பற்ற அறிஞராகிய டாக்டர் ஜகதீச சந்திர போஸைப் பெற்ற இந்தியாவுக்கு மேனுடுகள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளன" என்று பேராசிரியர் **மாலிஷ்** என்பவர் வியன்னுப் பல்கலைக் கழகக் கூட்டத்திற் கூறியது கவனிக்கத்தக்கது.

இப் பெரியார் கல்கத்தாவில் **ஆராய்ச்சிக் கூடம்** ஒன்றை ஏற்படுத்தினர். அக்கூடத்தில் மேனுட்டு மாணவரும் கீழ் நாட்டு மாணவரும் ஆராய்ச்சித் துறையிற் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்தியாவுக்கு மேனுடுகளைத் தலை வணங்கச் செய்த இப்பெரியாருக்கு இந்திய அரசாங்கத்தார் **சர்., சி.ஐ.இ., சி.எஸ்.ஐ.** முதலிய பட்டங்களை அளித்துச் சிறப்பித்தனர். இவருக்கு ஆயுள்வரை முழுச் சம்பளம் கொடுக்க வங்க அரசாங்கம் இசைந்தது. இப்பெரியார் இறந்துவிட்டனர் எனினும், இவரது பெயர் இவ்வுலகில் என்றும் நிலைபெற்றிருக்கும் என்பதில் ஐயமுண்டோ?

1. அருஞ்பத விளக்கம்

தாவர சாஸ்திரம் - மரம், செடி, கொடிகளைப் பற்றிய அறிவு நூல்; வங்கம் - வங்காளம்; கல்லூரி - காலேஜ்; பல்கலைக் கழகம் - பல சாஸ்திரங்களும் வளரும் இடம், யூனிவர்சிட்டி; இயற்கைத் தத்துவ சாத்திரம் - இயற்கைப் பொருள்களைப் பற்றிய அறிவியல் கலை; பி. எஸ்ஸி. - இயற்கைத் தத்துவக் கலைப் பட்டம் (Bachelor of Science); தாய் நாடு - தாம் பிறந்த நாடு (இந்தியா); பயிற்சி- பழக்கம்.

2. கேள்விகள்

1. ஜகதீச சந்திர போஸ் பெற்ற பட்டங்கள் எவை ?
2. அவர் இளமையில் எவற்றை அறிந்தார் ?
3. அவர் செய்த ஆராய்ச்சிகள் எவை ?
4. அவர் கண்டறிந்த உண்மைகள் எவை ?
5. அவர் எந்தச் சர்வகலாசாலைகட்குச் சென்றார் ?
6. மாலிஷ், போஸைப்பற்றி யாது கூறினார் ?
7. இந்திய அரசாங்கம் போஸுக்கு அளித்த பட்டங்கள் எவை ?
8. வங்க அரசாங்கம் செய்த சிறப்பு யாது ?
9. நீ அவர் வரலாற்றால் அறிவது என்ன ?

3. இலக்கணம்

பால் வகை :

ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றும் உயர்திணைக் குரியவை. ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டும் அஃறிணைக்குரியவை.

(உ-ம்.)

உயர்திணை:
- ஆண்பால் - சாதுவன், கோவலன்.
- பெண்பால் - கண்ணகி, மாதவி.
- பலர்பால் - மக்கள், பெண்கள்.

அஃறிணை:
- ஒன்றன்பால் - வீடு, நாய்.
- பலவின்பால் - வீடுகள், நாய்கள்.

பயிற்சி

1. கீழ்வரும் சொற்களுக்குப் பால் கூறு:—

பெண், பாண்டியன், கற்பரசி, ஆதிரை, வணிகன், வணிகர், கொம்பு, மனை, நாயகன், பொய்கை, மலர்கள், கல்கத்தா, தாவரம்.

2. மாற்றுப்பால் சொல்லு:—

நாயகன், அவள், அப்பா, பிச்சைக்காரன், தோழி.

3. பின்வரும் வாக்கியங்களிலுள்ள ஆண்பாலைப் பெண் பாலாகவும், பெண்பாலை ஆண்பாலாகவும் மாற்றி வாக்கியங்களை எழுது:—

(1) தோட்டக்காரன் தன் தோட்டத்தைக் கவனமாகப் பாதுகாப்பான்.

(2) வேலைக்காரன் இன்று வேலைக்குப் புறப்படவில்லை.

(3) தந்தை தன் மகனுடன் கடைக்குச் சென்றார்.

(4) இடையன் பால் விற்பனை செய்கிறான்.

4. இப்பாடப் பிரிவுகளை மௌனமாகப் படி; ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தலைப்புக் கொடு.

5. இப்பாடத்தின் பொருளைச் சுருக்கி 20 வரிகளில் எழுது.

6. போஸின் இளமை - அவர் செய்த ஆராய்ச்சிகள் - அவரது புகழ் - அவர் முடிவு: இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

7. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

8. முதல் பிரிவில் உள்ள முறை, அளவை, எண்ணுப் பெயர்களைச் சொல்லு.

9. மூன்றாம் பிரிவில் வரும் ஐம்பால் பெயர்களைக் கூறு.

10. கல்லூரி, உலகெலாம், அரசாங்கம், ஆராய்ச்சி— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

11. வியப்படைந்தனர், நரம்புத்தொடர்பு, மனித வாழ்க்கை, மேனாடு—பிரித்துக் காட்டு.

7. காலத்தை அளக்கும் கருவிகள்

நாம் இக்காலத்தில் கால அளவுகளைக் **கடிகாரம்** என்னும் கருவியினால் இலகுவாய் அறிந்துகொள்ளுகிறோம். காலத்தைத் தெளிவாகக் காட்டும் இத்தகைய கருவி பண்டைக்காலத்தில் இல்லை. அதனால் நம் மூதாதைகள், பகற்பொழுதில் சூரிய னுடைய இயக்கத்தைக் கொண்டும், இராப்பொழுதில் நக்ஷத் திரங்களுடைய இருப்பைக் கொண்டும், காலத்தின் அளவைக் கணித்து அறிந்து வந்தனர்; அவ்வாறு காலத்தை அளக்க வழி தெரிந்துகொண்டார்கள் என்றாலும், மேகத்தால் சூரியன் மறைகின்ற சமயத்திலும், இருளினால் உடுக்கள் தெரியாத சமயத்திலும் காலத்தின் அளவை அறிவதற்குத் துன்பப் பட்டனர்.

பிறகு, ஒரு தினத்தில் செய்யவேண்டிய அநேக வேலை களுக்குப் பலவிதமான கால அளவைகள் வேண்டியது அவசியம் என்பதை அறிந்தனர்; அறிந்தும், அதற்கேற்ற கருவிகளைச் செய்வதற்கு வழி ஒன்றும் தோன்றவில்லை; கடைசியில் சூரிய னுடைய இயக்கத்தால் மரங்கள், மாடங்கள் முதலியவற்றின் நிழல் நீளுவதையும் குறுகுவதையும் கொண்டு, பற்பல கால அளவுகளைத் தெரிந்துகொண்டனர். அவ்வளவைக் காட்ட அமைத்த கருவிக்குத்தான் **சூரிய நிழற் கடிகாரம்** என்பது பெயர். அதன்பின், சூரியனது ஒளி பூமியில் சரியானபடி விழாத சம யத்தில் நிழல் தெரியாததினால், சூரிய நிழற் கடிகாரமும் பய னற்றதாயிற்று.

அதுவன்றிச் சூரியனைப் பார்த்து நிமிர்ந்து நின்று கொண்டு, தம் நிழலைத் தம் காலடிகளால் கணக்கிட்டு, வந்த எண்ணுடனே ஐந்தைச் சேர்த்து, அவ்வெண்ணால் நூறை வகுத்து, அதனால் வரும் எண் காலைப்பொழுதா யிருந்தால், சூரியன் உதயமானது முதல் அப்பொழுது இவ்வளவு நாழிகை

ஆகியிருக்கிறதென்றும், மாலைப்பொழுதாயின், சூரியன் மறைவதற்குச் செல்லவேண்டும் நாழிகை இவ்வளவு இருக்கிறதென்றும் அறிந்துகொள்ளும் கணிதத்தையும் கண்டுபிடித்திருந்தனர். அதுவும் சூரியன் தெரியாத சமயத்தில் அறிய முடியாததா யிருந்தமையால், சிறந்த முறையாகக் கொள்ளப் படவில்லை.

மேற்கூறிய முறைகள், பகற்பொழுதில் மட்டுமே காலத்தை நிர்ணயம் செய்யக்கூடியனவா யிருந்தமையாலும், சூரியன் மேகத்தால் மறைக்கப்படுங் காலத்தில், அப் பகற்பொழுதிலும் கால நிர்ணயம் செய்ய இயலாமற் போனமையாலும், அவற்றிலும் சிறந்த முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமெனச் சில அறிவாளிகள் கருதி முயன்றனர். அவர்கள், சரியான காலத்தைக் காட்டும் கருவி ஒன்றை அமைப்பது பற்றிப் பல வருடங்கள் யோசித்தனர்; முடிவில் ஒரு பாத்திரத்தை எடுத்து, அதில் நிரம்பத் தண்ணீரை ஊற்றி மூடி, அதன் கீழ் ஒரு சிறு துவாரம் செய்து, அப்பாத்திரத்தை மேலும், அதே அளவுள்ள மற்றொரு பாத்திரத்தை அதற்குக் கீழுமாக வைத்தனர்; அதன்பின், மேற்பாத்திரத்திலிருந்து கீழ்ப்பாத்திரத்திற்கு நீர் வடிவதற்கு எவ்வளவு காலம் ஆகிறது என்பதைக் கண்டனர்; அதைக் கொண்டே பாத்திரங்களில் பல அடையாளங்களைச் செய்து, காலத்தின் அளவைப் பகலிலும் இரவிலும் தெளிவாய் அறிந்துகொண்டனர். அம் முறையே சிறந்ததென்று கண்டு, பலர் மேற்கூறிய கருவியைச் செய்துகொண்டு காலத்தை அறிந்து வந்தனர். இதற்கு **நாழிகை வட்டில்** என்றும், **நீர்க் கடிகாரம்** என்றும் பெயர்கள் வழங்கின.

கோடைக்காலத்தில் வெயிலின் கொடுமையால் தண்ணீர் ஆவியாக மாறுகிறது. மழைக்காலத்தில் தண்ணீர் ஒரே தன்மையாக இருக்கிறது. இம்முறைகளால் நீர்க் கடிகாரங்கள் வெயிற் காலத்தில் ஒரு விதமாகவும், மழைக்காலத்தில் ஒரு விதமாகவும்



1. சூரியன் நிழலைக்கொண்டு காலமறிதல், 2. நீர் நிரப்பிய நாழிகை வட்டில், 3. மணல் நிரப்பிய நாழிகை வட்டில், 4. எரியும் திரியைக் கொண்டு காலமறிதல், 5. கலிலியோவின் பெண்டுலக் கடிகாரம், 6. பூர்த்தியான தற்காலக் கடிகாரம்.

கால அளவை மாறுபாடாகக் காண்பிக்கின்றன என்று அறிவாளிகள் சிலர் கண்டனர்; அதனுல் நீர்க் கடிகாரமும் சரியான காலத்தைக் காட்டாது என அறிந்தனர். பின்பு அவர்களிற் சிலர், நீருக்குப் பதிலாக மணலை வைத்து, அது விழும் நேரத்தைக் கொண்டு கணக்கிட்டுக் கொள்ளலாம் என்றனர். அது வெயிற்காலத்திலும், மழைக்காலத்திலும் ஒரே தன்மையாக இருக்கும் என்பதை யோசித்து, அம்முறை கைக்கொள்ளப் பட்டது. அதனுல் திருத்தமான கால அளவுகளைச் சரிவரச் செய்துகொண்டனர். காலத்தை அளக்குங் கருவியைக் கண்டு பிடிப்பதற்காக, நம் முன்னேர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிருர்கள் என்பது, நமக்கு இதனுல் நன்கு விளங்குகின்றதன்ரு? விடாமுயற்சியும் உழைப்பும் உடையவர்கள் எதைத் தான் ஆராய்ந்து கண்டுபிடிக்க மாட்டார்கள் ?

பண்டைக் காலத்தில் சில கிராமங்களில் வேறு விதமாகவும் காலத்தை அறிவது வழக்கமாக இருந்தது. ஒரு நீண்ட சணல் நாரையோ அல்லது ஒரு கயிற்றையோ எடுத்துப் பல அடையாளங்கள் இட்டும், பல முடிச்சுகளிட்டும் தொங்கவிடுவர்; அவ்வாறு தொங்கவிடப்பட்ட கயிறு அல்லது நாரின் கீழ் நெருப்பைக் கொளுத்தி வைத்துவிடுவர்; அந்நெருப்புச் சிறிது சிறிதாகப் பற்றிக்கொண்டு வர, முடிச்சுகளினுலும் தாமிட்ட அடையாளங்களினுலும் காலத்தை அறிந்துகொள்வர். சிலர், நீண்ட சிறு குச்சிகளையும், திரிகளையும் சில அடையாளங்களிட்டு ஓரிடத்தில் நிறுத்தி வைத்துக் குறிப்பிட்ட நேரத்தில் தீயைக் கொளுத்தி விடுவர். பின்பு, அவை எரிந்துள்ள பாகங்களைக் கொண்டு காலத்தின் அளவைத் தெரிந்து வந்தனர். இம்முறைகள் ஆங்கில நாடுகளிலும் கையாளப்பட்டு வந்தன.

சற்றேறக்குறைய ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, மேனுட்டில் **கலிலியோ** என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கணித சாஸ்

திரம், வான சாஸ்திரம் முதலியவற்றில் வல்லவர். அவருக்குக் காலத்தின் அளவுகளைச் சரிவரக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஊக்கம் உண்டாயிற்று. அதனால் அவர் பலநாள் முயன்று, கடைசியில் கடிகாரங்களின் அசையும் பெண்டுல ஏற்பாட்டைக் கண்டுபிடித்தார். அதனால் சில சக்கரங்களின் உதவியைக் கொண்டு, முட்களைச் சுழலச் செய்யலாமென்று அவருக்குத் தோன்றிற்று. உடனே, அவர் தாம் யூகித்தவாறே செய்து, மேற்புறத் தகட்டில் ஒன்று, இரண்டு முதலிய எண்களைக் குறித்துப் பெண்டுலத்தை அசைத்தார்; அப்பொழுது அக்கருவி ஒழுங்காகவும், உறுதியாகவும் காலம் காண்பிப்பதைக் கண்டார்; பிறகு, தம் ஆராய்ச்சியை நாடெங்கும் பரப்பினார். அதனால் அவருக்குப் புகழ் மிகுவதாயிற்று.

இப்பொழுது, நாம் உபயோகிக்கின்ற கடிகாரங்கள் எல்லாம் அவரது ஏற்பாட்டைப் பின்பற்றியவையே. அதனால், நாம் ஒரு நாளிலுள்ள மிகச் சிறிய கால அளவாகிய நிமிடம், செகெண்டு முதலியவற்றைக் கூடச் சற்றும் பிசகாது அறிந்து கொள்ளுகிறோம்; இதனால் எந்தெந்தக் காரியங்களை எந்தெந்தக் காலங்களில் செய்து முடிக்க வேண்டுமோ அவ்வாறே செய்து முடிக்கின்றோம்.

1. அரும்பத விளக்கம்

பண்டைக்காலம் - முன்காலம்; மூதாதைகள் - முன்னோர், பெரியோர்; உடு - நக்ஷத்திரம்; நிர்ணயம் - தீர்மானம், நிச்சயம்; இயக்கம் - அசைவு, நடமாட்டம்.

2. கேள்விகள்

(1) சூரியநிழற் கடிகாரம் என்றால் என்ன? அதனால் காலத்தை எவ்வாறு அறியலாம்?

(2) சூரியநிழற் கடிகாரம் பயன்படாமைக்குக் காரணம் கூறு.

(3) நாழிகை வட்டிலால் காலமறிவது எங்ஙனம்?
(4) கலிலியோ என்பவர் உலகுக்குச் செய்த நன்மை யாது?

3. இலக்கணம்

1. தனியே நிற்கும் சொல் **தனிமொழி**. சொற்கள் தொடர்வது தொடர்மொழி எனப்படும்.

(உ-ம்.) கண்ணன் - தனிமொழி
சொல்வன்மை - தொடர்மொழி

2. முருகன்-இது இயல்பான பெயர். இதுவே, 'முருகனை, முருகனால், முருகனுக்கு, முருகனில், முருகனது, முருகனிடம், முருகா' எனப் பலவாறு **வேற்றுமை** அடைந்து வரும். இப்படி வருதல் **வேற்றுமை** எனப்படும். இவ்வாறு பெயர்ச்சொல்லை **வேற்றுமைப்** படுத்தும் **'ஐ, ஆல், கு, இல், அது, இடம்'** முதலியன **வேற்றுமை உருபுகள்** எனப்படும். வேற்றுமை எட்டு ஆகும்,

முதல் வேற்றுமை—முருகன், வரதன், காக்ஸ்டன் என்னும் இயல்பான பெயர்கள்.

இரண்டாம் வேற்றுமை—முருகனை, இதன் உருபு ஐ.

மூன்றும் வேற்றுமை—முருகனால், முருகனோடு, முருகனுடன். இதன் உருபுகள் ஆல், ஓடு, உடன் என்பன.

நான்காம் வேற்றுமை—முருகனுக்கு, இதன் உருபு கு.

ஐந்தாம் வேற்றுமை—முருகனில் இராமன் பெரியவன். கடையிலிருந்து போனேன். வீட்டினின்று வந்தேன். இதன் உருபுகள் இல், நின்று, இருந்து என்பன.

ஆறும் வேற்றுமை—முருகனது புத்தகம், முருகனுடைய புத்தகங்கள். இதன் உருபுகள் அது, உடைய என்பன.

ஏழாம் வேற்றுமை—முருகனிடம் பை இருக்கிறது. பெட்டியில் பணம் இருக்கிறது. முருகன்கண் பை இருக்கிறது. இதன் உருபுகள் இல், இடம், கண் என்பன.

எட்டாம்வேற்றுமை—பெயர்ச்சொல்லின் ஈற்று (கடைசி) எழுத்து இயல்பாக வருதல், கெடுதல், நீளுதல், ஈற்றுக்கு அயல் எழுத்து நீளுதல் முதலிய மாறுதல்கள் பெறும்.

(1) முருகன்—முருகன்! —ஈறு இயல்பாதல்.
(2) முருகன்—முருக! —ஈறு கெடுதல்.
(3) முருகன்—முருகனே! —ஈறு நீளுதல்.
(4) மக்கள்—மக்காள்! —ஈற்று அயல் எழுத்து நீளுதல்.
(5) முருகன்—முருகா! —ஈறு கெட்டு ஈற்றயல் நீளுதல்.

பயிற்சி

1. கண்ணன், கந்தனை, முருகனோடு, வள்ளிக்கு, பாலில் வெளிது கொக்கு, அவனது புத்தகம், என்னிடம் பை இருக்கிறது, வரதா! வா—இவற்றில் உள்ள வேற்றுமை உருபுகள் எவை ?
2. இப்பாடத்தின் முதல் பகுதியில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறு.
3. முருகன், கிழவி, வேடன், கண்மணி, மக்கள், தங்கை, அப்பன், அம்மை—எட்டாம் வேற்றுமைப் பெயர்களாக மாற்று.
4. கண்ணு, முருகனே, வரதா, பிள்ளையே, பிள்ளாய்—இவை என்ன என்ன மாறுதல்களை அடைந்துள்ளன?
5. இப்பாடத்தின் பொருளை 20 வரிகளில் சுருக்கி எழுது.
6. ஒவ்வொரு பிரிவிற்கும் தலைப்புக் கொடு.
7. பாடத்தின் கடைசிப் பகுதியில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.
8. கந்தன் வள்ளியோடு படித்தான். கமலம் பெட்டியில் பணத்தை வைத்தாள். இது அவனது புத்தகம்—தடித்த சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.

8. குறிப்புகளினின்று கதையை விவரித்து எழுதுதல்

1. மூன்று இரத்தினங்கள்

குறிப்புகள்

ஒரு திருடன்—நல்லோர் சிலர்—வழிப்பறி—அவர்கள் அவனுக்கு உண்மையே பேசுமாறு போதித்தது—அவன் உண்மையே பேசி வந்தது—ஒரு நாள் அவன் அரசன் அரண்மனையில் திருடப் புறப்பட்டது—அரசன் மாறு வேடத்தில் வந்தது—அரசனும் திருடனும் பேசிக்கொண்டது—அரண்மனை நிதிச்சாலையில் திருடியது—அங்கு மூன்று இரத்தினங்கள்—திருடன் ஒன்றை வைத்து விட்டு இரண்டைத் திருடியது—மறுநாள் அரசன் மந்திரியை விசாரித்தது—மந்திரி நிதிச்சாலைக்குப்போய் அங்கிருந்த ஓர் இரத்தினத்தை எடுத்துக்கொண்டது—மந்திரி மூன்று இரத்தினங்களும் திருட்டுப் போனதாகக் கூறியது—அரசன் திருடனை வருவித்து உண்மையை விளக்கியது—மந்திரியைத் தண்டித்தது—திருடனுக்கு நன்மையைச் செய்தது—கதையால் அறியும் நீதி.

விவரித்து எழுதப்பட்ட கதை

மிகுந்த ஏழையான ஒருவன் பிழைக்க வேறு வகையின்றித் திருடப் புறப்பட்டான். போகும் வழியில் முனிவர் சிலர் வந்தனர். அவன் அவர்களை வழிப்பறி செய்ய முயல்கையில், அவர்கள் "நில்" என்றார்கள். அப்போது அவன் அசையவும் முடியாமல் நின்றுவிட்டான். உடனே அவன் பயந்து, தன்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டான். பிறகு அவர்கள் "சரி, மன்னித்தோம்" என, அவன் முன்னைய நிலைமை அடைந்து அவர்களை வணங்கினான். அவர்கள், "அப்பா, நீ நல்வாழ்வை அடைவாயாக! நீ எங்களை வணங்கியபடியினாலே நாங்கள் உனக்கு ஒரு நல்லுபதேசம் செய்கிறோம். அதைக்

கடைப்பிடித்து நடப்பாயானுல் உனக்கு மிக்க நன்மையுண்டாகும்'' என்று கூறினர். திருடன், "பெரியோரே! அவ்வாறே நடந்துகொள்ளுகிறேன்; அருள் கூர்ந்து உபதேசம் செய்தருள வேண்டும்'' என்ருன். அப்போது அவர்கள், "அப்பா, என்ன துன்பம் நேரிடுவதா யிருந்தாலும் உண்மையையே பேசுவாயாக!'' என்றனர். அவனும், "சரி, அவ்வாறே செய்கிறேன்'' என்று கூறி, அவர்களை வணங்கிவிட்டுச் சென்ருன். முனிவர்களும் தம் வழியே சென்றனர்.

பிறகு சிலநாள் கழித்து அத்திருடன் ஒரு பெரிய பட்டணத்தை அடைந்து, ஒரு நாளிரவு அப்பட்டணத்து அரசனுடைய அரண்மனையின் பின்பக்கமாகச் சென்றுகொண்டிருந்தான். அப்போது மாறுவேடந் தரித்து நகரசோதனைக்காகப் புறப்பட்ட அரசன் அத்திருடனைக் கண்டான். உடனே அரசன் அவனருகிற் சென்று, "நீ யாரப்பா? எங்கே போகிருய்?'' என்ருன். திருடன், "நான் ஒரு திருடன்; இன்றிரவு இந்த அரண்மனையில் திருட வந்திருக்கிறேன்'' என்ருன். அதைக் கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து, "அப்பா, அரண்மனையில் காவலாளிகள் பலர் இருப்பார்களே, எப்படித் திருடுவாய்?'' என்ருன். திருடன், "நான் திருட்டுத் தொழிலில் நன்கு பயின்றவன். காவலாளிகளுக்குத் தெரியாமல் எப்படியாவது சென்று திருடிவிடுவேன்'' என்ருன். அரசன், "ஆனுல், உண்மைக்கும் திருட்டுக்கும் வெகுதூரமாயிற்றே! நீ உண்மை பேசுகிருயே; நீ எப்படித் திருட்டுத் தொழிலில் முன்னுக்கு வருவாய்?'' என்ருன். திருடன், "என்ன துன்பம் நேரிடுவதானுலும் நான் உண்மையே பேசுவதாகத் தீர்மானித்துக்கொண்டிருக்கிறேன். நான் முன்னுக்கு வந்தாலும், வராவிட்டாலும் என் தீர்மானத்தை மாற்றமாட்டேன்'' என்ருன். அரசன், "ஆனுல் சரி. நானும் உன்னைப்போல ஒரு திருடனே. நாம் இருவரும் சேர்ந்து இன்று இந்த அரண்மனையில் திருடுவோம். ஒருவரும்

அறியாமல் இந்த அரண்மனையின் பொக்கிஷ அறைக்குப் போக எனக்கு வழி தெரியும். வா போகலாம்" என்றான்.

பிறகு அரசன் வழி காட்டிக்கொண்டு முன் செல்லத் திருடன் பின் சென்றான். சிறிது நேரத்தில் அவர்கள் பொக்கிஷ அறையை அடைந்தனர். பொக்கிஷ அறையில் மூன்று இரத்தினங்கள் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. அவர்கள் அவற்றில் ஒன்றை அரசனுக்காக வைத்துவிட்டுத் தாங்கள் இரண்டைத் திருடிச் செல்லலாமென்று பேசிக்கொண்டு அவ்வாறே செய்தனர். பிறகு அவர்கள் ஆளுக்கொரு இரத்தினமாகப் பங்கு பிரித்துக்கொண்டு, வந்த வழியே திரும்பிச் சென்றுவிட்டனர்.

பிறகு மறுநாள் பொக்கிஷ அறையில் திருட்டு நடந்த விஷயம் வெளிப்பட்டது. அரசன் மந்திரியிடம் என்னென்ன பொருள்கள் திருட்டுப்போயின எனப் பார்த்து வருமாறு கூறினான். மந்திரியும் அவ்வாறே சென்று இரண்டு இரத்தினங்கள் மட்டும் களவாடப்பட்டிருப்பதைக் கண்டான். மிகுந்துள்ள ஓர் இரத்தினத்தையும் தான் எடுத்துக்கொண்டு அரசனிடம் திரும்பிச் சென்று, "நம்மிடமிருந்த மூன்று சிறந்த இரத்தினங்கள் மட்டுமே திருட்டுப்போயிருக்கின்றன; மற்றப் பொருள்களெல்லாம் அப்படியே இருக்கின்றன" என்றான்.

உடனே அரசன் மந்திரியின் திருட்டுத்தனத்தை உணர்ந்துகொண்டான். அரசனுக்கு இரவில் வந்த திருடனது இருப்பிடம் தெரியுமாகையால், உடனே தன் சேவகர்களை அழைத்து அத்திருடனைப் பிடித்து வருமாறு கூறினான். சேவகர்களும் சென்று அவ்வாறே பிடித்து வந்தனர். அரசனைக் கண்ட திருடன் தன்னுடன் முதல் நாளிரவில் திருடியவன் அரசனே என உணர்ந்து பயத்தால் நடுங்கினான். அரசன் அவனைப் பார்த்து, "நீ நேற்று அரண்மனைப் பொக்கிஷத்தில் திருடினாயல்லவா? என்னென்ன திருடினாய்? உண்மையைச் சொல்"

என்றான். திருடன் தான் இரண்டு இரத்தினங்களை மட்டும் திருடியதாகச் சொன்னான். உடனே மந்திரி கோபித்து, "நீ மூன்று இரத்தினங்களைத் திருடவில்லையா ? உண்மையைச் சொல்லாவிட்டால் கடுந்தண்டனை விதிக்கப்படும் !" என்றான்.

அப்போது அரசன் தான் திருடனுடன் சென்று திருடிய வரலாறு முழுவதையும் கூறித் தன்னிடமுள்ள இரத்தினம் ஒன்றை எடுத்து முன்வைத்து, அவ்வாறே திருடனிடமுள்ள இரத்தினம் ஒன்றையும் எடுத்து முன்வைக்கச் செய்தான்; பிறகு மந்திரியின் திருட்டுத் தனத்தை வெளிப்படுத்தி அவனை வேலையை விட்டு நீக்கிவிட்டான்; அப்பால் அத் திருடனைத் தனக்கு வேலையாளாக வைத்துக்கொண்டான்.

2. எல்லாம் தெய்வச்செயல்

குறிப்புகள்

ஒரு வேடன்—காட்டில் மரத்தின்மேல் இரண்டு புருக்கள்—கீழே பாம்புப் புற்று—மேலே இரண்டு வல்லூறுகள் வட்டமிட்டுக்கொண்டிருத்தல்—புருக்கள் துயரப்படுதல்—வேடன் குறி பார்த்துக்கொண்டே பாம்புப் புற்றின் அருகில் செல்லுதல்—புற்றிலிருந்து வெளிவந்த பாம்பு அவனைக் கடித்தல்—அவன் வில்லினின்று அம்பு குறிதவறிச் சென்று வல்லூறுகளைக் கொன்று விடுதல்—புருக்கள் மகிழ்ச்சி அடைதல்.

விவரித்து எழுதப்பட்ட கதை

ஒரு காட்டில் ஒருநாள் வேடன் ஒருவன் நெடுநேரம் வேட்டையாடிக் களைத்து ஒரு மர நிழலை அடைந்தான். அப்போது அவன் தற்செயலாக மேலே அண்ணாந்து பார்த்து ஒரு கிளையில் இரண்டு புருக்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். உடனே அவன் அந்த இரண்டையும் ஒரே அம்பால் கொன்று வீழ்த்த எண்ணி, வில்லில் அம்பைத் தொடுத்துக் குறிபார்த்த வாறே மெல்ல மெல்லப் பின்னால் நகர்ந்து செல்வானாயினான். மேலே இருந்த புருக்கள், வேடன் தங்களைக் கொல்லக் குறி

பார்ப்பதைத் தெரிந்துகொண்டன. அவை மேலே பறந்து செல்ல முயல்கையில், ஆகாயத்தில் இரண்டு வல்லூறுகள் தங்களைப் பிடிப்பதற்காகவே வட்டமிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டன. இவ்வாறு **'இருதலைக் கொள்ளி எறும்புபோல்'** அகப் பட்டுக்கொண்ட புருக்கள் மிக்க துயரமடைந்து, "ஆ! கடவுளே, நீதான் எங்களைக் காப்பாற்றவேண்டும்!" என்று கடவுளை வேண்டிக்கொண்டன.

இஃது இப்படியிருக்கக், குறி பார்த்துக்கொண்டே நகர்ந்து சென்ற வேடன், தனக்குப் பின் ஒரு பாம்புப் புற்று இருப்பதைக் கவனியாமல் அதன் பக்கத்தை அடைந்தான். அப்போது அதற்குள்ளிருந்து வெளிவந்த நாகப்பாம்பு அவன் காலைக் கடித்தது. உடனே அவன் 'ஆ' என்று அலறிக்கொண்டு கீழே விழுந்துவிட்டான். அவன் வில்லில் தொடுக்கப்பட்டிருந்த அம்பு விடுபட்டு 'விர்' என்று பறந்துசென்று மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்த வல்லூறுகள் இரண்டையும் ஒரேகாலத்தில் கொன்று வீழ்த்தியது. கடவுளருளால் இரண்டு ஆபத்துகளினின்றும் தப்பிய புருக்கள், கடவுளை வாழ்த்திவிட்டுச் சந்தோஷத்துடன் அவ்விடத்தைவிட்டுப் பறந்து சென்றன. ஆகையால், சிறுவர்களே, இக்கதையால் **'எல்லாம் தெய்வச் செயல்'** என்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

1. கேள்விகள்

பின்வரும் குறிப்புகளினின்று கதையை விவரித்து எழுது.

1. ஒரு விறகு வெட்டி—காட்டில் விறகு வெட்டுதல்—கோடரி தவறிப் பக்கத்தில் இருந்த ஆற்றில் விழுந்துவிடுதல்—அவன் வருந்துதல்—அது கண்ட வனதேவதை நீரில் மூழ்கி ஒரு தங்கக் கோடரியைக் கொணர்ந்து கொடுத்தல்—விறகுவெட்டி அதை வாங்க மறுத்தல்—பிறகு அவன் தவறவிட்ட கோடரியைக் கொணர்தல்—விறகுவெட்டி அதை வாங்கிக்கொள்ளுதல்—இதைக் கண்ட ஒரு பேராசைக்காரன் அவ்வாறே விறகு வெட்டச் சென்று கோடரியைத் தவறவிடுதல்—வனதேவதை முன்போலவே தங்கக்

கோடரி கொண்டு வருதல்—பேராசைக்காரன் அதைப் பெற்றுக் கொள்ளப்போய் நஷ்டமடைதல்.

2. மூன்று திருடர்கள் பணம் நிறைந்த ஒரு குடத்தை ஒரு கடைக்காரனிடம் கொடுத்துத் தாங்கள் மூவரும் சேர்ந்து வந்து கேட்டால் கொடுக்கவேண்டும்; மற்றப்படி ஒருவருக்கும் கொடுக்கக்கூடாதெனத் திட்டம் செய்தல்—திருடர்கள் பின் அருகிலிருந்த குளக்கரைக்குச் சாப்பிடச் செல்லுதல்—சாப்பிடும்போது குடிக்கத் தண்ணீரில்லாமல் தங்களுள் ஒருவனைக் கடைக்காரன் வீட்டிற்குச் சென்று ஒரு குடம் தண்ணீர் வாங்கிவரச் சொல்லுதல்—அவ்வாறே சென்ற திருடன் பணம் வைத்திருந்த குடத்தைக் கடைக்காரனிடம் கேட்டல்—கடைக்காரன் தர மறுத்தல்—திருடன் அங்கிருந்தபடியே 'கடைக்காரர் குடம் தரமாட்டேன் என்கிறார்' என உரத்துக் கூவுதல்—மற்றத் திருடர்கள் குடம் தரச்சொல்லுதல்—கடைக்காரன் கொடுத்துவிடுதல்—பிறகு மற்றத் திருடர்கள் திரும்பி வந்து, பணம் வைத்திருந்த குடம் போய்விட்டதை அறிந்து பஞ்சாயத்தாரிடம் வழக்குரைத்தல்—பஞ்சாயத்தார் நியாயமாகத் தீர்ப்புச் செய்தல்.

2. இலக்கணம்

1. **வினைமுற்று:**—முடிந்த பொருளைத் தெரிவிக்கும் வினைச்சொல் **முற்றுவினை** (வினைமுற்று) எனப்படும்.

(உ-ம்.) நடந்தான், போனாள், வருகிறார், வருவார்.

2. **வினையெச்சம்:**—**நடந்து** (வந்தான்), **போய்** (ப்பார்த்தாள்)—என்றாற்போல வருவன எச்சவினை (வினையெச்சம்—பொருள் முடியாத வினைச்சொல்) எனப்படும். இவை வினைச்சொலைக் கொண்டு முடிவதால் **வினையெச்சம்** எனப்படும்.

3. **பெயரெச்சம்:**—**நடந்த** (பையன்), **போன** (கிழவி)—என்றாற் போலக் குறைச்சொல்லாய் நின்று பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிவது **பெயரெச்சம்** எனப்படும்.

குறிப்பு:—வினைமுற்றுக்குத் திணை, பால், எண், இடம் உண்டு. ஆனால் எச்சங்கட்கு அவை இல்லை.

பயிற்சி

1. வந்தான், போனுள், படித்தார்கள், பாடினது, ஆடின—இவ்வினைமுற்றுகட்கு ஏற்ற வினையெச்ச - பெயரெச்சங்களைக் கூறு.
2. நின்ற, சென்று, செல்ல, வர, படித்த, எழுகின்ற—இந்த எச்சங்கட்கு உரிய வினைமுற்றுகளைக் கூறு.
3. படிக்கிற பையன் எழுந்து நின்று மரியாதை செய்தான், அவன் வந்தபொழுது நின்ற மாமனைப் பார்த்து நகைத்தான்—இவற்றில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.

வாக்கியம்	வினைமுற்று	வினையெச்சம்	பெயரெச்சம்
1.			
2.			
3.			

4. இந்தப் பாடத்தின் மூன்றும் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எழுது.
5. முதல் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்களைச் சொல்லு.
6. இரண்டாம் பிரிவில் உள்ள அளவை, எண்ணுப் பெயர்களைக் கூறு.
7. உடுக்கள், பலர், வந்தனர், வந்தன—ஒருமை எண் கூறு.
8. பலர், நீளுவது, தெரிந்து, பற்பல, அறிந்து, தெளிவாக—எதிர்ப்பதம் கூறு.
9. நான்காம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
10. ஒவ்வொரு பிரிவையும் மௌனமாகப் படி; சரியான தலைப்புக் கொடு.
11. பலர் காலத்தை அறிந்து வந்தனர்—ஒவ்வொரு சொல்லுக்கும் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.
    குறிப்பு:—வினைமுற்றுக்கு வேற்றுமை இல்லை; காலம் உண்டு.
12. இப்பாடத்தின் கருத்தைச் சுருக்கி 20 வரிகளில் கட்டுரை எழுது.



9. மயிலும் வான்கோழியும்

[பாட்டு]

1. மயிலின் அழகையே—கண்டதோர்
வான்கோழி முன்னொருநாள்
மயிலின் இறகினால்—தன்னையே
மறைக்க எண்ணியதே.

2. உதிர்ந்த இறகுகள்—எடுத்து
ஒட்டியே தன்னுடலில்
எதிர்ந்த இனத்தவர்—எவரையும்
எண்ணாது சென்றதுவே.

3. மயில்கள் கூட்டத்திலே—கலந்துதான்
மகிழ எண்ணியதே.
மயில்கள் தம்மினமா—அதனையே
வாவென் றழைத்தனவே.

4. நான்கைந்து நாட்களிலே—மயில்களே
நன்கு பழகியதால்
வான்கோழி என்றுணர்ந்தே—அதனையே
மடக்கி ஓட்டினவே.

5. சின்ன மயில்கள்சில—அதனையே
திட்டி அடித்தனவே.
பொன்னிற மாகவைத்த—இறகுகள்
போகத் துரத்தினவே.



6. பட்டதெல்லாம் மறந்தே—அதுதன்
பழைய கூட்டத்திலே
இட்டமொ டொட்டவந்தே—அவைகளால்
ஏளனம் பெற்றதுவே.

7. ‘ தலை கொழுத்தாயடா—உனக்கிங்கு
தங்கும் தகுதியில்லை.
நிலை கெடுத்தாயடா—மயிலென
நீயுந் திரிந்தாயடா.

8. ஒட்டிய இறகினுல்—மயிலென
உன்னை மதித்தவர் ஆர்?
கெட்டபயலே! உன்னை—எம்மிடம்
கிட்ட விடோமினியே.'

9. என்னவே வான்கோழிகள்—அதனையே
ஏசியே தள்ளினவே.
தன்னிலை கெட்டதனுல்—அது தன்
தலைம றைந்ததுவே.

10. இல்லாப் பெருமைகளால்—இனத்தினை
ஏய்க்க நினைப்பவர்கள்
பொல்லாத வான்கோழிபோல்—உலகினில்
பொட்டென் றழிந்திடுவார்.

1. கேள்விகள்

1. வான்கோழி செய்த குற்றம் என்ன?
2. அஃது அடைந்த தண்டனை என்ன?
3. இக்கதையால் விளங்கும் நீதி யாது?

2. இலக்கணம்

1. **முக்கால வினைமுற்றுகள்:—**
   (1) செய்தான், வந்தாள்—இறந்தகால வினைமுற்றுகள்.
   (2) செய்கிருன், வருகிருள்—நிகழ்கால ,,
   (3) செய்வான், வருவாள்—எதிர்கால ,,

2. **முக்கால வினையெச்சங்கள்:—**
   (1) செய்து, வந்து—இறந்தகால வினையெச்சம்.
   (2) செய்ய, வர—நிகழ்கால ,,
   (3) செய்யின், வரின்—எதிர்கால ,,

3. **முக்காலப் பெயரெச்சங்கள்:—**
   (1) செய்த, வந்த—இறந்தகாலப் பெயரெச்சம்.
   (2) செய்கின்ற, வருகிற—நிகழ்காலப் ,,
   (3) செய்யும், வரும்—எதிர்காலப் ,,

பயிற்சி

1. தின்றது, குளிக்கும், சொல்லும், படிக்கிறான், அருந்துவாய், வந்தேன், ஓடின—மற்ற இரண்டு கால வினைமுற்றுகளையும் சொல்லு.
2. பார்த்த, பேசி, எழுகின்ற, வரும் (பையன்), ஓடின, பார்த்து, எழுந்து, செய்யின்—இன்ன கால, இன்ன எச்சம் என்பதைக் கூறு.
3. அழகை, இறகினால், உடலில், அடா, காட்டுக்கு—வேற்றுமை உருபுகளைக் கூறு.
4. அழைத்தன, பெற்றது, அழிந்திடுவார்—திணை, பால், எண், இடம், காலம் கூறு.
5. இவ்வினைமுற்றுகட்கு உரிய பிற கால வினைமுற்றுகளையும் கூறு.
6. அழைத்தன, பெற்றது, அழித்திடுவார் } இவற்றுக்கு உரிய வினையெச்ச, பெயரெச்சங்களைக் கூறு.
7. வான்கோழி தவறு—மயில்கள் ஏசல்—நீதி: இக்குறிப்புகளைக் கொண்டு இக்கதையை 12 வரிகளில் எழுது.

---

10. கடிதங்கள்

குறிப்பு :—

1. கடிதத்தின் வலக்கை ஓரத்தில் எழுதுபவர் விலாசமும் தேதியும் இருத்தல் வேண்டும்.

2. கடிதத்தின் தொடக்கத்தில் வணக்கமோ ஆசீர்வாதமோ அவரவர் தகுதிக்கேற்ப எழுதுதல் வேண்டும்.

3. கடிதச் செய்திகள்.

4. எழுதுபவர் கையெழுத்து கடிதத்தின் முடிவில் வலக்கைப் பக்கம் இடுதல் வேண்டும்.

5. இடக்கைப் பக்கம் கீழே எழுதப்படுபவர் விலாசம் இருத்தல் வேண்டும்.

6. விலாசம் எழுதுகையில் வீட்டு எண், தெருப்பெயர், ஊர்ப்பெயர் இவற்றை அடுத்தடுத்துக் 'காமா' இடல் வேண்டும்.

கடிதத்தின் அடியில்,

1. உறவினர்க்கும் மிக நெருங்கிய நண்பருக்கும் 'உங்கள் அன்புக்குரிய' என்று எழுதவேண்டும்.

2. ஆசிரியர்க்கும் அதிகாரிகட்கும் 'உங்கள் கீழ்ப்படிதல் உள்ள' என்று எழுதவேண்டும்.

3. பெற்ருேர்க்கு 'உங்கள் அன்புள்ள' என்று எழுத வேண்டும்.

மாதிரிக் கடிதங்கள்

(1) பெற்ருேர்க்கு எழுதும் கடிதம்

20, தங்கசாலை வீதி,
சென்னை, 15-11-'41.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு வணக்கம்.

இங்கு எல்லாரும் நலம். அங்கு அம்மா, தம்பி முதலியோர் நலத்தை அறிய அவா. உங்கள் புத்திமதியின்படி நான் நன்ருக வாசித்து வருகிறேன். நான் பந்தய விளையாட்டில் மூன்று பரிசுகள் பெற்றேன். நீங்கள் இதைக் கேட்க மகிழ்ச்சி அடைவீர்கள் என்று கருதுகிறேன். நான் நவராத்திரி விழாவின்போது அங்கு வருவேன். பிற பின்.

இங்ஙனம் :
உங்கள் அன்புள்ள மகன்,
இ. இளங்கோ.

திருவாளர்,

மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள்,

10. கீழை இராஜ வீதி,

தஞ்சாவூர்.

(2) ஆசிரியர்க்குக் கடிதம்

15, தம்புசெட்டி தெரு,
சென்னை, 10-12-'41.

ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். நான் என் அக்காள் திருமணத்தை முன்னிட்டு மூன்று நாள் பள்ளிக்கூடம் வரக்கூடாதவனாக இருக்கிறேன். ஆதலால், தாங்கள் அன்புகூர்ந்து எனக்கு அம் மூன்று நாளும் விடுமுறை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் கீழ்ப்படிதல் உள்ள
மாணவன்,
மு. கமலநாதன்.

திருவாளர்,

க. வேல்முருகர் அவர்கள்,

6-ஆம் வகுப்பு ஆசிரியர்,

நகராண்மைப் பாடசாலை,

மண்ணடி, சென்னை.

(3) அழைப்பு இதழ்

25, பிராட்வே, சென்னை,
15-12-'41.

அன்புள்ள கண்ணா,

நலம். நீ நாளை என் வீட்டில் நடைபெற இருக்கும் திருமண விருந்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன். நீ வரத் தவறாதே. உன்னை எதிர்நோக்கி இருப்பேன்.

இங்ஙனம் :
உன் அன்புள்ள நண்பன், **சு. முருகேசன்.**

திருவாளர்,

மு. கண்ணன் அவர்கள்,

25, பாண்டி பஸார் ரோட்,

தியாகராயநகர், சென்னை.

(4) சென்னையைப்பற்றி விளக்கி, அதனைக் காணவரும்படி நண்பனுக்கு எழுதிய ஒரு கடிதம்.

15, தங்கசாலை வீதி,

சென்னை, 15—10—'41.

அன்புள்ள கோபாலா,

இங்கு யாவரும் நலம். அங்குள்ளவர் நலத்தை அறிவி. நீ வரும் கிறிஸ்மஸ் விடுமுறையில் சென்னைக்கு வருதல் நலம். உன் கல்விக்குத் துணை செய்பவையும் பொது அறிவை வளர்ப்பவையும் ஆகிய பல பொருள்களை இங்கே காணலாம். சென்னை, நமது மாகாணத்தின் தலைநகரம் அன்றோ? மாகாணத் தலைவராகிய கவர்னர் இங்குத்தான் இருக்கிறார். கடல் ஓரம் பெரிய உத்தியோக நிலையங்கள் இருக்கின்றன. கண்ணைக் கவரும் கட்டிடங்கள் பல இங்கு உண்டு. உயர்நீதி மன்றம், சட்டக் கல்லூரி, வைத்தியக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, கிறித்தவக் கல்லூரி, லயோலாக் கல்லூரி, மேரி ராணியார் கல்லூரி, வில்லிங்டன் சீமாட்டி கல்லூரி, கிறித்தவப் பெண்கள் கல்லூரி முதலியன காணத்தக்கவை. சென்னைப் பல்கலைக் கழகம் அவசியம் பார்க்கத் தக்கது. அதில் பல ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட பெரிய நூல் நிலையம் ஒன்று இருக்கின்றது.

அரசாங்கத்தார் ஆதரவில் இருக்கும் '**கன்னிமாரா நூல் நிலையம்**' என்பதும் இங்கு இருக்கின்றது. அதிலும் பல ஆயிரக் கணக்கான நூல்கள் அடுக்கடுக்காக இருக்கின்றன. அந்நூல் நிலையம் பொது மக்களுக்குப் பயன்படுவது. அஃது அமைதி நிலவும் ஆலயம் என்னலாம். அதனை அடுத்து, இறந்த உயிர்

களின் பாடஞ் செய்யப்பட்ட உடலங்களையும் உறுப்புகளையும் வேறு பல பொருள்களையும் கொண்ட **கண் காட்சிச் சாலை** ஒன்று உண்டு. அதில் பண்டைக்காலக் கருவிகள், சிலைகள், ஓவியம், சிற்பம் முதலியன சேமித்து வைக்கப்பட்டுள்ளன. '**மூர் மார்க்கெட்**'டை அடுத்து அழகிய பூங்காவில் உயிருள்ள விலங்குகளும் பறவைகளும் வைக்கப்பட்டுள்ள இடம் உண்டு. அதில் ஒட்டகம், யானை, ஒட்டைச்சிவிங்கி, மேனாட்டுப் பறவைகள் பல, விலங்குகள் பல வைக்கப்பட்டுள்ளன. அவை கண்டு மகிழத் தக்கவை. சென்னை **நகர சபைக் கட்டிடம்** 'ரிப்பன்' பிரபுவின் பெயரால் விளங்குகிறது. சென்னை கடற்கரை உலகத்திலுள்ள அழகிய கடற்கரைகளுள் இரண்டாவதாகும் என்று கூறப்படுகிறது; வெகு நீளமானது; அழகுடையது; ஒழுங்குடையது. அதன் கரையில் **மீன் காட்சிச் சாலை** ஒன்று இருக்கிறது. அதில் பலவகை நூதன மீன்கள் வைக்கப்பட்டுள்ளன. நாம் புத்தகத்தில் படிக்கும் பலவகை மீன்களை அங்குக் கண்ணால் கண்டு களிக்கலாம்.

சென்னையில் உள்ள பல **புகைவண்டி நிலையங்களில்** சிறந்தவை இரண்டு. ஒன்று எழும்பூர்ப் புகைவண்டி நிலையம்; மற்றது நடுப் (சென்ட்ரல்) புகைவண்டி நிலையம். முன்னது தென்னிந்தியா என்னும் கோட்டைக்கு அமைந்த 'வாசல்' எனக் கூறலாம். பின்னது வட நாட்டுக்கு அமைந்த 'வாசல்' என்னலாம். இவ்விரண்டு நிலையங்களிலும் இராப்பகலாகப் பிரயாணிகள் குழுமி இருப்பர். சென்ட்ரல் புகைவண்டி நிலையத்துக்கு எதிரே அரசாங்க வைத்தியசாலை ஒன்று மிகப் பெரிதாக விளங்குகிறது. அது பார்க்கத் தக்கது. அதற்கு எதிரில் இரயில்வே உத்தியோக நிலையம் பிரம்மாண்டமாகக் காட்சி அளிக்கிறது. கண் வைத்தியசாலை, மிருக வைத்தியசாலை, இருமல் வைத்தியசாலை, பித்த வைத்தியசாலை எனப் **பல வைத்தியசாலைகள்** சென்னையில் இருக்கின்றன.

சென்னை நகரம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிரிவுகளிலும் இயன்றவரை மின்சார வண்டி ஓடுகிறது. நீ அதைக் கண்டதில்லையே! 'ரிக்ஷா' வண்டி என்பது மனிதன் இழுப்பது. 'செயின்ட் ஜார்ஜ் கோட்டை' என்பது காணத் தக்கது. அதில் பழைய கிழக்கிந்திய வர்த்தகர் கட்டிய கோட்டை, கொத்தளங்கள், கோவில் முதலியன இருக்கின்றன. சென்னை மாகாணச் சட்டசபையும் அங்குத்தான் இருக்கிறது.

ஜார்ஜ் டவுனைச் சுற்றிப் பழைய காலத்தில் ஆங்கில வியாபாரிகள் அமைத்த கோட்டை இடிந்த நிலையில் உள்ளது. அங்கங்கே சாலைகளின் சந்தியில் பல பெருமக்களின் உருவச் சிலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. படக்காட்சிச் சாலைகள் சென்னையில் பல உண்டு. காணத்தக்க சிற்றுண்டிச் சாலைகள் பல. **துறைமுகம்** பார்க்கத் தக்கது. வெளி நாட்டுக் கப்பல்கள் பல வருவதும், சாமான்களை இறக்குவதும், ஏற்றிக்கொண்டு போவதும் கண்டு மகிழத்தக்க காட்சிகள். அங்குப் பல தேச மக்களைப் பார்க்கலாம். ஆதலால், நண்பனே, நீ அவசியம் சென்னைக்கு வரத் தவறாதே. உனக்கு எல்லா நலங்களும் உண்டாக இறைவனை வேண்டும்,

உனது நண்பன்,
க. கண்ணன்.

திரு. மு. கோபாலன்,
15, கீழை இராஜ வீதி,
தஞ்சாவூர்.

1. கேள்விகள்

1. உன் தம்பி, தங்கையரின் காது குத்தலைக் குறிப்பிட்டு விடுமுறை வேண்டி ஆசிரியர்க்கொரு கடிதம் எழுது.
2. உன் வீட்டு கிருகப்பிரவேசத்தைக் குறிப்பிட்டு உன் நண்பனுக்கு அழைப்புக் கடிதம் எழுது.
3. உன் ஒரு நாளைய வேலைகளைக் குறிப்பிட்டு உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.
4. உன் பள்ளிக்கூட வேலைகளைக் குறிப்பிட்டு உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

5. உன் வீட்டுத் தோட்டத்தை அல்லது பள்ளிக்கூடத் தோட்டத்தை விளக்கி உன் நண்பனுக்கொரு கடிதம் எழுது.
6. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழா ஒன்றை விளக்கி உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.
7. வெளியூருக்குப் போகவேண்டும் காரணத்தைக் குறிப்பிட்டு ஐந்து நாள் விடுமுறை வேண்டி உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.
8. உன் தமிழ்ப் புத்தகத்தைப் பற்றிய உன் கருத்தை வெளியிட்டு உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
9. விடுமுறையில் தன் கிராமத்தில் வசிக்கும் மாணவன் தனது கிராம அனுபவத்தைக் குறித்துத் தன் ஆசிரியருக்குக் கடிதம் எழுதும் முறையில் ஒரு கடிதம் எழுது.

2. இலக்கணம்

1. இறந்த கால இடைநிலைகள் :—'செய்தான்' என்பதைச் **செய்+த்+ஆன்** எனப் பிரிக்கலாம். இவற்றுள் (1) **செய்**—ஏவலைக் குறிக்கிறது. இது **பகுதி** என்று சொல்லப்படும்; (2) **ஆன்**—இது தொழில் செய்தவனைக் குறிக்கிறது. இது **விகுதி** என்று சொல்லப்படும். இவை இரண்டும் காலத்தை உணர்த்தவில்லை அல்லவா? எனவே, **த்** ஒன்றே காலத்தை உணர்த்துகிற உறுப்பு ஆகிறது. இது சொல்லின் இடையில் நிலையாக இருப்பதால் **இடைநிலை** எனப்படும்.

(1) இறந்தகால இடைநிலைகள்—**த், ட், ற், இன்.**

செய்தான் = செய்+த்+ஆன்.
உண்டான் = உண்+ட்+ஆன்.
கற்ருன் = கல் +ற்+ஆன்.
போயினுன் = போ+இன்+ஆன்.

(2) நிகழ்கால இடைநிலைகள்—**கிறு, கின்று, ஆநின்று.**

செய்கிருன் = செய்+கிறு+ஆன்.
செய்கின்ருன் = செய்+கின்று+ஆன்.
செய்யாநின்ருன் = செய்+ஆநின்று+ஆன்.

(3) எதிர்கால இடைநிலைகள்—ப், வ்.

செய்வான் = செய்+வ்+ஆன்.

காண்பான் = காண்+ப்+ஆன்.

பயிற்சி

1. முதல் கடிதத்தில் உள்ள வினைமுற்றுகளைச் சொல்; அவற்றில் உள்ள இடைநிலைகளைக் குறிப்பிடு.
2. அவற்றின் காலங்களைக் கூறு.
3. அவற்றில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு.

---

11. காலம் தவறாமை

'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பது ஒரு பழமொழி. ஒருவன் எடுத்துக்கொண்ட காரியத்தைக் குறித்த வேளையில் தவறாது செய்து முடிக்கவேண்டும் என்னும் உண்மையை இப் பழமொழி உணர்த்துகின்றது. செய்து முடிக்க வேண்டிய காரியத்தை உரிய காலத்தில் செய்யாமல், காலத்தைக் கழிப்பது வீண் கால தாமதமாகும். பலரிடம் இக் கால தாமதமென்னும் கெட்ட குணம் குடிகொண்டிருக்கிறது. அதனால் அவர்கள் பல நன்மைகளை இழக்க நேரிடுகிறது.

காலதாமதத்திற்கு முக்கிய காரணம் சோம்பலே ஆகும். அதனால் அவர்கள், 'நாளை-நாளை' என்று சொல்லிக்கொண்டே, செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் நாட்களைக் கழித்து விடுகின்றனர். ஆனால், தாங்கள் எடுத்த காரியம் முடிவடைய வில்லை என்று மட்டும் அவர்களே கூறி வருந்துகின்றனர். முதலில் தாங்கள் செய்யவேண்டிய காரியங்களை வகைப்படுத் திக்கொண்டு, செய்வதற்கேற்ற உபாயத்தால் செய்து வருவார்க ளானால், எந்தக் காரியமும் எளிதில் கைகூடும்.

ஒரு காரியத்தைத் தொடங்கினால், அதற்குத் தடையாகப் பல இடையூறுகள் ஏற்படுதல் கூடும். அன்றியும், சிலர் தமக்கு

ஏற்பட்ட வெறுப்பினுல், எடுத்த காரியத்தை நிறைவேற்றுமல் இருக்கின்றனர். நாளை செய்ய வேண்டும் காரியத்தை, அதனிடத்தில் உள்ள விருப்பினுல், "இன்றே செய்துவிடுவோம்" எனத் துணிகின்றனர்; பின் செய்ய வேண்டுவதை முன் செய்வதால், முதலில் எடுத்துக்கொண்ட காரியத்திற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. மறுநாள் செய்யவேண்டுவதை ஆத்திரத்துடன் முதல்நாளே செய்வதால் அக்காரியம் சீராக முடியாமற் போவதோடு, அன்று செய்து தீரவேண்டும் வேலையும் தடைப்படுகிறது. ஆகவே, இரண்டு காரியங்களும் சரிவர முடிவடையாமற் போகின்றன.

வேலையாள் ஒருவன், ஒரு முதலாளியிடம் வேலைக்கு அமர்கிறுன். அவன் தன் எஜமானனுடைய வேலைகளைச் சரிவரச் செய்து முடிக்கிறுன்; மேன்மேலும் அவன் இட்ட வேலைகளை எல்லாம் அவ்வப்பொழுதே செய்து முடித்து விடுகிறுன். இவ்வாறு முதலாளி இட்ட வேலைகளை அவ்வப்போது செய்து முடிப்பதால், அவன் முதலாளியின் அன்பைப் பெற இடம் உண்டாகிறது. ஆகவே, உரிய காலத்தில் அவ்வவ் வேலைகளைச் செய்து முடிக்கும் ஒவ்வொருவரும் இன்பத்தை அடைவர்.

அறிவும் ஊக்கமும் உடையவர், அவ்வக் காலங்களில் செய்ய வேண்டும் காரியங்களைத் தவறுது செய்கின்றனர். தொடங்கின காரியத்திற்குத் தடையாக வரும் இடையூறுகளையும் இவர்கள் பொருட்படுத்துவதில்லை. காரியம் முடிவு பெறும் வரையிலும் இவர்கள் சரீரசுகத்தையும் கவனிக்கமாட்டார்கள்; பசித்துன்பத்தையும் பொருட்படுத்தார்; உறங்கவும் மாட்டார். ஏனெனில், காரியம் முடிவடைதற்குரிய காலத்தைத் தவறவிடலாகாது என்பதே இவர்களுடைய எண்ணம்.

அறிவற்றவர்களோ, கற்கவேண்டும் பருவத்தில் கற்காமலும், பொருள் தேடவேண்டும் பருவத்தில் தேடாமலும்,

உறங்கவேண்டும் சமயத்தில் உறங்காமலும், உண்ண வேண்டும் சமயத்தில் உண்ணுமலும் சோம்பேறித்தனத்தால், காலத்தை வீணுகப் போக்குகின்றனர்; அதன் பின் காரியங்களைக் காலந்தவறிச் செய்வதால் பொருட்செலவும், பலவகையான துன்பங்களும் நேர்ந்து வருந்துகின்றனர்.

காலம் தவருமையை அனுசரிப்பது கடினமானதேயாம். ஆயினும், அதை இளமை முதலாகவே அனுசரிக்கப் பழகினுல், பிறகு எளிதாகிவிடும். அவ்வாறே காலதாமதம் என்னும் தீய குணத்தையும் ஒழிக்க வேண்டும். இல்லாவிடில், அது ஒழியாது. இவ்வாறு செய்வோமாயின், நாமும் சிறந்த நன்மைகளை அடைவதோடு, நம்மைச் சேர்ந்தவர்களையும் நலமுறச் செய்யலாம்.

இவ்விஷயத்தில் மேனுட்டார் அதிக ஜாக்கிரதையாக இருந்து வருகின்றனர்; குறித்த காரியத்தைக் குறித்த வேளையில் தவருமல் செய்து முடிக்கின்றனர். ஓர் இடத்திற்கு இன்ன காலத்தில் செல்லவேண்டுமென்று நிச்சயம் செய்திருந்தால், அவ்வாறே தவருமல் செல்லுவர்; ஒரு நிமிடங்கூட முன்பின்னுகச் செல்லமாட்டார்கள். காலதாமதம் செய்பவர்களைப் பார்க்க அவர்களுக்கு மிகவும் வெறுப்பா யிருக்கும். உரிய காலத்தில் தங்கள் வேலைகளைச் செய்து முடிக்கும் நற்பழக்கத்தாற்ருன் அவர்கள் செல்வத்திலும் நாகரிகத்திலும் பிறவற்றிலும் சிறப்புற்றிருக்கின்றுர்கள்.

சில சமயங்களில், காலதாமதஞ் செய்வதால் பொருட்கேடே அல்லாமல், உயிர்க்கேடும் ஏற்படுதல் உண்டு. இதற்கு உதாரணமாகப் பல கதைகள் கூறலாம்: முன்னெரு காலத்தில் **திருவாளன்** என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் பல வீரர்களை அடக்கி வெற்றிமாலை சூடினவன்; எல்லாராலும் புகழப்பெற்றவன். ஆயினும், அவனிடத்தில் காலதாமதம் என்னும் கெட்ட குணம் குடிகொண்டிருந்தது.

ஒருநாள், அவன் வேற்றூருக்குச் செல்லக் கருதியிருந்தான். அன்று காலையில் வெளியூரில் இருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில், "நீ செல்லும் வழியில் உன்னைக் கொல்வதற்கு வீரர் பலர் வாளுடன் இருக்கின்றனர். ஆதலின், தக்க சேனைகளுடனுவது, வேறு வழியாகவாவது நீ செல்ல வேண்டும்" என்று எழுதியிருந்தது. இவ்வாறு எழுதிய கடிதத்தை அரசன் திறந்து பாராமல், "பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று வைத்துவிட்டான். அதன் பின், தான் போக விரும்பிய இடத்திற்குச் சென்றுன்; எதிர் பாராத வீரர்களின் படையைக் கண்டான்; அவர்களுடன் எதிர்த்து நிற்க முடியாமல் உயிர் துறந்தான். அவ்வரசன் காலதாமதம் செய்யாமல் அக்கடிதத்தைப் பார்த்திருப்பாணுயின், உயிர் துறக்கும்படி நேர்ந்திருக்காதன்றே?

பிள்ளைகளே! காலத்தின் அருமையையும் அதை உணராமையால் வரும் கேடுகளையும் உணர்வீர்களாக! ஆதலின், நீங்கள் செய்யவேண்டும் காரியங்களை உரிய காலத்தில் திருத்தமுறச் செய்யப் பழகிக்கொள்ளுங்கள். அவ்வாறு பழகிக் கொண்டால், நீங்கள் பெருமை பெற்றுச் சுகமாக வாழலாம்.

1. அரும்பத விளக்கம்

பழமொழி - நீண்ட காலமாக வழங்கிவரும் சொல்; இடையூறு - துன்பம்; திருத்தமுற - ஒழுங்காக.

2. கேள்விகள்

1. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'—இப்பழமொழியின் பொருள் யாது?
2. சோம்பலால் உண்டாகும் கெடுதிகள் எவை?
3. விருப்பு, வெறுப்பு - இவற்ருல் உண்டாகும் தீமைகள் எவை?
4. வேலைக்காரன் எஜமானனிடம் எப்படி நடக்கவேண்டும்?
5. அறிவும் ஊக்கமும் உடையவர் எப்படி வேலை செய்வர்?

6. அறிவற்றவர் யாது செய்வர் ?
7. மேனுட்டார் பழக்கம் யாது?
8. திருவாளன் ஏன் கெட்டான் ?
9. நீ இப்பாடத்தால் உணர்வது யாது ?

3. இலக்கணம்

1. முருகன் பாடத்தைப் **படித்தான்.**—இதில் 'படித்தான்' என்னும் பயனிலே, 'பாடத்தை' என்பதைச் **செயப்படுபொருளாக** உடையது. எனவே, **படித்தான்** என்பது **செயப்படுபொருள் குன்ருு** (குறையாத) **வினை** எனப்படும்.

2. முருகன் **வந்தான்.**—இதில், 'வந்தான்' என்பது செயப்படு பொருளேப் பெருத பயனிலே. எனவே, இது **செயப்படுபொருள் குன்றிய** (இல்லாத) **வினை** எனப்படும்.

3. பரந்தாமன் **பாடினுன், பாடினுன்** வந்தான்.—இவற்றில், முதல் **பாடினுன்**—வினைமுற்று. இரண்டாம் **பாடினுன்**—எழுவாயாக வந்துள்ளது. இவ்வாறு, வினைமுற்று எழுவாயாகவோ, வேற்றுமை உருபுகளை ஏற்ருே (பாடினுனை, பாடினவனுல் என்ருற் போலவோ) வருதல் **வினையால் அணையும் பெயர்** எனப்படும். இப் பெயர் மூன்று இடங்களிலும் ஐந்து பால்களிலும் வரும்.

பயிற்சி

1. சென்றது, அழைத்தன, ஓடுவேன், செய்கிருர், நினை, வா.—இவற்றைப் பின்வரும் கட்டத்தில் எழுது.

எண்	செயப்படுபொருள் குன்றியவினை	செயப்படுபொருள் குன்ருவினை
1.		
2.		
3.		
4.		
5.		
6.		

2. அவன் வந்தான், வந்தானைக் கண்டேன், அவள் பார்த்தாள், பார்த்தவளுக்குக் கொடு, நான் வந்தேன், வந்தானோடு வா, அவர் அழைத்தார், அழைத்தவரிடம் பணம் இருக்கிறது, அது ஓடுகிறது, ஓடுகிறதை அடியாதே.—இவற்றில் வினைமுற்றுகள் எவை? வினையால் அணையும் பெயர்கள் எவை ?

எண்	வினைமுற்று	வினையால் அணையும் பெயர்
1.		
2.		
3.		
4.		
5.		
6.		

3. இப்பாடத்தின் மூன்று, நான்காம் பிரிவுகளில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

4. ஐந்து, ஆறும் பிரிவுகளில் உள்ள முக்கால வினைமுற்றுகளைச் சொல்லு.

5. அவற்றில் உள்ள இடைநிலைகளைக் கூறு.

6. ஏழாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்ச, பெயரெச்சங்களைக் குறிப்பிடு.

7. எட்டாம் பிரிவில் இருக்கும் அறுவகைப் பெயர்களைத் தெரிவி.

8. ஒன்பதாம் பிரிவில் இருக்கும் ஐம்பால் பெயர்களைக் கூறு.

9. பத்தாம் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சொல்லு.

10. பதினோரும் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றுவினை, செயப்படுபொருள் குன்றிய வினைகளைக் கூறு.

11. ஒவ்வொரு பிரிவையும் படி; தகுந்த தலைப்புக் கொடு.

12. இப்பாடத்தைச் சுருக்கி 20 வரிகளில் எழுது.

13. ஆடு, நில், அஞ்சு, நட, பார், வா.—எதிர்ப்பதம் கூறு.

14. காலதாமதம், விரும்பினுல், முதலாளி, சரீரசுகம், பொருட்செலவு—இவற்றை உன் சொந்த வாக்கியங் களில் அமைத்து எழுது.

15. கேள்விகளாக மாற்று :—
(1) நான் வரக்கூடும். (2) நீ இதனை அறிவாய். (3) அவள் அங்குச் சென்ருள். (4) நான் பார்க்கவில்லை.

---

12. காகிதம்

பண்டைக் காலத்தில் நம் முன்ஞேர் சாதாரணமாக எழுது வதற்குப் பனை ஓலையைப் பயன்படுத்தி வந்தனர். கருங்கல்லி லும், செம்பு, பித்தளை முதலிய உலோகங்களாலாகிய தகடுகளி லும் சாஸனம் முதலிய சாஸ்வதமான விஷயங்களை எழுதி வந் தனர். காகிதம் செய்யத் தெரிந்தபின், தற்போது அதில் எழுதி வருகின்றனர். பின்னும் அச்சு யந்திரம் ஏற்படவே, சொற்ப காலத்தில் ஏராளமான புத்தகங்கள் அச்சாகி வெளிவருகின் றன. அம்முறை, மக்கள் தம் அறிவைப் பெருக்கிக்கொள்ள மிகுந்த உதவியாக இருக்கிறது.

முதன் முதல் காகிதம் செய்யும் முறையைக் கண்டறிந் தவர் **சீனர்கள்** ஆவர். அவர்கள் கோரைப்புல், மூங்கில், பழம்பட்டு, கந்தைத்துணி, சணல்நார் முதலியவற்றையும், 'பாபிராஸ்' என்னும் செடிகளையும் அரைத்துச் சுத்தஞ் செய்து காகிதமாகச் செய்தனர். இம்முறையைச் சீனர்களிடமிருந்து அரபியர் தெரிந்துகொண்டனர். அதன்பின் பற்பல தேசத்தவ ரும் அம்முறையை அறிந்து, தங்கள் தங்கள் நாடுகளில் காகிதம் செய்யத் தொடங்கினர். பிறகு நாளடைவில் எல்லா நாடுகளி லும் காகிதம் செய்யுந் தொழில் பரவலாயிற்று.

காகிதம் செய்யும் இயந்திரம் ஏற்படுவதற்குமுன், சீனர் கள் கையினுல் அத்தொழிலைச் செய்து வந்தனர். அதைப்

படியெனின், முதலில் கந்தைத் துணி, சணல்நார் முதலியவற்றைக் கொண்டுபோய்ச் சிறு சிறு துண்டுகளாக வெட்டுவர். பிறகு, அத்துண்டுகளைத் தண்ணீரில் ஊறவைத்து, உரலில் போட்டு இடித்துத் தூளாக்குவர். பிறகு, அவற்றைச் சுத்தஞ் செய்வதற்காகப் பலமுறை தண்ணீர் விட்டு அலசுவர். அதன் பின் அவற்றில் சுண்ணும்பு கலந்த நீரைவிட்டுச் சில தினங்கள் வைப்பர். அதனுல் அது குழம்புபோலாகும். பிறகு, அக்கூழைச் சல்லடைக் கண் போன்ற துவாரங்களுடைய சட்டங்களில் விடுவர். அச்சட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காகித அளவாகவே இருக்கும். சட்டங்களில் கூழ் பரவலாக ஆனவுடன், அவற்றிலுள்ள நீர் வடிந்து போவதற்காகச் சாய்த்துச் சிறிது நேரம் வைத்திருப்பர். அதன்பின் கூழாடையின்மீது அரிசி மாவு கலந்த நீரைத் தெளிப்பர். அந்த நீர் காய்ந்தவுடன், அவற்றை ஒரே சமமாக்குவதற்குக் கற்களாலும் கண்ணுடிகளாலும் ஆகிய உருளைகளை அவற்றின்மீது உருட்டுவர். அதன்பின் மழமழப்பு ஏற்றுவதற்காகப் பலமுறை கற்களைக் கொண்டு தேய்ப்பர். பிறகு, அவற்றை ஒன்றின்மீதொன்ருக அடுக்கிக் கட்டுவர். அவ்வாறு கட்டப்பட்டவற்றை உள்நாட்டில் பல இடங்களுக்கும், பிற நாடுகளுக்கும் அனுப்புவர்.

மேற்கண்ட முறையால் காகிதம் செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. இதனை அறிந்த ஹாலந்து தேசத்துப் பெரியார் ஒருவர், ஓர் இயரந்திரத்தைச் செய்ய முயன்று அவ்வாறே ஒன்றைச் செய்தார்; அவ் வியந்திரத்தால ஒரே நீளமுள்ள காகிதங்களைச் செய்து காட்டினுர். அதிலிருந்து பல நாடுகளில் அவ்வியந்திரங்களை வாங்கிக் காகிதங்கள் செய்யத் தொடங்கினர்.

அவ்வியந்திரத்தில் ஒரு பக்கத்தில் சணல், கந்தைத் துணி முதலியவற்றைப் போடுவர். அவை எல்லாம் நன்ருக மாவாக்கப்பட்டு, மற்ருெரு தொட்டியிற் போய்ச் சேரும்.

பிறகு, அது அத்தொட்டியில் சுண்ணும்பும், திராவகமும் கலந்த நீரால் சுத்தமாக்கப்பட்டுக், கூழாகிச் சல்லடைக் கண் கள் போன்ற துவாரங்களுடைய சட்டத்தின்மீது செல்லும்.



காகிதக் கூழ் தயார் செய்தல்.

அதன்பின், அது மிகவும் நுண்மையான துவாரங்க ளுடைய மற்ருெரு சட்டத்தின்மீது பரவும். அந்தச் சட்டம் அங்கும் இங்கும் அசைந்துகொண்டே செல்லும். அதனுல் அதன்மீதுள்ள கூழானது சமமாகப் பரவுகின்றது. அப் பொழுதே அக்கூழிலுள்ள நீரும் கீழே வடிந்துபோகின்றது. பிறகு எஞ்சிய கூழ் மாத்திரம் மிருதுவான ஆடைபோல் சட் டத்தின்மீது படிகின்றது. இவ்வாறு சட்டத்தின்மீது செல்லச் செல்ல அதிலுள்ள நீரெல்லாம் வறண்டுபோகும். பின்பு அதி லுள்ள அற்ப நீரும், கம்பளி சுற்றிய உருளேகள் அதன்மீது அழுந்துவதால் நீங்கும். இதற்குப் பிறகு, அது கம்பளி விரிக் கப்பெற்ற சட்டத்தின்மீது செல்லும்; பின்னர், நீராவியால்

சூடேற்றப்பட்ட உருளைகளுக்கிடையிற்போகும்; அப்பொழுது மேடு பள்ளம் இல்லாமலும் நீர்ப்பசை இல்லாமலும் மாறும்; பின்பு, ரூல்தடி போன்ற பெரிய கம்பிகளில் சுற்றிக்கொள்ளும். இவ்வாறு சுற்றியவற்றை எடுத்து, வெட்டும் இயந்திரங்களால் வேண்டும் அளவுக்குத் தக்கபடி வெட்டிக்கொள்ளுவர். இம்



காகிதம் உருளையில் சுற்றிக்கொள்ளுதல்

முறையால் ஒரு நிமிடத்தில் இருபத்தைந்து சதுர அடி அளவுள்ள காகிதத்தை இலகுவிற் செய்யலாம்.

காகிதம் செய்கின்ற கூழில் பல விதமான சாயங்கள் சேர்க்கப்பட்டு வர்ணக் காகிதங்களும் செய்யப்படுகின்றன. புல், இலை, கந்தல், வைக்கோல் முதலியவற்றாலும் காகிதங்கள் செய்யலாம். எனினும், அக்காகிதங்கள் உறுதியும் மழமழப்பும் உடையன அல்ல. சணல்நார், மூங்கில் முதலியவற்றால்

செய்யப்படும் காகிதங்களே உறுதியும் வழவழப்பும் உடையன வாகும். அதிலும், சீன தேசத்தில் செய்யப்படும் காகிதங்கள் மிகச் சிறந்தவை. நாம் உபயோகிக்கின்ற கரடு முரடான காகி தங்களும், பளபளப்புடன் வழவழப்பாயிருக்கும் காகிதங்களும், நெருப்புப் பட்டாலும் கரிந்து போகாத கால் அங்குல கன முள்ள காகிதங்களும், தண்ணீர் ஒட்டாதபடி எண்ணெய் பூசப்பட்ட காகிதங்களும் ஆகிய இவை எல்லாம் சீனர் களால் செய்யப்படுகின்றன. இக்காகிதங்களையே பத்திரம் முதலியன பதிவதற்கும், புத்தகங்கள் பதிப்பிப்பதற்கும், பிற வற்றிற்கும் நாம் உபயோகிக்கிறோம். தற்காலத்தில் நம் இந்தி யாவின் பல பாகங்களில், இத்தகைய காகிதங்கள் செய்யப் படுகின்றன,

காகிதம் செய்யும் ஒவ்வொரு கம்பெனியாரும், தங்கள் பெயர்களையோ வேறு அடையாளங்களையோ காகிதங்களில் தீட்டிவைப்பது வழக்கம். அவற்றால், இன்ன காலத்தில் இன்னரால் இக் காகிதம் செய்யப்பட்ட தென்பதை அறிந்து கொள்ளலாம். அன்றியும், அந்த அடையாளங்களால் எந்தக் காரியத்திற்கு எந்தக் காகிதத்தை உபயோகிக்க வேண்டும் என்பதையும் உணரக்கூடும். காகிதத்தின் முன் புறத்தில் வெளிச்சம் படும்படியாகத் தூக்கிப் பிடித்தால், அவ்வடை யாளங்களையும் பெயர்களையும் காணலாம். அவற்றை 'நீரெழுத்துகள்' **(Water Mark)** என்று கூறுவர். இந் நீரெழுத்துகளை அரசாங்கத்தார் பதிப்பித்திருக்கிற 'கரன்ஸி' நோட்டுகளிலும் காணலாம்.

ஜப்பான், சீனம் முதலிய நாட்டிலுள்ளவர்கள், எல்லா வற்றிற்கும் காகிதங்களையே உபயோகிக்கின்றனர்; காகி தங்களினாலேயே தொப்பிகளும் குடைகளும் செருப்புகளும் செய்கின்றனர். அவை பார்ப்பதற்கு அழகாகவும் உறுதி

யாகவும் இலேசாகவும் விலையிலும் மிகக் குறைவாக வும் இருக்கின்றன. ஜப்பானியர், தாம் வசிக்கும் வீடுகளையும் காகிதங்களினுலேயே அமைத்துக்கொள்ளுகின்றனர். அவ்வீடு கள் வெயிலாலும் மழையாலும் கெட்டுப்போகாமல் இருக்கின் றன. அத்தகைய வீடுகளையும் மிகவும் குறைந்த செலவில் விரைவாகக் கட்டிவிடுகின்றனர். சீன தேசத்தவர்கள், காகி தங்களினுலேயே மெல்லிய உடைகளைச் செய்துவிடுகின்றனர். நம் நாட்டில் பார்க்கும் காகிதத்தாலாகிய விளையாட்டுக் கருவி களும், அலங்காரமான புஷ்பத் தோரணங்களும் ஜப்பான், சீன தேசத்தவர்களால் செய்யப்பட்டனவாகும். காகித வேலை யினுலேயே அவர்கள் பெரும் பொருளைத் தேடிக்கொள்ளு கின்றனர்.

ஒரு காலத்தில் ஜெர்மனி நாட்டிற்குப் பிற நாடுகளிலிருந்து பருத்தி செல்லாமையால், அங்கு உடைப் பஞ்சம் ஏற்பட்டது. அக்காலத்தில், ஜெர்மானியர் தங்கள் உடைகள் அனைத்தையும் காகிதங்களினுலேயே செய்துகொண்டனர். அவ்வாடைகள் பருத்தி உடைகளைக் காட்டிலும் மெல்லியவையாயும், சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றனவாயும் இருந்தனவாம். இது போலவே, பிற நாட்டவரும் தங்களுக்கு வேண்டும் சௌகரியங் களைக் காகிதங்களால் செய்துகொள்கின்றனர். அமெரிக்கர்கள் காகிதங்களினுலும் அட்டைகளினுலும் நாற்காலிகள், மேஜை கள், பெட்டிகள் முதலியன செய்கின்றனர். இவற்ருல், காகி தம் எவ்வளவு உபயோகமான பொருள் என்பது தெரிகின்றது அன்ருே?

1. அரும்பத விளக்கம்

சாசுவதம் - அசையாநிலை; சாசனம் - பத்திரம்; தீட்டி-எழுதி; எஞ்சிய - மிகுந்த; சௌகரியம் - சுகம், வசதி. (கூழ்+ஆடை = கூழாடை; எள்+நெய்=எண்ணெய்.)

2. கேள்விகள்

1. முதன்முதலில் காகிதம் செய்யும் முறையைக் கண்டறிந்தவர் யார்? அவர்கள் எந்தெந்தப் பொருள்களால் காகிதம் செய்தனர் ?
2. காகிதம் செய்யும் இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் எத்தேயத்தினர் ?
3. கையினுல் காகிதம் செய்யும் விதத்தைப் பற்றிக் கூறு.
4. பல வகையான காகிதங்கள் யாவை ? அவை எவ்வாறு செய்யப்படுகின்றன ?
5. நீரெழுத்துகள் என்பன யாவை ?
6. ஜெர்மானியர் தமக்கேற்பட்ட உடைப் பஞ்சத்தை எவ்வாறு போக்கிக்கொண்டனர் ?

3. இலக்கணம்

1. இடைச்சொல்:—பெயர், வினைகளின் இடையில் நிற்கும் சொல் இடைச்சொல்.

இடைச்சொற்கள்:—(1) ஐ, ஆல் முதலிய வேற்றுமை உருபுகள்.
(2) போல முதலிய உவமை உருபுகள்.
(3) அ,இ,உ என்னும் சுட்டுஎழுத்துகள்.
(4) எ,யா,ஆ,ஓ,ஏ என்னும் வினு எழுத்துகள்.
(5) ஐயோ, அடடா முதலிய இரக்கம் குறிக்கும் சொற்கள் முதலியன.

இப்பாடத்தில் வந்துள்ள இடைச் சொற்களை எடுத்து எழுது.

2. உரிச்சொல்:—சால, உறு, தவ, நனி, கழி - இவை உரிச்சொற்கள். இவை 'மிகுதி' என்னும் பொருளை உணர்த்தும். இவை பெயர், வினைகளை அடுத்தே வரும்.

(உ-ம்.) இது ஒரு தவப் பிஞ்சு. அவன் சால உழைக்கிறுன்.

கழி, உறு, நனி-இவ்வுரிச்சொற்களை வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

3. தோன்ரு எழுவாய்:—சில வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாகத் தோன்றி நிற்கும்; சில வாக்கியங்களில் மறைந்து நிற்கும். மறைந்து நிற்கும் எழுவாய்க்குத் தோன்ரு எழுவாய் என்று பெயர்.

(உ-ம்.) தாயே, உம்மையும் வணங்குகிறேன். - இதில் நான் என்ற எழுவாய் மறைந்து நிற்கின்றது.

1. தோன்ரு எழுவாய் தோன்றக் கீழ்வரும் வாக்கியங்களை எழுது:—

(1) கங்கையைக் கடக்கத் துணை புரிவாய்.

(2) இங்கேயே பன்னசாலை அமைத்துத் தருகிறேன்.

(3) அரசே! என்னை அழைத்துப்போக வேண்டும்.

பயிற்சி

1. இப் பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.
2. இரண்டாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுது.
3. மூன்றும் பிரிவில் உள்ள மூவிடப் பெயர்களைக் கூறு.
4. நான்காம் பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களை எழுது.
5. ஐந்தாம் பிரிவில் உள்ள தொடர்மொழி, தனிமொழிகளைக் கூறு.
6. ஆரும் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளை எழுது.
7. ஏழாம் பிரிவில் உள்ள வினைவிற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.
8. எட்டாம் பிரிவில் உள்ள முக்கால வினைமுற்றுகளையும் முக்கால எச்சங்களையும் எழுது.
9. ஒன்பதாம் பிரிவில் உள்ள செயப்படுபொருள் குன்றிய வினை, குன்ரு வினைகளைக் கூறு.
10. பத்தாம் பிரிவில் உள்ள இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் எழுது.
11. போனவன், வந்தவனை இருந்தவனுக்குக் காட்டிப் பாடினவனேடு போனுன்.—இதில் உள்ள வினைமுற்று, வினையால் அணையும் பெயர்கள் எவை?

13. பொற்கைப் பாண்டியன்

பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாடு சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்ருகப் பிரிந்திருந்தது. சேர நாட்டைச் சேர மன்னர்களும், சோழ நாட்டைச் சோழ அரசர்களும், பாண்டிய நாட்டைப் பாண்டிய வேந்தர்களும் ஆண்டு வந்தனர். இவர்களே தமிழ் நாட்டு 'முடியுடை மூவேந்தர்' ஆவர்.

இம் மூவேந்தருள் பாண்டிய அரசர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு நீதி தவருமல் அரசு செலுத்தினர். அவர்களுள் **குலசேகர பாண்டியன்** என்பவன் மிக்க நீதிமான். குடிகளைக் காப்பாற்றுவதில் அன்னை போன்றவன். ஆகையால், குடிகளும் அவனிடம் அதிக அன்புடையவர்களாக இருந்தனர்.

குலசேகர பாண்டியன் தினந்தோறும் நள்ளிரவில் மாறு வேடம் பூண்டு நகர சோதனைக்குப் போவது வழக்கம். அவ்வாறு செல்பவன், தெருக்கள்தோறும் சென்று, ஆங்காங்குக் குடிகள் தன் ஆட்சியைப்பற்றி என்ன பேசிக்கொள்ளுகிருர்கள் என்பதைக் கவனிப்பான். அவர்கள் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசும் இடங்களில், அவன் அதிகமாக நின்று கேட்க மாட்டான்; தன்னைப்பற்றிக் குறை கூறுமிடங்களில் அவன் நின்று, அதனை உற்றுக் கேட்டு, மறுநாளே அக்குறையைப் போக்க முயல்வான்.

ஒரு நாள் வழக்கம் போல அவன் நகர சோதனைக்காகப் புறப்பட்டுப் பிராமணர் வசிக்கும் தெருவினுட் புகுந்து சென்ருன். அங்கு ஒரு பிராமணர் வீட்டில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருக்கக் கண்டு, அதனருகே சென்று பார்க்க, உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. மன்னன் அதனைக் கவனித்தான்.

அப்போது அவ்வீட்டிற்கு உடையவனான **கீரந்தை** என்ற பிராமணர், தன் மனைவியை நோக்கிப், "பெண்ணே! நான் காசி யாத்திரை செய்ய விரும்புகிறேன் ; யான் யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பி வருமளவும் நீ இங்கேயே பத்திரமாக இருப்பாயாக!" என்று கூறினார். அதற்கு அவர் மனைவி, "நாதா! நான் தங்களைப் பிரிந்து எப்படித் தனியே இருப்பேன்? தங்கள் கட்டளைப்படி நான் சாக்கிரதையாக இருந்தாலும், எனக்கு மற்றவர்களால் துன்பம் நேரிடாமல் என்னைக் காப்பவர் யார்? ஆகையால், அன்புகூர்ந்து என்னையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்!" என்று வணக்கமாக மறுமொழி கூறினாள். அதற்கு அம்மறையோர், "பெண்ணே! காசிக்குப் போய் வருவதென்பது எளிய காரியமன்று; வழியோ நீண்டது ; ஆபத்துகளுக்கு இடமானது; மேலும், பெண்களை அழைத்துச் செல்வது மிக்க துன்பத்திற்கிடமாகும். ஆகையால், நீ சுகமாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு சாக்கிரதையாக இரு ; செங்கோலனான நமது குலசேகர பாண்டியன் இருக்கும்போது உனக்கு என்ன பயம்?" என்று அவளுக்குத் தைரியம் சொன்னார். பிள்ளைகளே, அவருடைய நம்பிக்கையைப் பார்த்தீர்களா ?

வாசலில் நின்று இவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த அரசன், "ஆகா, நம் குடிகளுக்கு நம்மிடத்தில் எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது!" என்று எண்ணி ஆச்சரியப்பட்டான் ; "இம் மறையோர் திரும்பி வருமளவும் இப் பார்ப்பனியை எவ்வாறு காப்பாற்றுவது? இவளுக்கு மட்டும் தனிப்பட ஏதாவது நன்மை செய்தால், அது பழிப்புக்கு அல்லவோ இடமாகும்!" என்று பலவாறு எண்ணிக் கொண்டே தன் அரண்மனைக்குச் சென்றான்.

பிறகு பிராமணரும் காசிக்குச் சென்றார். மறுநாள் முதல், அரசன் அந்தத் தெருவிலுள்ள எல்லா மறையோர்

வீடுகளுக்கும், தான் முதல் நாள் இரவு நின்று உற்றுக் கேட்ட வீட்டுப் பார்ப்பனிக்குச் செய்ய விரும்பியபடி உதவி செய்யுமாறு தனது மந்திரிக்குக் கட்டளை இட்டான். இதனால் அந்தத் தெருவிலிருந்த மறையவர் எல்லோரும், படியரிசி முதலியன பெறலாயினர். இதைத் தவிர, அவ்வரசன் மாறு வேடம் தரித்து எவரும் அறியாதவாறு இராக்காலங்களில் அவ்வந்தணரது வீட்டைக் காவல் புரிந்து வந்தனன். இவ்வாறு நாட்கள் பல சென்றன.

ஒரு நாள் அரசன் வழக்கம்போலக் காவல் புரியச் சென்ற போது, அவ்வந்தணரது வீட்டினுள்ளே யாரோ ஆடவர் ஒருவரது பேச்சுக் குரல் கேட்டது. உடனே கொற்றவன் திடுக்கிட்டு, எவனோ ஒரு அந்நிய புருஷன் அந்த வீட்டில் நுழைந்துவிட்டான் என்று எண்ணி, அதைச் சோதிக்க விரும்பிக் கதவைத் தட்டினான். காசிக்குப் போய் அன்றுதான் திரும்பிவந்த அவ்வீட்டுக்கு உரியவரான வேதியரே அப்போது உள்ளிருந்தவர் ஆதலால், அவர், "யார் கதவைத் தட்டுகிறது?" என்று உரத்துக் கேட்டார்.

அந்தக் குரலோசையால், உள்ளே இருப்பவர் அந்நிய புருஷர் அல்லர்; முன்பு காசியாத்திரை சென்ற மறையோரே அவர் என்பதை அரசன் அறிந்துகொண்டான்; தான் யோசியாது கதவைத் தட்டியதற்காக வருத்தமடைந்தான்; 'அந்தோ! இதனால் அவ்வேதியனுக்குக் கற்புடைய அவனது மனைவி மீது ஐயம் உண்டாகும்படி செய்துவிட்டோமே!' என்று நினைத்து, அப்பிராமணருக்கு ஏற்பட்ட சந்தேகம் நீங்கும் பொருட்டு, அந்தத் தெருவிலுள்ள ஒவ்வொரு வீட்டு வாயிற் கதவையும் தட்டிக்கொண்டே சென்று தன் இருக்கையை அடைந்தான்.

மறுநாட் காலையில், அவ்வீதியிலுள்ள மறையவர் யாவரும் ஒன்றுகூடி அரசனது சபைக்குச் சென்று, முன்னாள் இரவில்

தங்கள் வீட்டு வாயிற் கதவுகளை எல்லாம் எவனோ ஒரு கள்வன் தட்டியதாகவும், அவனைக் கண்டுபிடித்துத் தக்கவாறு தண்டிக்கவேண்டுமென்றும் அரசனிடம் முறையிட்டுக் கொண்டனர்.

அது கேட்ட கொற்றவன், "சரி! அங்ஙனமே அக் கள்வனைக் கண்டுபிடித்துத் தக்கவாறு தண்டிப்போம். அவனுக்கு என்ன தண்டனை விதிக்கத்தகும்? நீதிச்சட்டங்களை ஆராய்ந்து சொல்லுங்கள்" என்றனன். மறையோரும் பல நூல்களை ஆராய்ந்து, "அவன் செய்கையால் யாதொரு தீங்கும் நேரவில்லை ஆதலால், அவனுக்குக் கொலைத் தண்டனை விதிப்பது கூடாது. ஆயினும், தகாத செய்கை செய்தானாதலால், தண்டிக்காமல் விடுவதற்கும் இடமில்லை; ஆதலால், குற்றம் செய்த அவனது கையை வெட்டி விடுவதே தகுதியாகும்," என்றார்கள்.

அவர்கள் இப்படிச் சொன்னதும், காவலன் சற்றும் தயங்காமல் தன் உடைவாளை எடுத்துத் தன் கையை வெட்டிக் கொண்டான். உடனே ஆங்கு இருந்தார் அனைவரும், "ஆ! ஆ!" என்று அலறி, "ஐயனே யாது செய்தீர்? யாது செய்தீர்?" என்று கூவினர். அரசன் நிகழ்ந்தது கூறி, "நான் ஆராயாமல் அவசரப்பட்டுச் செய்த தீவினைக்கு இது தக்கதே!" என்றான். மறையோர், "ஐயோ! நாம் ஆலோசியாமல் இவ்வாறு கூறி இப்பாதகத்தைச் சுமந்தோமே!" என்று மிகவும் மனம் வருந்தினார்கள்.

அப்பொழுது சபையினர், அரசன் நீதி முறைமையை வியந்தனர். நகர மாந்தர் அதனை அறிந்து அரசனைப் பலவாறு புகழ்ந்தனர். அரசன் வெட்டுண்ட கைக்குப் பொருந்துமாறு பொற்கை ஒன்று அமையப்பெற்று விளங்கினான்; அதனால், அன்று முதல் '**பொற்கைப் பாண்டியன்**' என்று அழைக்கப்பட்டான். பிள்ளைகளே, நீதி தவறாத மன்னனைக் காட்டிலும் ஒரு நாட்டிற்குக் கிடைக்கத்தக்க பேறு வேறு யாது இருக்கின்றது?

1. அரும்பத விளக்கம்

செங்கோலன் - நீதி தவருமல் ஆள்பவன் ; கொற்றவன்-வெற்றிக்கு உரியவன் (அரசன்); மன்னன்-நிலைபெற்றவன் (அரசன்); வேதியர், மறையவர் - வேதங்களில் வல்லவர் (பிராமணர்).

2. கேள்விகள்

1. முடியுடை மூவேந்தர் யாவர் ?
2. குலசேகர பாண்டியன் எத்தகையவன் ?
3. 'மன்னன் அதனைக் கவனித்தான்.'—எதனை? ஏன் ?
4. கீரந்தை தன் மனைவியிடம் யாது சொன்னார் ?
5. அது கேட்ட அரசன் யாது எண்ணினான் ?
6. அரசன் அன்று முதல் யாது செய்து வந்தான் ?
7. 'யார் கதவைத் தட்டுகிறது ?'—சந்தர்ப்பம் என்ன ?
8. அரசன் அந்தணன் கவலையை மாற்ற யாது செய்தான் ?
9. மறையவர் அரசனிடம் யாது கூறி முறையிட்டனர் ?
10. மறையவர் எதனால் என்ன தண்டனை விதிக்குமாறு கூறினர் ?
11. 'ஐயனே, யாது செய்தீர் ?'—சந்தர்ப்பம் யாது ?
12. 'பொற்கைப் பாண்டியன்'—பெயர்க் காரணம் யாது ?

3. இலக்கணம்

பெயர்ச்சொற்களைப் போலவே வினைமுற்றுகளும் இருதிணை, ஐம்பால், மூவிடங்களை உணர்த்தும். ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண் இடங்களில் ஒத்து நிற்கும்.

(உ-ம்.) நான் காலம் தவற மாட்டேன். - தன்மை ஒருமை.

நாங்கள் ஊக்கத்தோடு வேலை செய்வோம். - தன்மைப் பன்மை.

நீ எந்தக் காரியத்தையும் குறித்த காலத்தில் செய்.— முன்னிலை ஒருமை.

நீங்கள் வெற்றி பெறுவீர்கள் - முன்னிலைப் பன்மை.

வேலையாள் முதலாளியிடம் வேலைக்கு அமர்கிறான்.— (படர்க்கை) ஆண்பால்.

அவள் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தாள்.—(படர்க்கை) பெண்பால்.

சோம்பேறிகள் காரியங்களைத் தாமதமாக முடிப்பர். —(படர்க்கை) பலர்பால்.

எறும்பு எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கின்றது.—(படர்க்கை) ஒன்றன்பால்.

சோம்பேறியின் காரியங்கள் சரிவர முடிவடையாமல் போகின்றன.—(படர்க்கை) பலவின்பால்.

பயிற்சி

1. பின் வரும் வாக்கியங்களில் பயனிலைக்கு ஏற்றவாறு எழுவாயையும், எழுவாய்க்கு ஏற்றவாறு பயனிலையையும் அமைக்க:—

   (1) நீ வீண் காலம் —.

   (2) அவர்கள் பல நன்மைகளை —.

   (3) — எதையும் ஏற்ற காலத்தில் செய்கிறான்.

   (4) காலதாமதத்தால் பல — விளைகின்றன.

2. பாட முதல் பிரிவில் உள்ள இடப்பெயர்களைக் கூறு.
3. இரண்டாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைத் தெரிவி.
4. மூன்றாம் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
5. நான்காம் பிரிவில் உள்ள மூவிடப் பெயர்களை எழுது.
6. அப்பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.
7. ஐந்தாம் பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களைச் சொல்லு.
8. ஆறாம் பிரிவில் உள்ள வேற்றுமை உருபுகளைக் குறிப்பிடு.
9. ஏழாம் பிரிவில் உள்ள முக்கால வினைமுற்றுகளைச் சொல்லு.
10. எட்டாம் பிரிவில் உள்ள முக்கால எச்சங்களைக் கூறு.
11. ஒன்பதாம் பிரிவில் இருக்கும் செயப்படு பொருள் குன்றிய வினை, குன்றாவினைகளைச் சொல்லு.

12. பத்தாம் பிரிவில் உள்ள இடைச்சொல், உரிச்சொற்களைத் தெரிவி.
13. பதினொன்றும் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலைகளைக் குறி.
14. இப்பாட வரலாற்றைப் பொற்கைப் பாண்டியனே கூறுவது போலக் கூறு.
15. இதனை மறையவன் கூறுவது போல எழுது.
16. இதனை அமைச்சன் கூறுவது போலச் சொல்லு.

---

14. உழவு

[பாட்டு]

உழவு தானே உயிர்தரும் தொழிலாம்.
மக்கள் இனத்தில் வாழும் அவர்தம்
உடம்புகள் எல்லாம் உணவின் பிண்டம்;
உணவு பெருதவர் உலகிடை வாழார்;
உணவே உயிரினை மணமுற வைக்கும்;
உணவு தருந்தொழில் உழவெனும் தொழிலே.
பொன்னும் மணியும் பொலிவுறு நிலத்தினில்
நெல்லும் புல்லும் நிறையா எனினே,
மக்கள் வாழ்வு மறைந்தொழி வுறுமே.
ஆதலால், மனிதர் அமலன் அருளிய
இயற்கை உணவுகள் இன்புற வுண்டனா,
மலைநீர் கடல்நீர் வழிவழி உதவிய
பொருள்களாற் பசிப்பிணி போக்கினர் வாழ்ந்தனர்;
இந்நாள் உணவினுள் எத்துணை வகையுள ?
புல்வகை எத்தனை ? நெல்வகை எத்தனை ?
காய்வகை எத்தனை ? கனிவகை எத்தனை ?
கிழங்கின் வகையென வழங்குவ எத்தனை ?
கீரைகள் எத்தனை ? கிரிப்பயிர் எத்தனை ?

பூசவும் புனையவும் பூணவும் உதவும்
மணந்தரு பொருள்களை வழங்கும் பயிர்கள்
எத்துணை உள்ளன? இவையெலாம் மனிதன்
உழைப்பால் அன்றோ உலகிடை விளங்கல்?
இலைகுழை மூடியும் கலைபுலித் தோல்கள்
போர்த்தும் வனத்திடைப் புகுந்துறை மனிதன்
நுண்ணிய இழைகளால் நூற்றுள ஆடை
புனைய விழைவுறு நினைவுளன் ஆகுமேல்,
பருத்தியை நிலத்திற் பயிரிட வேண்டும்;
எண்ணெய் விரும்பினுல் எள்பயிர் வேண்டும்;
'வித்தும் ஏரும் ஒத்தன இருக்க,
எய்த்தனன் இருக்கும் ஏழை பதரே'னச்
சொல்லிய மொழியின் சுவைநன் குணரும்
உழவன் ஒருவன் உழுபடை யாகிய
கலப்பையைக் கொழுவை நிலத்துறை திருவை
வெளிப்படுத் துதவும் வியன்றுணை எனவே
அறிந்து மகிழுவ தமைவே அன்றோ?
பண்டைய நாளிற் பழம்புகழ் பூண்ட
சீன வேந்தர் செழிப்புறு நிலத்திற்
பொன்னேர் முறையுறப் பூட்டி உழுத
கதைகள் உண்டே! கருத்தினோ டுழைக்கும்
வேளாண் மையினுல் விளையா வுளவோ?
நாட்டின் செல்வம் நலமுற வளரத்
தொழிலும் வணிகமும் துணையா யிருப்பின்,
உழவே அவற்றினுக் குள்ளுயிர் ஆகும்;
ஆதலின், நாட்டினர் அல்லலற் றின்ப
வாழ்வினில் வாழ மனமுடை யவர்தாம்
உழவெனுந் தொழிலை உவப்பொடு பூண்கவே.

1. அரும்பத விளக்கம்

மணமுற - சுகம்பெற; பொலிவுறு - பிரகாசிக்கும்; ஒழிவுறும் - ஒழிந்துவிடும்; அமலன் - குற்றமற்றவன் (கடவுள்); இயற்கை உணவுகள் - காய், கனி, கிழங்கு முதலியன; இன்புற - சந்தோஷமாக; போக்கினர் - போக்கி; கிரிப்பயிர் - மலையில் விளையும் பயிர்கள் (மூங்கில், அரிசி, தினை முதலியன); குழை - காதணி; உறை - வசிக்கும்; வனம் - காடு; நுண்ணிய - நுட்பமான; இழை - நூல்; விழைவுறும் - ஆசைப்படும்; புனைய - அணிந்துகொள்ள; எய்த்தனன் - சோம்பி; பதர் - ஒன்றுக்கும் உதவாதவன்; வியன் - பெரிய (சிறந்த); அமைவே - பொருத்தமே; அல்லல் அற்று - துன்பம் நீங்கி; பூண்க - மேற்கொள்க.

2. கேள்விகள்

1. 'மக்கள் வாழ்வு மறைந்தொழியும்'—எப்பொழுது? ஏன்?
2. இயற்கை உணவுகள் எவை?
3. இந்நாள் உணவு வகைகள் எவை?
4. 'பதர்'—எவன்? ஏன்?
5. கலப்பை எதனை வெளிப்படுத்தும் துணை?
6. 'கதைகள் உண்டே!'—என்ன கதைகள்?
7. எவற்றினுக்கு உழவு 'உள் உயிர் ஆகும்'?
8. எவர் 'உழவை உவப்பொடு பூண்க'?

3. இலக்கணம்

1. ஒரு வாக்கியத்தில் பயனிலை பெரும்பாலும் வினை முற்றாக இருக்கும். சில வாக்கியங்களில் பெயர்ச் சொல்லே (வினைமுற்றுப் பொருளில்) பயனிலையாக வரும்.

(உ-ம்.) (1) நாம் சகல நன்மைகளையும் அடையலாம்.-இதில், அடையலாம் என்னும் வினைமுற்றுப் பயனிலையாக வந்தது. இதற்கு **வினைப்பயனிலை** என்று பெயர்.

(2) நாம் இருமைப் பயன்களை அடைவதற்கு நமது உடலே சாதனம்.—இதில் சாதனம் என்ற பெயர்ச்சொல் (சாதனமாக இருக்கிறது என்ற

பொருளில்) பயனிலையாக வந்தது. இது **பெயர்ப் பயனிலை** எனப்படும்.

2. சில பெயர்ப் பயனிலைகள் வினாப் பொருளைத் தரும் சொற்களாக இருக்கும். அவை **வினாப் பயனிலை** எனப்படும்.

(உ-ம்.) அவர் யார்? இதில் யார் வினாப் பயனிலை,

பயிற்சி

1. வினைப் பயனிலை, பெயர்ப் பயனிலை, வினாப் பயனிலை — இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் கூறு.
2. கோடிட்ட இடங்களில் தக்க வினைமுற்றுகளைச் சேர்த்துப் படி :—
(1) நான் ——. (2) நாங்கள் ——. (3) நீ ——. (4) நீங்கள்——. (5) கண்ணன் ——. (6) சீதை —— (7) அவர்கள் ——. (8) எலி ——. (9) எலிகள் ——.
3. கோடிட்ட இடங்களில் தக்க பெயர்ச் சொற்களை அமைத்துப் படி :
(1) ——போனேன். (2) —— வந்தாய். (3) ——வந்தோம். (4) —— வந்தீர்கள். (5) —— வந்தான். (6) —— போனாள். (7) —— படித்தார்கள். (8) —— பறந்தது. (9) பறந்தன.
4. இப்பாட்டில் உள்ள வினை, பெயர், வினாப் பயனிலைகளைக் கூறு.
5. இதில் உள்ள வினையெச்ச, பெயரெச்சங்களைச் சொல்லு.
6. இப்பாட்டின் கருத்தைச் சுருக்கி எழுது.
7. உழவின் சிறப்பு-உணவு வகை-சோம்பலின் இழிவு-சீன வேந்தர் செயல்-முடிவு : இக்குறிப்புகள் கொண்டு, இப்பாடத்தின் பொருளை 5 பிரிவுகளில் ஒரு கட்டுரையாக எழுது.
8. இப்பாட்டில் உள்ள வினைமுற்று, வினையால் அணையும் பெயர்கள் இவற்றைக் கூறு.

15. மலைகளும் நதிகளும்

மலைகள்

'மலை சூழ்ந்த நாடே வளநாடு; நதி சார்ந்த நாடே நன்னாடு' என்னும் பழமொழிகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மலையின் பக்கத்திலுள்ள நாடும் நதிகள் பாயும் நாடும் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றனவாக இருக்கும் என்பதை அப் பழமொழிகள் அறிவிக்கின்றன. ஆதலின், மலைகளையும் நதிகளையும் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகும்.

ஒரு நாட்டைச் சுற்றி மலைகள் அரணாக இருக்குமானால், அந்நிய நாட்டார் அதனை எளிதிற் கைப்பற்ற இயலாது. மக்கள் உயிர் வாழ்வதற்கு வேண்டும் உணவுப் பொருள்களை மலைகளினின்று பெறலாகும். உணவுப் பொருள்கள் விளைவதற்குக் காரணமாயிருப்பது தண்ணீரே அன்றோ? அத்தண்ணீர் மழையினால் அன்றோ கிடைக்கின்றது? மலைநாடுகளிற்றான் மழை அதிகமாகப் பெய்கின்றது. அஃது எப்படி?

பூமியிலுள்ள கடல், ஆறு, ஏரி, குளம் முதலியவற்றில் இருக்கும் தண்ணீர் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி மேலே சென்று மேகமாகின்றது. இம்மேகங்கள் காற்றினால் தள்ளுண்டு பல திசைகளிலும் சிதறிச் செல்லுகின்றன. இங்ஙனம் செல்லும் மேகங்களின்மீது குளிர் காற்று வீசும்போதும், அவை குளிர்ந்த பிரதேசங்களிற் செல்லும்போதும் அவைகளில் அடங்கிய ஆவியெல்லாம் நீராக மாறி, மாரியாகப் பெய்கின்றது. மலைகளின் உயர்ந்த பாகத்தில் குளிர்காற்று அதிகம் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? மலையானது தன்னிடம் வரும் மேகத்தைத் தடுக்கும்போது, அங்குள்ள குளிர்காற்றுப் பட்டு அம்மேகம் அங்கேயே மழையாகப் பெய்கிறது. இதனாற்றான் மலைச்சார்பான இடங்களில் மழை அதிகமாகப் பொழியும்.

இவ்வாறு மலைமீது பெய்யும் மழைநீர் எல்லாம் சிறு அருவிகளாக ஓடி ஒன்று சேர்ந்து, ஆறுகளாகப் பெருகி ஓடுகின்றன. இதனால், ஆறுகளுக்கும் பிறப்பிடம் மலையேயாம்.

நிலத்திலிருந்து உணவுப் பொருள்களும் பிற பொருள்களும் நமக்குக் கிடைக்கின்றன. அதுபோலவே, மலைகளிலிருந்தும் அநேக உணவுப்பொருள்களும், பிறபொருள்களும் கிடைக்கின்றன. நாம் தினந்தோறும் உபயோகிக்கின்ற காப்பி, தேயிலை, மிளகு முதலிய செடிகள் மலைச் சாரல்களிலேயே பயிராகின்றன. அன்றியும், நாம் நோய்வாய்ப்பட்ட காலங்களில் உட்கொள்ளும் மருந்துப் பொருள்களில் பல மலைகளிலிருந்தே கிடைக்கின்றன. அம்மருந்துப் பொருள்களில் ஒன்றான தேனும் மலைகளிலே கிடைக்கின்றது. **'மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்'** என ஔவையாரும் அருளியுள்ளனர்.

கட்டிடங்களுக்கான உறுதியுள்ள பல வகைப்பட்ட மரங்களும், சங்கீதக் கருவிகள், பெட்டிகள், நாற்காலிகள், மேஜைகள் முதலிய பற்பல பொருள்கள் செய்வதற்கு உபயோகமான மரங்களும், விறகிற்கான மரங்களும், மற்றும் பற்பல வகைக் கனிதரும் தருக்களும் மலைப்பிரதேசங்களில் நிறைந்துள்ளன.

இவ்வாறு, நம் வாழ்க்கைக்குப் பல வகையிலும் இன்றியமையாத உதவி புரிவதாக இருக்கின்ற மலைகளை, நம் முன்னோர்கள் தெய்வத்தன்மை உடையனவாகக் கருதிப் போற்றி வந்தனர். நம் நாட்டில் பல சைவ வைணவக் கோயில்கள் மலைகளின் மீதே அமைந்து விளங்குகின்றன. சிவபெருமான் தம் உறைவிடமாகக் கொண்டுள்ளது **வெள்ளியங்கிரி** என்னும் மலையே. திருமால் மருகரான முருகப்பெருமான் மலைகள் தோறும் நின்று ஆடல் புரிவதாகச் சைவ புராணங்கள் சாற்றுகின்றன. இவற்றால், மலைகள் யாத்திரைத் தலங்களாக விளங்குகின்றன என்பதை அறியலாம்.

நம் நாட்டில் முற்காலத்தில் விளங்கிய முனிவர்களும் மலைகளிலேயே தங்கள் தவச்சாலைகளை அமைத்துக்கொண்டு, அங்குக் கிடைக்கும் காய் கனி கிழங்குகளைப் புசித்து, யோகஞ் செய்திருந்தனர். அவர்கள் மனமும் களங்கமற்றுத் தெய்வத் தன்மை உடையதாயிருந்தது. அவர்கள் மனிதர் கூட்டுறவு நீங்கியவர்களாய்த் தனியே மன அமைதியோடு இறைவனைத் தமது இதயத்திலிருத்தித் தவஞ்செய்து பெறற்கரிய பேறு பெற்றனர். இதனால், மோட்சத்தை அடைவதற்கு மலைகள் துணைபுரிவனவா யுள்ளன என்பது விளங்கும்.

மலையும் மலையைச் சார்ந்த நிலமும் **குறிஞ்சி** என்று பெயர் பெறும். இம்மலைப் பிரதேசங்களில் **குறவர், வேடுவர்** முதலான பழங்கால மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கட்குக் காய் கனி கிழங்குகளும், தேனும், தினை முதலிய குறிஞ்சி நிலத்தில் விளையும் தானியங்களும் உணவாகின்றன. மலைகளில் அவர்கள் சுயேச்சையாகத் திரிவதனாலும், அங்கு இயற்கையாய் விளைந்துள்ள மருந்துப் பொருள்களின்மீது படிந்து வீசும் காற்றைச் சுவாசிப்பதாலும் உடல் வன்மையிலும், மன வன்மையிலும் சிறந்து விளங்குகின்றனர். வேண்டும் உணவுப் பொருள்கள் அவ்வப்போது கிடைப்பதால், அவர்கள் மறுநாளைய உணவிற்கு என்ன செய்வதென்னும் கவலையற்று வாழ்கின்றனர்.

கோடைக்காலத்தில் வெயிலின் கொடுமைக்கு ஆற்றாதவர் மலையை அடைந்து, அங்கு வீசும் குளிர்காற்றை நுகர்ந்து இன்புறுகின்றனர். பெரும்பாலும் செல்வர்களும், பதவியாளர்களும் கோடைக்காலத்தில் மலைப்பிரதேசங்களிற் சென்று வசிக்கின்றனர் அல்லவா?

வீரர்களின் தோளுக்கும், தம் வாக்குறுதி தவறாதவர்களுக்கும், கம்பீரமான தோற்றத்திற்கும், அழியாத தன்மைக்கும் உவமையாகக் கூறப்படுவதும் மலையே அன்றோ? இங்ங

னம், மாந்தர்க்குப் பல வகையிலும் உபயோகமாக உள்ளதும், சிறப்பு இயல்புகள் பலவற்றையும் உடையதுமான மலையைத் தமது உலகப் படைப்பில் ஆங்காங்கே அழகுற அமைத்த கடவுளைப் போற்றுவோமாக!

நதிகள்

மலைகள் எவ்வாறு மக்களுக்கு உபயோகமாக இருக்கின்றனவோ அங்ஙனமே நதிகளும் பயன்படுவனவாக உள்ளன. மலைகளில் பெய்யும் மழைநீர் சிறு அருவிகளாக ஓடி ஒன்று சேர்ந்து, பெரியதோர் ஆறாகப் பெருகிச் சமவெளிகளில் பாய்ந்து, நாட்டு வாசிகளாகிய நமக்குப் பலவகையிலும் பயன் படுகின்றது. சில நதிகள் எக்காலத்திலும் நீர் வற்றாது ஓடுகின்றன. இவற்றிற்கு **ஜீவ நதிகள்** என்று பெயர். மிகவும் உயரமானவையாகவும், எக்காலத்திலும் பனிப்படலங்களால் மூடப் பெற்றவையாகவும் உள்ள பெரிய மலைகளிலிருந்து உற்பத்தியாகும் நதிகளே ஜீவ நதிகளாக இருக்கும். ஏனெனில், மாரிக்காலத்தில் மழையாலும் கோடைக்காலத்தில் சூரிய வெப்பத்தாலும் பனிக்கட்டிகள் உருகுவதனால் பெரிய மலைகளில் உற்பத்தியாகும் நதிகள் எப்பொழுதும் நீரோட்டம் உடையனவாகஇருக்கின்றன. நமது இந்து தேசத்தின் வடபாலுள்ள இமயமலையினின்று உற்பத்தியாகின்ற சிந்து, கங்கை முதலியவை ஜீவ நதிகளாம். சிறிய மலைகளினின்று உற்பத்தியாகும் நதிகள் மாரிக்காலத்தில் மட்டும் வெள்ளப் பெருக்குடையனவாய்க் கோடைக் காலத்தில் வறண்டு போகும். காடுகளில் பெய்யும் மழைநீர் அருவிகளாக ஓடி ஒன்று சேர்ந்து, சிற்றாறுகளாகப் பெருகுவதும் உண்டு. இவ்விதம் உண்டாகும் ஆறுகள் **காட்டாறுகள்** எனப்படும்.

நதிகள் சமவெளிகளின் வழியே பாய்ந்து நிலங்களை எல்லாம் செழிப்பாக்கிச் சென்று, கடைசியில் கடலோடு கலக்கின்றன. சில ஆறுகள் தனியே சமுத்திரத்தில் கலவாமல்

வேறொரு பெரிய நதியோடு கலக்கின்றன. இவற்றிற்கு **உப நதிகள்** என்று பெயர். யமுனை, துங்கபத்திரை, பவானி, நொய்யல், அமராவதி முதலியவை உபநதிகளாம். யமுனை கங்கைக்கும், துங்கபத்திரை கிருஷ்ணாநதிக்கும், பவானி, நொய் யல், அமராவதி ஆகிய இவை காவிரிக்கும் உபநதிகளாம். சில நதிகள் கடலில் சங்கமமாகும் இடத்தில் அகலமும் ஆழமும் உடைய முகத்துவாரத்தை உடையனவாக இருக்கின்றன. இவ் வகை நதிகள் நமது இந்தியாவில் இல்லை; ஐரோப்பா முதலிய கண்டங்களில் உள்ளன. சில நதிகள் சங்கமமாகும் போது சில சிறு கிளைகளாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் தனித் தனியே வெவ்வேறிடத்தில் கடலோடு கலக்கின்றன. இவ் வாறு பிரிந்து செல்லும் நதிகளுக்குக் **கிளை நதிகள்** என்று பெயர். நதிகள் கடலோடு கலக்குமிடத்திற்கு **முகத்துவாரம்** என்று பெயர். இவ்வகை நதிகள் தமது முகத்துவாரத்திற்கு அருகில் முக்கோண வடிவமான மேட்டு நிலத்தை உடையனவாய் இருக் கின்றன. இதற்கு **ஆற்று இடைக்குறை** என்று பெயர். இந்நதி கள், தாம் பாயுமிடங்களினின்று அடித்துக் கொண்டுவரும் வண்டல் மண்ணால் இவ் யாற்றிடைக்குறை நிலங்கள் ஏற்படுவ தால், இவை மிக்க செழிப்புடையனவாக இருக்கின்றன.

இவ் யாற்றிடைக்குறைக்கு டெல்டா (Delta) என்று ஆங்கிலத்தில் பெயர். இது கிரேக்க பாஷையிலுள்ள ஓர் எழுத்தின் பெயராம். இந் நிலப்பகுதி அந்த எழுத்தின் உருவத் தைப் போலவே இருப்பதால் இப்பெயர் பெற்றது. நமது நாட்டிலுள்ள சிந்து, கங்கை, கோதாவரி, கிருஷ்ண முதலிய நதிகள் யாவும் முகத்துவாரத்தில் டெல்டாக்களை உடையவை.

நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துச் செல்லும் காலத் தில், அந்நதிகள் உற்பத்தியாகும் மலைகளிலுள்ள சந்தனம், கோங்கு, தேக்கு முதலிய சிறந்த மரங்களையும், மலைகளி லுள்ள உலோக வகைகளையும், மற்றும் அரிய பொருள்களை

யும் அடித்துக்கொண்டு வருகின்றன. மழை பெய்யும் காலங்களில் மழைநீர் ஒன்று சேர்ந்து, பள்ளமான இடத்தை நோக்கி ஓடுமென்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அதுபோலவே, உயரமான மலைச்சிகரங்களில் பெய்யும் மழைநீர் எல்லாம் ஒன்று சேர்ந்து, தாழ்வான இடத்தை நோக்கி ஓட ஆரம்பிக்கின்றது. அப்பொழுது, அந் நீரோட்டங்களுக்கு **அருவிகள்** என்று பெயர். பின்பு, அவை ஒன்று கூடி ஆழமும் அகலமும் அதிகமாகச் சம நிலத்தில் பாயுங் காலத்தில்தான் அவற்றிற்கு 'நதி' என்ற பெயர் ஏற்படுகிறது. கங்கை, கோதாவரி, காவிரி, தாமிரபரணி முதலிய நதிகள் யாவும் இவ்வாறே ஏற்பட்டனவாம்.

நாம் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் எல்லாம் நதிகளின் உதவியினால் விளைகின்றன. நதிகள் பாயாத வானம் பார்க்கும் பூமிகளில் நதிகள் வெட்டப்பட்டால், உணவுப் பொருள்களை விளைவிப்பது மிகவும் எளிதாக இருக்கின்றது. நதிவளம் பெற்றவர்கள் நெல் முதலிய நன்செய்ப் பயிர்களை, அவற்றின் உதவியால் விளைத்துச் சிறந்த பலனை அடைகின்றனர். ஒரு காணி நன்செய் நிலததினின்று பெறும் பயன், நான்கு காணிப் புன்செய் நிலத்தினின்று பெறும் பயனுக்குச் சமமாகும்.

மலைவாசம் எவ்வாறு மக்களுக்கு நோயைப் போக்கிச் சுகத்தைக் கொடுக்கின்றதோ, அதுபோலவே நதியில் நீராடுவதும் உடலுக்கு நன்மை பயக்கின்றது. ஆற்றுநீர் பல மூலிகைகளிற் படிந்தும், பல உலோகப் பொருள்களின் சத்தைத் தன்னிலே கலந்துகொண்டும் வருகிறது. அதனால்தான் நமது இந்துக்கள் அத்தகைய நதிகளில் நீராடுவதை முக்கியமாகக் கொண்டு ஒழுகி வருகின்றனர். பருகுவதற்கும் ஆற்று நீரே சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. நதிகளை நாம் தாயாகக்

கருதிச் சிறப்பித்துப் போற்றுகிறோம் எனின், அவற்றின் பெருமையைக் கூற வேறு சான்று வேண்டுமா ?

புலவர் பெருமக்கள், நதிகளைக் கவிகளின் பெருமிதமான உள்ளத்திற்கும், வள்ளல்களின் கொடைத்தன்மைக்கும், மத உண்மைகளுக்கும், சிறந்த ஒழுக்கத்திற்கும், உயர்வுடைய மற்ற அனைத்திற்கும் உவமித்துள்ளனர். '**ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்**' என்றும், '**கான் யாற்று ஊர் இனிது**' என்றும் நதியை ஆன்றோர் சிறப்பித்துள்ளனர்.

1. அரும்பத விளக்கம்

வள நாடு - செழிப்புள்ள நாடு; வளம் - செழிப்பு; களங்கம் - குற்றம்; சுயேச்சையாக - இஷ்டப்படி; நுகர்ந்து - அநுபவித்து; பதவி - நிலை; சார்ந்த - சேர்ந்த; எளிதில் - சுலபமாக; நன்செய் - நல்ல நிலம், பாசன வசதியுள்ள நிலம்; செய் - வயல்; பொழியும் - பெய்யும் ; கூட்டுறவு - பலர் சேர்ந்து வாழ்தல்; இதயம் - நெஞ்சம்; குறிஞ்சி - மலைநாடு; குறவர் - மலைநாட்டில் வசிப்பவர்; போற்றுவோம் - துதிப்போம், வணங்குவோம்.

2. கேள்விகள்

(1) மலைப் பிரதேசத்தில் மழை அதிகமாகப் பெய்வதற்குக் காரணம் என்ன ?

(2) மலைகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள் யாவை ?

(3) ஆறுகளின் உபயோகங்களைக் கூறு.

(4) புலவர்கள் ஆறுகளை எவ்வெவற்றிற்கு உவமையாகக் கூறுவர் ?

(5) குறவர், வேடுவர் - இவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறு.

3. இலக்கணம்

வினைச்சொற்களில் சில, காரியம் நடந்ததைத் தெரிவிக்கும்; சில காரியம் நடவாமையைத் தெரிவிக்கும்.

1. உடன்பாடு :—அவர் இவ்விஷயத்தில் சிரத்தையோடு முயன்றார். இதில், முயன்றார் என்பது காரியம் நடந்ததைத் தெரிவிக்கிறது. இது உடன்பாட்டு வினை (Affirmative) எனப்படும்.

2. எதிர்மறை :—எவ்வித ஆராய்ச்சியிலும் அவன் தலையிட இல்லை. இதில், இல்லை என்பது காரியம் நடவாமையைத் தெரிவிக்கிறது. இது எதிர்மறை வினை (Negative) எனப்படும்.

குறிப்பு :—உடன்பாடு, எதிர்மறைப் பொருள்கள் எச்ச வினைகளிலும் உண்டு.

(உ-ம்.) பேசாமல், பேசாத.

பயிற்சி

1. பின் வரும் வாக்கியங்களில் காரியம் நடந்ததைத் தெரிவிக்கும் வினைச்சொற்களையும், காரியம் நடவாமையைத் தெரிவிக்கும் வினைச்சொற்களையும் எடுத்துக் கூறு:—

(1) அங்ஙனம் பறந்து செல்லுதல் இயலாத காரியம்.

(2) எவ்வித ஆராய்ச்சியிலும் அவன் தலையிடவில்லை.

(3) ஜலவாயு எரியக் கூடியது என்பது அவருக்குத் தெரியாது.

2. அவன் வந்தான். வந்தவன் அவனா? யார் வந்தார்?—இவற்றில் பயனிலைகள் எவை? என்ன பயனிலைகள்?

3. பார்த்தவன் நகைத்தான், நகைத்தவனை இழுத்துவா, படித்தவனால் பாதகம் நேரும், பேசினவனுக்குப் பரிசு கொடு, வந்தவனில் நின்றவன் பெரியவன், போனவனது புத்தகம் இது.—இவற்றில் உள்ள வினைமுற்றுகள் எவை? வினையால் அணையும் பெயர்கள் எவை?

4. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

5. இரண்டாம் பிரிவில் உள்ள முக்கால வினைமுற்றுகளையும் சொல்லு.

6. மூன்றும் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைத் தெரிவி.

7. நான்காம் பிரிவில் உள்ள வினையெச்ச, பெயர் எச்சங்களைக் கூறு.
8. ஐந்தாம் பிரிவில் இருக்கும் எழுவாய், பயனிலைகளைக் கூறு.
9. ஆறும் பிரிவில் உள்ள மூவிடப் பெயர்களைக் குறிப்பிடு.
10. ஏழாம் பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களைச் சொல்லு.
11. மலைகளைப் பற்றி 20 வரிகளில் கட்டுரை எழுது.
12. நதிகளைப் பற்றி 20 வரிகளில் கட்டுரை எழுது.
13. ஒவ்வொரு பிரிவையும் படித்து, அதன் கருத்து விளங்கத் தலைப்புக் கொடு.
14. மலைகள் - மலைநாடுகள் - அவற்றின் உபயோகங்கள் - முடிவு: இக்குறிப்புக்களைக் கொண்டு ஒரு கட்டுரை நான்கு பாராக்களில் எழுது.
15. நதிகள் - நதிகள் பாயும் இடங்கள் - நதிகளின் உபயோகங்கள் - முடிவு: இக்குறிப்புக்களைக் கொண்டு ஒரு கட்டுரை நான்கு பாராக்களில் எழுது.

---

16. மின்சாரம்

மின்சாரம் இயற்கையின் இரகசியச் சக்திகளுள் ஒன்றும். அஃதாவது உஷ்ணம், ஒளி, காந்தம், ஒலி முதலியவற்றைப் போலவே மின்சாரம் இயற்கையின் ஓர் அம்சமாகும். மின்சாரத்தால் நடைபெறுத வேலைகள் உலகில் இல்லை எனலாம். இது காற்றைப் போலக் கட்புலனுக்குத் தோன்றுமல் எங்கும் நிறைந்திருப்பது. ஆனல், காற்றை அதன் செயல்களைக் கொண்டு அறிதல் போல, இதனை இதன் செயல்களைக் கொண்டு தான் அறிதல் கூடும்.

மின்சாரத்திற்குள் சூடும் வெளிச்சமும் வேகமும் அடங்கியுள்ளன. இதனைத் தொழில் முறையில் பயன்படுத்துகையில் அவை வெளிப்படும். இதனை ஒரு வகையில் பயன்படுத்தினுல்

இதிலிருந்து சூடு உண்டாகும்; வேருெரு வகையிற் பயன் படுத்தினுல் வேகம் உண்டாகும்; பிறிதொரு வகையிற் பயன் படுத்தினுல் வெளிச்சம் தோன்றும். இத்தகைய விநோத சக்தி வாய்ந்த மின்சாரம் எல்லா வேலைகட்கும் உபயோகப்படுவதில் வியப்பில்லை அன்ருே? மக்கள் தத்தம் தேவைக்கு ஏற்றபடி இதனைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நீராவியால் செய்யப்பெற்று வந்த பல வேலைகள் இன்று மின்சார சக்தியால் நடைபெறுகின்றன.

இது கூட்டு மின்சாரம் (Positive Electricity) என்றும், கழி மின்சாரம் (Negative Electricity) என்றும் இரண்டு வகைப்படும். இவற்றுள் கூட்டு மின்சாரம் கழி மின்சாரத்தோடுதான் சேரும்; பிறிதொரு கூட்டு மின்சாரத்தோடு சேராது; அங்ஙனமே கழி மின்சாரமும். இவ்விரு மின்சாரமும் ஒன்று சேர்ந்து பல அற்புதச் செயல்களைச் செய்கின்றன. மின்சாரம் ஒரே நிலையில் இருப்பின் தேக்க மின்சாரம் (Static Electricity) என்றும், ஓடுகையில் ஓடும் மின்சாரம் (Current Electricity) என்றும் சொல்லப்படும்.

இவற்றுள் பின்னதே உலகத்தில் தொண்டு செய்வது. இது, தான் செல்லும் கம்பிகளை எரித்து உஷ்ணப்படுத்தி ஒளிரச் செய்யும். இத்தன்மையைக் கொண்டே பெரிய நகரங்களில் எல்லாம் மின்சார விளக்குகள் மிக்க ஒளியுடன் பிரகாசிக்கின்றன. இவையன்றிச் சமையல் செய்யவும் மின்சார அடுப்புகள் பயன்படுகின்றன. வெந்நீரை உண்டாக்கவும் இவ்வடுப்புகள் உபயோகப்படுகின்றன. மின்சாரம் செலுத்தப்பெற்ற தண்ணீர் பிராண வாயு, ஜலவாயு என்று இரண்டாகப் பிரிந்துவிடுகிறது. இவ்வாறே மற்ற உலோகங்களையும் தனித்தனியாகப் பிரிக்கும் வன்மை இதற்குண்டு. ஆயின், இம் மின்சாரம் இரப்பர், பலகை, கந்தகம், எபொனைட் என்னும் ஒருவித அரக்கு முதலிய பொருள்களுட் செல்லாது. ஆதலால், மின்சார வேலை செய்பவர்

மின்சாரம் தம்மைத் தாக்காதிருக்க இரப்பர் முதலியவற்றால் ஆகிய உறைகளைப் போட்டுக்கொள்வர். மின்சாரம் காந்த சக்தியையும் உண்டாக்கவல்லது. இதன் சக்தியைப்பெற்ற இரும்புத் துண்டுகள் தம் போன்ற பொருள்களை இழுப்பதுண்டு.

1843-ல் அமெரிக்க அறிஞரான **சாமுவேல் மோர்ஸ்** என்பவர் இம்மின்சார சக்தியால் 'தபால்' அனுப்பும் முறையைக் கண்டறிந்தார். இம்முறையால் ஆயிர மைல்கட்கு அப்பால் உள்ளவர்க்கும் விரைவிற் செய்தியைத் தெரிவிக்கலாம். இதுவே இன்று தபால் நிலையங்களில் உள்ள தந்தியடிக்கும் முறை. இதற்குப் பின் அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருகக், கடல் நீரிலும் தந்திக் கம்பிகளைச் செலுத்தி, அவற்றின் வாயிலாக ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் செய்தி அனுப்பும் முறை கண்டுபிடிக்கப் பட்டது. மின்சார அலைகளின் வேகத்தால் செய்திகள் மிக்க விரைவில் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்குச் செல்லுகின்றன. நேருக்கு நேராக உடனுக்குடன் பேசும் '**டெலிபோன்**' கருவியும் இம்மின்சார சக்தியைக் கொண்டே பணியாற்றுகிறது.


சாமுவேல் மோர்ஸ்

இவ்வாராய்ச்சிகட்குப் பிறகு, மின்சாரக் கம்பி இல்லாமலே மின்சார சக்தியால் நெடுந்தூரம் செய்தி அனுப்பும் **கம்பி இல்லாத் தந்தி** கண்டுபிடிக்கப்பட்டது. இஃது உலக அற்புதங்கள் பலவற்றுள் மிகச் சிறந்ததென்றே கூறுதல் வேண்டும். இம்முறையால், இன்று கடலிற் செல்லும் கப்பல்களிலும் வானத்திற் பறக்கும் ஊர்திகளிலும் கம்பியில்லாத் தந்திக்

குரிய சாதனங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் உதவியால் நெடுந்தூரத்தில் உள்ள கப்பல்களும் ஊர்திகளும் ஒன்றோடொன்று செய்திகள் பேசவும், பூமியில் இருக்கும் தந்தி நிலையங்களோடு செய்திகளை அறிவிக்கவும் தெரிந்து கொள்ளவும் வசதி ஏற்பட்டுள்ளது. ஆபத்தில் அகப்பட்ட கப்பல்களும் வான ஊர்திகளும் இக் கம்பியில்லாத் தந்தியின் மூலம் வேறு கப்பல்களுக்கோ ஊர்திகளுக்கோ தமக்கு நேர்ந்துள்ள கேட்டை விளக்கி உதவி பெற வசதி உண்டாகிறது. இப்புதிய சாதனம் கண்டறியப்பெற்ற பிறகே கப்பல்கள் கவலையின்றிக் கடலிற் பிரயாணம் செய்கின்றன.

சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில் மின்சார சக்தியால் ஓடும் டிராம் வண்டிகள் இருக்கின்றன. தொடர் வண்டிகளும் மின்சார சக்தியால் சில இடங்களில் ஓடுகின்றன. அமெரிக்கா, ஜெர்மனி முதலிய ஆராய்ச்சி மிக்க நாடுகளில் மின்சார சக்தியைக் கொண்டே ஆட்கள் துணை இன்றிக் கப்பல்கள் தாமே கடலிற் போகவும், வான ஊர்திகள் பறக்கவும், வேண்டும் பணிகளைச் செய்யவும் இயக்கக் கூடுமோ என்பதை அறிய ஆராய்ச்சி நடைபெறுகின்றது. அம்முறை வெற்றி அளித்தல் கூடும் என்பது நம்பப்படுகிறது.

மக்களின் அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக, மின்சார சக்தியால் என்னென்ன அற்புதங்கள் நிகழுமோ அறியோம். இத்துறையில் நம் நாட்டினர் முயன்று ஆராய்ச்சி நடத்தி மேலும் பல புதிய சக்திகளைக் கண்டு உலகிற்கு உணர்த்தின், நம் நாட்டிலும் ஆராய்ச்சியுடையார் இருக்கின்றனர் என்னும் மதிப்பு உலகமக்கட்கு ஏற்பட இடமுண்டாகும்.

1. அரும்பத விளக்கம்

இயற்கை - இயல்பாகவே இருந்துவரும் பொருள் ; செயற்கை- மனிதன் முயற்சியால் செய்யப்படுவது; அம்சம் - பிரிவு; கட்புலன்- கண்; ஊர்தி - வாகனம்.

2. கேள்விகள்

1. மின்சாரம் என்பது யாது? அதனை எப்படி அறிவது?
2. எங்கெந்த வகையில் மின்சாரம் எவ்வெவ்வாறு தோன்றும்?
3. எந்த இருவகை மின்சாரங்கள் ஒன்று சேரும்? எவை ஒன்று சேரா?
4. தேக்க மின்சாரம் எது? ஓடும் மின்சாரம் எது?
5. எந்த மின்சாரம் நமக்கு என்ன நன்மைகளைச் செய்கிறது?
6. சாமுவேல் மோர்ஸ்—குறிப்பு எழுது.
7. கம்பியில்லாத் தந்தி—யாது? அதன் உபயோகம் என்ன?
8. நீ அறிந்த மின்சார வேலைப்பாடுகள் எவை?

3. இலக்கணம்

1. சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்வது **புணர்ச்சி** எனப்படும். அவற்றுள் முன் நிற்கும் சொல் **நிலைமொழி**; வந்து சேருவது **வருமொழி** எனப்படும்.

(உ-ம்.) நிலைமொழி வருமொழி

மரம் + வளரும் = மரம்வளரும்.

2. இவ்வாறு சொற்கள் இயல்பாகப் புணர்வது **இயல்பு புணர்ச்சி** எனப்படும்; விகாரப்படப் புணர்வது **விகாரப் புணர்ச்சி** எனப்படும்.

(உ-ம்.) மரம்+வளரும்=மரம்வளரும்—**இயல்பு புணர்ச்சி.**

மரம்+பலகை=மரப்பலகை —**விகாரப் புணர்ச்சி.**

பயிற்சி

1. மரம்+பட்டை, மனம்+சலித்தான், பல்+பொடி, வயல்+வளம், உஷ்ணம்+படுத்து, புளி+பழம்.—இவற்றுள் இயல்பு புணர்ச்சி எவை? விகாரப் புணர்ச்சி எவை?
2. பாடத்தின் முதல் பிரிவில் உள்ள **எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.**
3. அப்பிரிவில் உள்ள **வினைமுற்று, வினையெச்ச, பெயரெச்சங்களைக் கூறு.**

4. அதே பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைச் சொல்லு.
5. இரண்டாம் பிரிவில் உள்ள ஐம்பால் பெயர்களைக் கூறு.
6. அதில் உள்ள தனிமொழி—தொடர் மொழிகளைச் சொல்லு.
7. அதே பிரிவில் இருக்கும் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினைகளைத் தெரிவி.
8. மூன்றும் பிரிவில் உள்ள இடைச்சொற்களையும் உரிச் சொற்களையும் சொல்லு.
9. அதில் உள்ள எழுவாய், பயனிலைகளைக் கூறு.
10. அதில் உள்ள வினைப்பயனிலை, பெயர்ப்பயனிலைகளைக் குறிப்பிடு.
11. நான்காம் பிரிவில் உள்ள உடன்பாடு, எதிர்மறை வினைகளைக் கூறு.
12. மின்சாரம் - அதன் வகைகள் - அதன் பயன்கள்- முடிவு: இவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு, இப்பாடத்தின் பொருளை ஒரு கட்டுரையாக எழுது.
13. ஒவ்வொரு பிரிவையும் மௌனமாகப் படி; பொருத்தமான தலைப்புக் கொடு.

---

17. ஆதிரை என்னும் கற்பரசி

புகார் நகரம், தமிழகத்திலே சோழ அரசர்களது செல்வம் பொங்கிப் பொலிந்த பெரிய நகரமாம். அந் நகரத்தில் வாழ்ந்த பெருஞ் செல்வனாகிய **கோவலன்** என்பவன் தன் செல்வத்தை எல்லாம், **கண்ணகி** என்ற தன் மனைவியை மறந்து, **மாதவி** என்ற பொதுமகளுக்குக் கொடுத்து அழித்தான். மாதவி பெற்ற பெண் **மணிமேகலை** என்பவள். அவள், தனது தந்தை மதுரைக்குச் சென்று பாண்டியன் ஆணையாற் கொலையுண்டது அறிந்து கண்ணீர் விட்டாள். பின்பு, அவள் பொது

மகளிர் வாழ்க்கையை விரும்பாமல் துறவு பூணத் துணிந்தாள். அதனால், அவள் பௌத்தமதப் பெரியோர்களை அடுத்து, மெய் யறிவு பெற்று நன்னெறியை மேற்கொள்வாள் ஆயினள்.

மணிமேகலை தனது துறவற நிலைக்கு ஏற்ற வண்ணம் பிச்சை ஏற்றுப் பிறர்க்கு உதவி புரிந்து வாழ எண்ணினாள்; தெய்விகச் சக்தி பெற்ற பிச்சைப் பாத்திரம் ஒன்று அவளுக்குக்

மணிமேகலை ஆதிரையினிடம் தன் பிச்சைப் பாத்திரத்தில் முதற் பிச்சை வாங்குதல்.

கிடைத்தது; அப்பாத்திரத்தில் முதன்முதலில் கற்பரசி ஒருத்தியிடம் பிச்சை வாங்கி வரவேண்டும் என்று உன்னினாள்; புகார் நகரில் அந்நாளில் இருந்த கற்பின் செல்வியாகிய **ஆதிரை**யைப் பற்றிப் பிறர் சொல்ல அறிந்தாள்; அவ்வாறே அவளிடம் தன் பிச்சைப் பாத்திரத்தில் முதற் பிச்சை வாங்கினாள்.

உயிர்களுக்கெல்லாம் உதவுமாறு மணிமேகலை ஏந்திய அப்பிச்சைப் பாத்திரத்தில் அன்னமிட்ட ஆதிரை என்னும் பெண்மணியின் வரலாறு மிகவும் சிறந்தது. அதன் சுருக்கம் வருமாறு:—

புகார் நகரில் **சாதுவன்** என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் **ஆதிரை** என்னும் பெண் மணியை மணம் புரிந்து இல்லறம் நடத்திவந்தான். இரு வரும் அன்பு ஒத்தவராதலால், அவர்கள் குடும்ப வாழ்வு இன்பமாகவே இருந்தது. சாதுவன் ஒருநாள் வியாபாரத்தின் பொருட்டு அயலூர்களுக்குப் போய் வருகையில், ஒரு பரத்தைமேல் மனம் செலுத்தி ஆதிரையை மறந்தான். பெரி யோர் பலர் அவனுக்கு எவ்வளவோ அறிவு புகட்டியும் அவற்றை அவன் கேளாது, பொருளெல்லாம் இழந்து வறிய னாகித் தன் ஊரில் இருக்கவும் விரும்பாமல் மரக்கலமேறி அயல்நாடு சென்றான்.

கடல் இடையில் எழுந்த பெரும் புயற்காற்றால் சாதுவன் சென்ற மரக்கலம் கவிழ்ந்து நீருள் மூழ்கியது. வியாபாரிகள் பலரும் நடுக்கடலில் முழுகி நள்ளிருளில் திசையறியாது விழுந்து இறந்தனர். சாதுவன் பாய்மரத்தின் கொம்பு ஒன் றைப் பற்றிக்கொண்டு இரவெல்லாம் கடலில் நீந்தினான் ; மறு நாட் காலையில், முன் என்றும் கண்டும் கேட்டுமறியாத ஒரு நாட்டில் கரையேறினான். உயிரோடு பிழைத்த ஒருவர், இருவர் திரும்பிப் புகார் நகரம் போய்ச் சேர்ந்தனர். அங்கு அவர்கள், "சாதுவன் சென்ற மரக்கலம் கடலிற் கவிழ்ந்தது ; சாதுவன் இறந்தான்" என்று கூறினர். இச்சொல்லைக் கேட்ட ஆதிரை, பெருந்துயர் கொண்டு தன் நாயகன் சென்ற உலகுக்குத் தானும் செல்லத் துணிந்து, மயானத்தில் பெருங்குழி ஒன்று வெட்டு வித்து, விறகுகளை அடுக்கித் தீமூட்டி இறங்கலானாள். இறங் கும் போது, "என் கணவன் தான் செய்த புண்ணிய பாவங்

களுக்கு ஏற்ப இன்று எவ்வுலகில் எப்பிறப்பில் இருந்தாலும், நானும் அங்கு அப்பிறப்பிலே அவனுக்குரிய துணையாகப் போய்ச் சேருவேனாக" என்று நாட்டார் அறியக் கூறினாள்.

அப்பொழுது ஓர் அற்புதம் நிகழ்ந்தது: பக்கத்தில் நின்றவர் உடம்புகள் கொதிக்கக் கொழுந்துவிட்டு எரிந்த அந்நெருப்புக்குழி ஆதிரைக்குத் தாமரைப் பொய்கைபோல் தண்ணென்று ஆயிற்று. அவள் உடுத்த புடவையில் தீப்பற்றவில்லை; சூடிய மாலை வாடவில்லை. நெருப்பின் நடுவில் நின்ற அக் கற்பரசி, தாமரைமலரில் உள்ள திருமகளே போன்று,தன் யாக்கைக்கோர் இடையூறுமின்றி, உயிருடன் நின்று பொலிவுற்றுத் தோன்றினள். ஆதிரை நெருப்பில் நின்ற வண்ணமே, நான், "இனி யாது செய்வேன்? கணவனை இழந்த பாவியாகிய என்னைத் தீயும் தொட அஞ்சுகின்றதே!" என்று கூறிப் புலம்பினாள். அப்பொழுது, "ஆதிரையே, கேள்: உன் அன்பிற்குரிய கணவன் இறந்திலன். அவனை அலைகள் அடித்துச் சென்று நாகர் வாழும் மலைப் பக்கத்திலே சேர்த்தன. அங்கு அவன் பல்லாண்டு இருக்கமாட்டான். **சந்திரதத்தன்** என்னும் வணிகனது மரக்கலத்தில் ஏறி, அவன் விரைவிலே இங்கு வந்து சேருவான். நீ கவலை ஒழிவாயாக" என்று அசரீரி ஒலி கேட்டது. வானத்தில் எழுந்த இத்தெய்விக வாக்கைக் கேட்ட ஆதிரை, மனத்துயர் ஒழிந்து வீட்டுக்குச் சென்றாள். அங்கு, உறவின்முறையார் எல்லாரும் புகழ்ந்து போற்றக் கற்பின் தெய்வமாக நல்லறம் புரிந்து வாழ்ந்துவந்தாள்; அயல்நாடு சென்ற தன் கணவனை விரைவிலே திரும்பப் பெறுதற்குத்தக்க புண்ணிய நோன்புகள் நோற்றுவந்தாள். புகார் நகரத்தில் ஆதிரை இங்ஙனம் தன் கற்பின் பெருமை உலகறிய வாழ்ந்து வருகையில், சாதுவன் கடலிலே அலைகளால் அடிபட்டுக் கரையேறி வாழ்ந்த வரலாற்றை இனி அறியப் புகுவோம்.

தமிழகத்தாரைப் போல அந்நாளில் நாகரிகம் பெறுதிருந்த நாகர், பட்டினுலும் பருத்தியினுலும் ஆடை நெய்து அணியும் பழக்கம் இல்லாதிருந்தனர். காடுகளில் வேட்டையாடிய விலங்குகளின் தோல்களையும், தேக்கிலை போன்ற இலைகளையும் தம் உடம்புகளை மறைக்கத் தக்க உடைகளாகக் கொண்டிருந்தனர். அவ்வினத்தார்க்குப் புண்ணியம், பாவம், இம்மை, மறுமை முதலிய உண்மைகள் தெரியா. மனித இறைச்சியும் அவர்கள் நாவுக்குச் சுவையுள்ள உணவாம். உடல் வலிமையாற் பிறரை அடக்கும் திறமை பெற்ற ஒருவன், அவ்வினத்தார்க்குத் தலைவனுய் இருந்தான். அவனை அரசனுகக் கொண்டு அடங்கியிருந்த நாகர் எல்லாரும் மிருகங்கள் என்று பிறர் மதிக்கும்படியே வாழ்ந்துவந்தனர்.

இத்தன்மையுள்ள நாகர் வாழ்ந்த நாட்டின் கடற்கரையில் ஏறி, ஒரு மர நிழலில் சாதுவன் மெய் மறந்து உறங்கினுன். நாகருள் ஒரு சிலர் அங்கு வந்து, "மனிதவுடம்பு நல்ல உணவாகும்" என்று துணிந்து அவனை நெருங்கினர். சாதுவன் பலர் நடக்கும் அரவம் கேட்டு விழித்துக்கொண்டு, அவர்கள் தமக்குட் பேசிக்கொண்ட செய்திகளை அறிந்து, தன்னைக் காத்துக்கொள்ளத் தக்க முயற்சிகள் செய்யத் தொடங்கினுன். வியாபாரத்தின் பொருட்டுப் பல நாடுகள் போய்ப் பழகிய அவனுக்கு நாகர் பேசிய மொழி எளிதில் விளங்கியது. அம்மொழியின் உதவியால் அவன் நாகரோடு பேசித் தன் கருத்தை விளக்கத் தொடங்கினுன்.

நாகர், சாதுவன் பெருமை அறிந்து, அவனைத் தம் தலைவனிடம் அழைத்துப் போயினர். அவன் தன்னை அழைத்த கூட்டத்தோடு தலைவன் உறைவிடம் நெருங்கினுன். அங்கு அவன் கண்ட காட்சி, அவன் உள்ளத்தில் மிக்க அருவருப்பை எழுப்பியது. ஒரு புறம் நாகர் கூட்டம்; மற்றொரு புறம் ஊன் பிண்டங்கள்; வேறொரு புறம் மீன்கள்; இன்னொரு புறம் கட்

குடங்கள்; இவற்றின் இடையில், ஒரு பாறையின்மேல் ஒரு கருங்கரடி தன் பெண்கரடியோடு இருந்ததுபோல, நாகர் தலைவன் தன் மனைவியோடு வீற்றிருந்தான். சாதுவன் தன் அறிவின் நுட்பத்தை நன்கு பயன்படுத்தி, நாகர் தலைவனைத் தன் சொல் வன்மையால் வசப்படுத்தித் தனக்குத் தீங்கு நேராவாறு காத்துக்கொண்டான்.

பிறகு தலைவன் அவனை நோக்கி, "ஐயா, நீர் இங்கு வந்த காரணம் யாது?" என்று கேட்கச் சாதுவன், தான் வந்த வரலாற்றை விளக்கிக் கூறினான். நாகநாட்டரசன் மிகவும் மகிழ்ந்து, "இவன் பசி தணிய ஊனும் கள்ளும் கொடுங்கள்" என்று அருகிலிருந்தவர்க்கு ஆணையிட்டான். சாதுவன் அது கேட்டு, "அவை எனக்கு வேண்டா," என்று மறுமொழி புகன்றான். நாகர் தலைவன் வெடிபடச் சிரித்து, "ஐய, மக்கள் வாழ்வில் உணவும் குடியும் தவிர வேறு என்ன நன்மை உண்டு? எல்லாம் யோசிக்கும் வேளையிற் பசி தீர உண்பதும் உறங்குவதுமே நம் வாழ்வின் நோக்கம் என்பதை நீர் அறியீரோ?" என்று கேட்டான்.

சாதுவன் அது கேட்டு மிகவும் மனம் வருந்தி, "ஐயா, நாகர் தலைவரே! மனித வாழ்வு இவ்விரண்டுள் அடங்குவதன்று; அறிவை மயக்கும் கள்ளைக் குடிப்பதும், உயிர்களைக் கொன்று ஊனைத் தின்று உடம்பை வளர்ப்பதும் கொடிய பாவங்கள் என்று பெரியோர் கூறினர். பிறந்தவர் சாவதும் இறந்தவர் பிறப்பதும் உறங்குவதும் விழிப்பதும்போல உள்ள செயல்களாம். அறம் புரிந்தவர் நல்ல உலகங்களில் நல்வாழ்வு பெறுதலும், பாவம் புரிந்தவர் நரகத்திற் கிடந்து வருந்துவதும் உறுதியாம் என்பது பெரியோர் கருத்து. ஆதலின், நான் இப்பாவ வழிகளில் இறங்கத் துணியேன்" என்று கூறினன்.

நாகர் தலைவன் தனக்கு விளங்காத பல உண்மைகளையும் தெளிவாக அறியும்பொருட்டுச் சாதுவனை நோக்கிப் பல கேள்வி

கள் கேட்டான். அவன் அவற்றுக்குத் தக்க விடைகளை விளக்கமாக எடுத்து இயம்பினன். அது கேட்டு மகிழ்ந்த நாகர் தலைவன், "ஐய, கள்ளும் ஊனும் இல்லாமல் என்னல் ஒரு கணமும் உயிரோடிருக்க இயலாதே! இந்நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் இயற்கை இது. நாங்கள் பாவம் நீங்கி நல்வழியிற் சேரவேண்டும் என்ற நல்லெண்ணம் உமக்கு இருக்குமாயின், நீர் இங்கேயே இருந்து, எங்களுக்குத் தக்க அற நெறிகளை உபதேசம் செய்துகொண்டு இருப்பீராக" என்று கூறினன்.

அதுகேட்ட சாதுவன், "நன்று சொன்னீர்! நல்ல வழியில் நடக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமாயின், உங்களுக்குத் தக்க அறம் சொல்வேன்; கேட்டு நடப்பீர்: இப்பக்கங்களிலே கப்பல் கவிழ்ந்து கடலில் விழுந்த எவரேனும் உயிர் பிழைத்துக் கரையேறி உம் நாட்டுள் நுழைவாராயின், அவரைக் கொன்று தின்னும் கொடிய வழக்கத்தை விட்டு, உயிர்களைக் காப்பாற்றும் புண்ணியத்தை மேற்கொள்வீர். ஊன் தின்னும் ஆசை விடாதிருப்பின், கிழப்பருவத்தாற் செத்த மிருகங்களைத் தின்னுங்கள்; மற்ற எவ்வகைக் கொலையும் ஒழியுங்கள்" என்று உபதேசித்தான்.

நாக நாட்டுத் தலைவன் அது கேட்டு மகிழ்ந்து, "ஐய, இன்றளவும் நாங்கள் இவ்வழியில் வந்த பலரைக் கொன்று அவர்களிடம் கவர்ந்த இப்பொருள்களை எல்லாம் உமக்குக் கொடுக்க விரும்புகிறேன்; இந்நாட்டில் இந்நிதிகள் பயன்படா; உம் நாட்டில் இவைகள் தக்க வழியிலே பயன்படும்" என்று கூறிக் கொடுக்க, அவற்றை எடுத்துக்கொண்டு, சந்திரதத்தனது மரக்கலம் அவ்வழியில் வரக்கண்டு, அதில் ஏறிச் சாதுவன் புகார் நகரம் வந்தான்.

ஆதிரையின் கற்பை அறிந்த நகர மக்கள், சாதுவனை அன்போடு எதிர்கொண்டு நகர்க்குள் அழைத்து வந்தனர்.

அவனும், முன்பு தான் அந்நகரில் வாழ்ந்த காலத்தில் இயற்றிய தீச்செயல்களை எண்ணி, மனம் வருந்தித் தன் மனைக்கருகில் நடந்துவந்தான். ஆதிரை, தன் கணவன் வருவது கண்டு, பல்லாண்டுகளாகத் தவம் புரிந்து தேடிய தெய்வத்தைக் காணப் பெற்றவர் போல, அவனை உள்ளன்போடு உபசரித்து வரவேற்றாள்.

தன்னை வரவேற்ற ஆதிரையின் கற்புச் செல்வத்தை நன்கு உணர்ந்த சாதுவன், "பெண்ணே, நான் அறியாமையாற் செய்த குற்றங்களைப் பொறுத்து, என்னை அன்புக்கு உரியவனாக ஏற்றுக்கொண்ட உன் பெருமையை நான் எங்ஙனம் பாராட்டுவேன்!" என்றான். ஆதிரை, "என் கடமையை நான் ஒழுங்காகச் செய்வதற்குப் பாராட்டும் வேண்டுமா ? மங்கையர் கற்பே விளக்கமாகக் கொண்ட இல்லங்கள் நிரம்பிய இந்நாட்டிலே, அறியாச் சிறு பெண்ணாகிய என்னை இச்செயலுக்காகப் புகழ வேண்டுமா ?" என்று கூறி வணங்கினாள். சாதுவன் அவளை அன்போடு தழுவி அகம் புகுந்து, அன்றுமுதல் தான் தேடிய பொருள்களைக்கொண்டு, எளியவரும், இரவலரும் மனம் மகிழ்ந்து வாயார வாழ்த்த, அறங்கள் பல புரிந்து வாழ்ந்துவந்தான். இத்தகைய கற்புத் தெய்வத்தின் கையால் மணிமேகலை தனது பிச்சைப் பாத்திரத்தில் ஐயமேற்று,நாட்டில் வறுமை தலைகாட்டாது ஒழித்துப் புகழ் பூண்டாள்.

1. அரும்பத விளக்கம்

மரக்கலம் - கப்பல்; பொய்கை - குளம்; பொலிந்த-விளங்கிய; அசரீரி - ஆகாயவாணி, சரீரம் தோன்றாமல் சொல்மாத்திரம் கேட்பது; ஊன் - மாமிசம்; இயம்பினான் - சொன்னான்; புகன்றான் - சொன்னான்; புகல் - சொல்; இரவலர்-பிச்சை எடுப்போர்; ஆணை- உத்தரவு; துறவு - சந்நியாசம்; தேக்கு + இலை = தேக்கிலை.

2. கேள்விகள்

1. சாதுவன் இளமையில் எவ்வாறு தன் செல்வத்தை இழந்தான் ?
2. நாக நாட்டுத் தலைவனுக்குச் சாதுவன் அருளிய உபதேச மொழிகள் யாவை ?
3. சாதுவன் வருகிறவரையில் ஆதிரை எவ்வாறு தன் காலத்தைக் கழித்தாள் ?
4. இந்தப் பாடத்தால் விளங்கும் அறவுரைகள் யாவை ?

3. இலக்கணம்

1. விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை (1) தோன்றல் விகாரம், (2) திரிதல் விகாரம், (3) கெடுதல் விகாரம் என்பன.

(உ-ம்.) (1) புளி + பழம் = புளி + அம் + பழம்
= புளியம்பழம்—(அம்) தோன்றல் [விகாரம்.

(2) பல் + பொடி = பற்பொடி—திரிதல் விகாரம்.

(3) மரம் + வேர் = மரவேர்—(ம்) கெட்டது ; கெடுதல் விகாரம்

2. இ, ஈ, ஐ — இவற்றில் ஒன்று நிலைமொழியின் கடைசியில் இருந்து, வருமொழி முதலில் உயிர் வரின், இடையில் 'ய்' தோன்றும்.

(உ-ம்.) (1) மணி + அடி = மணி + (ய்) + அடி
= மணியடி.

(2) தீ + அவி = தீ + (ய்) + அவி
= தீயவி.

(3) பனை + ஓலை = பனை + (ய்) + ஓலை
= பனையோலை.

பயிற்சி

1. தீயணை, மணியழகு, தென்னையோலை — பிரித்து இலக்கணம் கூறு.
2. கற்சட்டி, மரவேர், பனம்பழம்—விகாரங்கள் எவை?
3. இப்பாடத்தின் முதற் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.
4. இரண்டாம் பிரிவில் உள்ள உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகள் ஆக்கு.
5. மூன்றும் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைக் கூறு.
6. நான்காம் பிரிவில் இருக்கும் ஐம்பால் பெயர்களைச் சொல்.
7. ஐந்தாம் பிரிவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.
8. இப்பாட வரலாற்றைச் சுருக்கி 20 வரிகளில் கட்டுரையாக எழுது.
9. இதனை மணிமேகலை கூறுவது போலக் கூறு.
10. இதனை ஆதிரை சொல்லுவது போலச் சொல்லு.
11. ஒவ்வொரு பிரிவையும் மௌனமாகப் படித்துத் தலைப்புக் கொடு.
12. ஆதிரையின் குணநலன்களைப் பற்றி 16 வரிகள் எழுது.

---

18. உடலைப் போற்றும் முறை

நாம் இம்மை மறுமைப் பயன்களை அடைவதற்கு நமது உடலே சாதனமாம். அவ்வுடல் சுகமாக இருந்தால்தான் சகல நன்மைகளையும் ஒழுங்காக நாம் அடையலாம். அவ்வுடலுக்கு ஏதேனும் கெடுதி ஏற்படுமாயின், நாம் நினைத்தவற்றை அடைய முடியாது. ஆகையால், **‘நோய்க்கு இடங்கொடேல்’** என்ற ஔவையார் திருவாக்கின்படி நமக்கு யாதொரு வியாதியும் அணுகாதவாறு நாம் நமது உடலைப் போற்றவேண்டும்.

முதலாவதாக நாம் கவனிக்கவேண்டுவது **காற்று**. நம்மோடு பிறக்கும்போதே தோன்றிய மூச்சுக் காற்று நம்மை விட்டு நீங்கினுல் நாம் இறந்துவிடுவோம். நாம் உண்ணும் உணவையும், குடிக்கும் தண்ணீரையும் வெறுத்துச் சில நாள் இருக்கலாம். ஆனுல், காற்றில்லாது சில நிமிஷங்கள்கூட இருத்தல் இயலாது. அக்காற்றும் நல்ல காற்ருக இருக்கவேண்டுவது அவசியம். கெட்ட காற்றைச் சுவாசித்தால், அது உடலிற் சென்று இரத்தத்தைக் கெடுத்து நோயை உண்டுபண்ணுகிறது. சுத்தமான காற்றிற்கும் நாம் சுவாசித்து வெளிவிடும் காற்றிற்கும் பேதமுண்டு. நாம் வெளியிடுகிற காற்றை ஒரு பாத்திரத்தில் சேர்த்து அதற்குள் ஒரு விளக்கைக் கொண்டுபோனுல், அது அணைந்துவிடுகிறது. இதனுல் நாம் வெளிவிடும் காற்று அசுத்தமானதென்பது தெரிகிறது. ஆதலால், அதைச் சுவாசிக்கக் கூடாது. மேலும், கெட்ட பதார்த்தங்களிலிருந்து வரும் கெட்ட காற்றையும் நாம் சுவாசித்தலாகாது. இதைத் தடுப்பதற்கு ஜன நெருக்கமான இடங்களிலும் அசுத்தமான இடங்களிலும் வீடுகள் கட்டலாகாது. சுத்தமான காற்று வருமிடங்களிலேயே, வீடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். கிராமங்களில் வாழ்பவர்கள் இதனைக் கவனிக்க வேண்டுவதில்லை. ஏனென்ருல், அங்கு நல்ல காற்றுத் தாராளமாக வீசும். நகரங்களில் வசிப்பவர்களே இதனை நன்ருகக் கவனிக்க வேண்டும். மாலை நேரங்களில் நல்ல காற்று வீசும் வெளியிடங்களுக்குச் சென்று உலாவி வருதல் நலம்.

நித்திரை செய்யும் காலங்களில் பலருடன் படுத்துக்கொள்ளுதலும் முகத்தைத் துணியால் மூடிக்கொள்ளுதலும் ஆகா. அவ்வாறு செய்வதால், நாம் சுவாசித்து வெளியிட்ட அசுத்தக் காற்றையே மீண்டும் நாமே சுவாசிக்கும்படி நேரிடுகிறது. குளிர் காலங்களில் உடம்பை மட்டும் கம்பளியால் மூடவேண்டுமே தவிர, முகத்தை மூடிக்கொள்ளக் கூடாது.

நாம் படுத்திருக்கும் அறையின் சன்னல்களை மூடுதலும் ஆகாது. இக்கெட்ட பழக்கங்களைச் சிறுகச் சிறுக விட்டுவிட வேண்டும். வெளியிற் செல்லும் காலங்களில் உடுப்புகளையோ, மேலாடைகளையோ தரித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், மார்பிலும் விலாப்புறங்களிலும் உள்ள மயிர்த் துவாரங்களின் வழியாகக் காற்று உள்ளே சென்று இருமல், சளி முதலியவற்றை உண்டு பண்ணிவிடும்.

இரண்டாவதாக நாம் கவனிக்க வேண்டுவது **தண்ணீர்** ஆகும். தண்ணீரின் குணம் அது இருக்குமிடத்திற்கு ஏற்றவாறு மாறுபடுகிறது. ஆகையால் அசுத்தமான இடங்களிலிருக்கும் தண்ணீரைப் பருகலாகாது. பருகினல், அசுத்தத் தண்ணீரில் உள்ள புழுக்கள், நீருடன் சேர்ந்து, உடலினுட் சென்று சுத்த இரத்தத்தைக் கெடுத்துவிடுகின்றன. ஏரிகள், குளங்கள் முதலியவற்றில் உள்ள தண்ணீரைவிடக் கிணறுகளிலுள்ள தண்ணீரே சுத்தமுடையது. ஏரி குளங்களிலிருக்கும் தண்ணீர் ஜனங்கள் குளித்தல், ஆடைகளைத் துவைத்தல், கால் கழுவுதல் முதலியவைகளால் அசுத்தம் அடைகிறது. ஆதலால் கிணற்று நீரை உபயோகிப்பதே நலமாகும். கிணற்றுக் கருகில் மரங்கள் இருத்தல் கூடாது. அவ்வாறு இருந்தால் அவற்றின் இலைகள் அதில் உதிர்கின்றன. அவற்றில் தங்கும் பறவைகள் அதில் எச்சமிடுகின்றன. கிணறுகள், சூரியனுடைய கிரணங்கள் நன்ருய்ப் படும்படி அமைந்திருக்க வேண்டும். சுத்தமான நீர் கிடைக்காவிட்டால், கிடைக்கும் நீரை நன்ருகக் காய்ச்சி வடிகட்டிப் பருகவேண்டும்.

மூன்ருவதாக நாம் கவனிக்க வேண்டுவது **உணவு**. மெல்லிய அரிசியைப் பாகஞ் செய்து உண்பதே நலமாகும். இது கருதியே **'நெற் பயிர் விளை'** என ஔவையாரும் கூறியிருக்கின்றனர். கோதுமை முதலியவற்றில் அதிகச் சத்து இருந்தாலும் ஜீரணமாவதற்கு அதிக நேரமாகும். நாம் உண்ணும் அன்னமோ

இலகுவில் ஜீரணமாவதாக இருக்க வேண்டும். ஆங்கிலேய வைத்திய நிபுணர்களும் மனிதனுக்கு அரிசி உணவே ஏற்ற தெனக் கூறியிருக்கின்றனர். வெகுகாலமாகக் கோதுமை முதலியவற்றை உபயோகித்த மேல் நாட்டினரும் இப்பொழுது நாம் உண்ணும் அரிசி உணவையே உண்ணுகின்றனர். ஆதலின், உடம்பிற்கு நன்மையைக் கொடுப்பது அரிசி உணவேயாகும். அடிக்கடி சிற்றுண்டிகளைத் தின்னலாகாது. சிற்றுண்டிகளைத் தின்பவர்க்குச் சரியான பசி உண்டாகாது. அன்றியும், வயிற்று வலி, புளித்த ஏப்பம் முதலியன ஏற்படும். இதனாலேதான் **'நுண்மை நுகரேல்'** என ஔவையார் கூறியிருக்கிறார்.

புலாலைக் காட்டிலும், மரக்கறிகளே உடலுக்கு ஏற்றவை. புலாலிலுள்ள சத்தைக் காட்டிலும் கிழங்கு வகைகளில் அதிகமான சத்து இருக்கிறது. வெகு காலமாகப் புலாலை உண்டு வந்த ஆங்கிலேயரும் மரக்கறிகளில் நல்ல சத்து இருக்கிறதென்று கூறுகின்றனர். ஆதலின், கூடிய மட்டும் புலாலை நீக்கி விடுவது உடலுக்கு நன்மை பயக்கும். முன் உண்ட உணவு ஜீரணமாகாவிடில் திரும்ப உண்ணலாகாது. அடிக்கடி உண்பதும், அளவிற்கு மிஞ்சி உண்பதும் நோய்க்கு இடந்தரும். கடுமையான வேலை செய்பவர் அதிகமாக உண்ணலாம். மூளை வேலை செய்கிறவர்கள் சிறிது குறைத்தே உண்ணல் வேண்டும். குறித்த காலங்களில் உண்ணும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு பழகிக் கொண்டால், நல்ல பசியெடுக்கும்; வயிற்றுச் சம்பந்தமான நோய்கள் ஏற்படா. தற்காலத்தில் ஏற்பட்ட காப்பி, தேயிலை முதலியவற்றைப் பருகுவதை விடப் பசுவின் பாலை மாத்திரம் குடிப்பது நலம். இது உடலுக்கு நலத்தையும் பலத்தையும் உண்டுபண்ணும்.

இனி, நான்காவதாக நாம் கவனிக்க வேண்டுவது **உறக்கம்.** உறக்கம் மனிதர்க்கு இன்றியமையாதது. நாம் பகல் முழுதும் மூளையாலும் உடலாலும் வேலை செய்கிறோம். அதனால் உட

லும், மூளையும் தளர்ச்சி அடைகின்றன. அத்தளர்ச்சியைப் போக்குவதற்காகவே இரவில் நித்திரை செய்கிறோம். சரியாகத் தூங்காவிடில் சோம்பலும் வியாதியும் ஏற்படும். ஆகையால், ஒவ்வொருவரும் இராக்காலங்களில் எட்டு மணி நேரத்திற்குக் குறையாமல் நித்திரை செய்யவேண்டும். கிழவர்கள் எட்டு மணி நேரத்திற்கு மேலும் நித்திரை செய்யலாம். பள்ளியிற் பயிலும் மாணவர்கள், ஒன்பது மணிக்குள் படுத்துக்கொள் வது நலம்; அதிகாலையில் சூரியன் புறப்படும் முன் எழுந்திருக்க வேண்டும். தினந்தோறும் காலை ஐந்து மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருந்தால், அறிவு விருத்தியும் ஞாபகச் சக்தியும் ஏற்படும். உண்டவுடன் நித்திரை செய்வதும், பல விஷயங் களை நினைத்துக்கொண்டு நித்திரை செய்வதும் கூடா. சிறிது தூரம் உலாவி வந்த பின்பு, மன அமைதியுடன் நித்திரை செய்யவேண்டும். அவ்வாறு செய்யின், நல்ல ஜீரண சக்தியும் ஊக்கமும் நாள்தோறும் அதிகரிக்கும்.

ஐந்தாவதாக நாம் கவனிக்க வேண்டுவது **உடற்பயிற்**சியாம். உடற்பயிற்சி மனிதனுக்கு மிகவும் அவசியமானது. பழக்கத்தில் இல்லாத ஆயுதங்கள் எவ்வாறு துருப்பிடித்துக் கெட்டுவிடு கின்றனவோ, அவ்வாறே பயிற்சி யில்லாத உடல், இரத்த ஓட்டமும் இரத்த சுத்தியும் இல்லாமல் கெட்டுவிடும். நோய் உள்ளவர்களும் தினந்தோறும் தேகாப்பியாசம் ஒரு சிறிது செய்வார்களானால், அவர்களுடைய வியாதி அற்றுப் போகும். ஆகையால் உடற்பயிற்சியை இளமை தொட்டுச் செய்தால் உடல் வன்மையும் பசியும் உண்டாவ தோடு கபம், வாதம், சூலை முதலிய நோய்களும் நீங்கும்.

இவ்வுடற் பயிற்சியைக் கலாசாலைகளில் 'பார்' விளை யாட்டு, பந்தய விளையாட்டுகள் மூலமாக நடத்தி வருகின்றனர். உடம்பை வெவ்வேறு வகையாகப் பயிற்சி செய்யுமாறும் மாணவர்களைப் பழக்குகின்றனர். இவ் விளையாட்டுகளில்

கலந்துகொள்ளும் போது,அசாக்கிரதையாக இருக்கக்கூடாது. அதனால், கை கால் முதலிய உறுப்புகளுக்கு ஊனம் ஏற்படவும் கூடும். நாள்தோறும் காலையில் எழுந்தவுடன் அரைமணி நேரமாவது, பழகின பயிற்சிகளைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் உடம்பிலுள்ள கெட்ட நீர் வியர்வை மூலமாக வெளிப்பட்டுவிடும். பின்பு, சுத்த இரத்தம் உடல் முழுதும் பரவி, உடல் நலத்தை உண்டுபண்ணும்.

ஆறுவதாக நாம் கவனிக்க வேண்டுபவை **சுத்தமும் இளைப்பாறுதலும்** ஆம். முன் கூறியவற்றை எல்லாம் செய்தபோதிலும் இவ்விரண்டும் இல்லாவிடில் பயனில்லை. நமது உடம்பில் உள்ள அசுத்தங்கள், அவை கழிக்கப்படவேண்டும் வழிகளால் நீங்குகின்றன. தினந்தோறும் அவ்வழிகள் மூலமாக மல ஜலங்கள் வெளிப்படுகின்றன. மல ஜலங்களைச் சரியாகக் கழிக்காவிடில் வியாதிகள் பல ஏற்படும்.

படுக்கையை விட்டு எழுந்தவுடன் பல் துலக்கிக்கொண்டு ஆற்று நீரிலேனும் ஊற்று நீரிலேனும் நீராடல் வேண்டும்; இல்லாவிடில் ஏரி, குளங்களிலுள்ள தண்ணீரைக் கொண்டு வந்து, வெந்நீராக்கி நீராடலாம். எந்த நீரும் காய்ச்சிக் குளித்தால் யாதொரு கெடுதியும் செய்யாது. வெந்நீரை மிதமான சூட்டில் உபயோகித்தல் ஏற்றது. இவ்வாறு நீராடுவதால் உடம்பிலுள்ள வியர்வை, தூசு முதலிய அழுக்குகள் நீங்கிவிடும். நீராடிய பின் சுத்தமான ஆடையைத் தரித்துக்கொள்ள வேண்டும்.

இளைப்பாறுதல் என்பது யாதொரு வேலையும் செய்யாதிருப்பதாம். பகற் காலங்களில் சரீரத்தால் பாடுபடுகிறவர்கள், இராக் காலங்களில் இளைப்பாறுகிறார்கள். ஆனால், மூளையை உபயோகித்து வேலை செய்பவர்களுக்கு இராக்காலம் மாத்திரம் போதாது ; சில தினங்கள் வேலையின்றியும் இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பின், மூளைக்குக் களைப்பு ஏற்படாது. இது

பற்றியே மாணவர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பல விடுமுறை நாட்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஓய்வு காலங்களில் அழகிய காட்சிகளையும் இனிய கீதங்களையும் கண்டும் கேட்டும் இன்புற வேண்டும். அவ்வாறு செய்வது மன அமைதியையும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ணும்; அவ்வக் காலங்களில் ஏற்படும் கவலைகளையும் குறைக்கும். ஆகையால், பிள்ளைகளே! இங்குக் கூறப்பட்டவைகளை நீங்கள் தவறாமல் அனுசரிக்க வேண்டும்; அவற்றின்படி நடந்தால், நோயில்லாமல் உடல் நலம் பெற்று நீண்ட காலம் வாழலாம்.

1. அரும்பத விளக்கம்

புலால் - மாமிசம்; தளர்ச்சி - சோர்வு; அனுசரிக்க - மேற்கொண்டொழுக, கடைப்பிடிக்க; இம்மை - இப்பிறப்பு; மறுமை - மறுபிறப்பு; அணுகாதவாறு - நெருங்காதபடி; சாதனம் - துணை அல்லது கருவியாக உள்ளது. (இளைப்பு + ஆறுதல் = இளைப்பாறுதல்; உடல் + பயிற்சி = உடற்பயிற்சி; இம்மை × மறுமை.)

2. கேள்விகள்

1. நமது உடல் நலத்திற்கு இன்றியமையாத பொருள்கள் யாவை?
2. கெட்ட காற்றைச் சுவாசித்தலால் ஏற்படக்கூடிய தீமைகள் யாவை? நாம் வெளிவிடும் காற்று அசுத்தமானது என்பதை விளக்கிக் காட்டு.
3. தூங்கும்போது நாம் கவனிக்க வேண்டும் விஷயங்கள் யாவை?
4. கிணற்றுநீர் சுத்தமானது என்பது எவ்வாறு? கிணறுகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?
5. விடியற்காலையில் எழுந்திருப்பதால் உண்டாகும் நன்மை என்ன?

3. இலக்கணம்

1. ஏ—இது நிலைமொழியின் ஈற்றில் இருக்க, வருமொழி முதலில் உயிர் வந்தால், இடையில் 'ய்' அல்லது 'வ்' தோன்றும்.

(உ-ம்.) (1) தே + ஆரம் = தே+(வ்)+ஆரம்
= தேவாரம்.
(2) சே + அடி = சே+(ய்)+அடி
= சேயடி.
(3) சே + அடி = சே+(வ்)+அடி
= சேவடி.

2. இ, ஈ, ஐ, ஏ ஒழிந்த மற்ற உயிர் எழுத்துகள் நிலைமொழியின் கடைசியில் இருக்க, வருமொழி முதலில் உயிர் வரின், இடையில் 'வ்' தோன்றும்.

(உ-ம்.) பல + ஆடுகள் = பல+(வ்)+ஆடுகள்
= பலவாடுகள்.
கோ + இல் = கோ+(வ்)+இல்
= கோவில்.

பயிற்சி

1. வர+அழைத்தேன், சே+அடி, தே+ஆரம், ஆடை+அணி, ஆடை+உடுத்து, இடை+ஒடிந்தது—சேர்த்துப் புணர்ச்சி விதி கூறு.
2. அவனையடித்தேன், வரவிருந்தான், போயழைத்தான், பலவாலிலைகள், அணுகாதவாறு—பிரித்துப் புணர்ச்சி விதி கூறு.
3. முதல் பிரிவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு.
4. அதில் உள்ள உடன்பாட்டு வினைகளுக்கு எதிர்மறை வினைகளைக் கூறு.
5. இரண்டாம் பிரிவில் உள்ள அறுவகைப் பெயர்ச்சொற்களைச் சொல்லு.
6. அதில் உள்ள ஐம்பால் பெயர்களைக் குறிப்பிடு.

7. அதில் இருக்கும் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் கூறு.
8. மூன்றாம் பிரிவில் உள்ள முக்கால வினைமுற்றுகள், வினையெச்சங்கள், பெயரெச்சங்களைச் சொல்லு.
9. நான்காம் பிரிவில் உள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.
10. இப்பாடத்தைச் சுருக்கி 20 வரிகளில் கட்டுரை வரை.
11. ஒவ்வொரு பாராவையும் படித்துத் தலைப்புக் கொடு.
12. உடலைப் போற்றல் என்பது யாது?—உடலின் தன்மை—போற்றும் முறைமை — அதனால் வரும் பயன்—முடிவு: இக் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரை.

---

19. வீரப் பெண்மணி

(நாடகம்)

முதற்களம்

பாத்திரங்கள் : தந்தை, மகள்.

காலம் : காலை (முதல் நாள்.)

முதிய வீரன் போர்க்கோலம் பூண்டு போருக்குப் புறப்படுகிறான்.

தந்தை :—மகளே, நம் நாட்டிற் பகைவன் புகுந்தான் என்ற சொல் கேட்டேன். நான் எத்தனையோ போர்கள் பார்த்திருக்கிறேன். நம் நாட்டு மறவர் (வீரர்) அயல் நாடுகளிற் போய் வெற்றிபெற்று வந்ததுண்டு; ஆனால், இங்கு எவரும் நுழைந்த கதையே இல்லை. இன்று இது ஒரு புதுமை! இதோ போர்க்களத்துக்குப் போகின்றேன்.

மகள் :—அப்பா ! மறவன், போர்க்களம் என்றால் துள்ளி ஓடுவது இயல்பே. உமக்கு எழுபது ஆண்டுக்குமேல் ஆகிறதே. போர்க்களத்துக்குப் போக உமக்கு ஊக்கம் இருக்கிறது. உடல்



வீரமகளின் தந்தை போருக்குப் புறப்படுதல்.

வன்மை உண்டா? மருமகன் போய்வருவார். நீர் எனக்குக் காவலாக இங்கு இருக்கக் கூடாதா? குழந்தையும் உம்மைத் தேடுவானே.

தந்தை :—மறக்குலத்துப் பெண் இப்படியும் பேசலாமா? வயதால் ஏற்படும் தளர்ச்சி மறவனுக்கு உண்டோ? தாய் வயிற்றிலே யுள்ள மறக்குட்டியும் துள்ளுமே. மறவன், வாள் அல்லது வேல் பாய்ந்து போர்க்களத்தில் இறப்பதே பெருமை. கிழப்பருவத்தில் வீட்டில் இறப்பது மிகவும் சிறுமை! இவ் வுண்மை நீ அறியாததன்றே?

மகள் :—தந்தாய்! நன்றாக அறிவேன். விடை தருகிறேன். போய் வருக. வெற்றி பெற்றால் மீண்டு வரவேண்டும். மற்றது நான் சொல்லவேண்டுமா?

தந்தை :—போர்க்களம் புறப்பட்டால் இரண்டில் ஒன்றே துணிவு. வெற்றி அல்லது வீர சுவர்க்கம். மாலையில் யான் வாகையொடு மீளவில்லை என்ருல், வீர சுவர்க்கம் சென்றேன் என்று உணர்ந்துகொள்.

[புறப்படுகிருன், மகள் வாயிலில் தந்தையை அனுப்பிய மகிழ்ச்சியோடு நிற்கிருள்.]

இரண்டாம் களம்

பாத்திரங்கள் : கணவன், மனைவி.

காலம் : காலை (இரண்டாம் நாள்.)

[வீரமகளின் கணவன் எழுகிருன்.]

கணவன் :—அன்பே! போர் தொடங்கிவிட்டது. அம்பருத் தூணியைத் தோளிலே கட்டு. வாளை எடுத்துக்கொடு.



வீரமகளின் கணவன் போருக்குப் புறப்படுதல்.

மகனைப் பார்த்துக்கொள். புறப்படுகிறேன். நேற்று உன் தந்தையார் நாட்டுக்கும் அரசுக்கும் தாம்செய்யத்தக்க கடமையைச்

செய்தார்; எதிரிகளுக்குப் புறங்காட்டாது போர்செய்து வீர சுவர்க்கம் சென்ருர். நான் இன்று என் கடன் இயற்றப் போகிறேன்.

மனைவி :—நானும் போர்த்தொழில் அறிவேன். விற் போரும் தெரியும், வாட்போரும் தெரியும். நான் உமக்குத் துணையாக வரலாமா?

கணவன் :—பொறு! பொறு! அதற்கும் காலம் வரும். இந்நாட்டில் வில்லும் வாளும் ஏந்த ஆண்மக்கள் இல்லாத நாள் வரும்பொழுது, நீ பெண்படை நடத்தலாம். இன்று நாடு காவல் எங்கள் பணி. வீட்டில் மக்களை நன் மக்களாக வளர்ப்பது உங்கள் பணி என்பதை மறவாதே.

மனைவி :—நேற்றுப் போரில் தந்தையை இழந்தேன்; ஒரு துளி கண்ணீர் விடவில்லை; இம்முதுமைப் பருவத்தில் அவர் தம் நாட்டுக்காக உயிர் கொடுத்தார் என்ற மகிழ்ச்சியே பெற் றேன்; இன்று போருக்கு உமக்கு விடை தருகிறேன். மீண்டு வந்தால் புகழோடும் வெற்றியோடும் வருக. இல்லை என் ருல்......

[கணவன் புறப்படுகிருன்.]

மூன்ரும் களம்

பாத்திரங்கள் : தாய், மகன்.

காலம் : காலை (மூன்ரும் நாள்.)

[மகன் தெருப் புழுதியில் விளையாடுகிருன். தாய திணணையி லிருந்து அழைக்கிருள்.]

தாய் :—குழந்தாய்! இந்த விளையாட்டுப் போதும். இனி நீ வேறு விளையாட்டு விளையாட வேண்டும்.

மகன் :—அது என்ன விளையாட்டு? அம்மா! நீயும் வரு வாயா?

தாய் :—நானும் வருவேன். உன் தாத்தாவும் அப்பாவும் விளையாடிய விளையாட்டு அது. உனக்கும் அதுவே தக்கது.

மகன்:—அம்மா! இதோ வந்துவிட்டேன். எங்கே போக வேண்டும்?



வீரமகள் தன் மகனைப் போருக்கு அனுப்புதல்.

தாய்:—மகனே, நீ உன் நாட்டுக்காக உயிரைக் கொடுக்க வேண்டும். உன் தாத்தா முதல்நாட் போரில் இறந்தார். இரண்டாம் நாட்போரில் உன் தந்தையார் சுவர்க்கம் புகுந்தார். நானும் அப்பொழுதே போயிருப்பேன்; உன்னைப் போர்க் களத்துக்கு அனுப்பும் பொருட்டே இங்கு நின்றேன். இன்று நானும் போர்க்களத்துக்கு வருவேன்.

மகன்:—அம்மா, இதோ நான் போர்க்களம் போகிறேன். வேல் வேண்டும். வாள் வேண்டும்.

தாய்:—என் செல்வமே! இங்கே வா. உன் தலைமயிர் காற்றிற் பறக்கிறது. சிறிது எண்ணெய் தடவி வாரி விடு கிறேன்.

மகன்:—அம்மா! எனக்குப் பெரிய சட்டை போட்டால், பெரிய மனிதனாய் இருப்பேன். நல்ல ஆடை அணிந்து வேல் எடுத்து நடந்துபோகிறேன்.

தாய்:—[தலையை வாரிவிட்டு,] மகனே, இந்த ஆடை உனக் குத் தக்கது. இதோ, இறுகக் கட்டியிருக்கிறேன். இது வழியில் அவிழ்ந்து விழாது. நேரே போர்க்களத்துக்குப் போ. முதுகில் புண்பட்டு என் முகத்தில் விழிக்கக் கூடாது.

மகன்:—என்ன சொன்னாய், அம்மா! எமனும் என் முது கைப் பார்க்க முடியாது. பகைவனை எதிர்த்து நேரே பாய் வேன்; வருவது வரட்டும்.

தாய்:—குழந்தாய், போ! போ! போ! எனக்கும் காலம் நெருங்கி விட்டது. இருவரும் உன் தந்தையைத் தேடுவோம்.

(மகன் துள்ளி ஓடுகிறான்.)

தாய்:—இனி எனக்கு வீட்டில் என்ன இருக்கிறது? யாருக் காக இவ் வீட்டைக் காக்கவேண்டும்?

[போர்க்களம் போகிறாள்.]

1. அரும்பத விளக்கம்

உலை - நெருப்புள்ள அடுப்பு; மறவர் - வீரர்; மறம் - வீரம்; சுவர்க்கம் - தேவலோகம்; வீரசுவர்க்கம் - சண்டையில் இறந் தோர் அடையும் சுவர்க்க பதவி; களம் - இடம், (நிலம்); போர்க் களம் - போர் செய்யும் இடம்; அம்பறாத் தூணி - அம்புக்கூடு; வாகை - வெற்றிமாலை (பெருமை × சிறுமை).

2. கேள்விகள்

1. மறவர்களின் இயல்பு யாது?
2. இக்கதையின் முடிவு என்ன? இதனல் அறியப்படும் நீதி யாது?
3. மறவர் குலத்துப் பெண்மணி தன் மகனைப் பார்த்து என்ன கூறினள்?

3. இலக்கணம்

சொல் இலக்கணம் கூறுதல் :—

கண்ணன் பாடத்தைப் படித்தான்.

(1) **கண்ணன்**—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'படித்தான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

(2) **பாடத்தை**—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, 'படித்தான்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

(3) **படித்தான்**—வினைமுற்று, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்தகாலம், செயப்படுபொருள் குன்றுவினை, '**கண்ணன்**' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

இவ்வாறு ஒவ்வொரு சொல்லுக்கும் இலக்கணம் கூறுதல் **சொல் இலக்கணம் கூறுதல்** எனப்படும்.

பயிற்சி

1. சொல் இலக்கணம் கூறுக :—(1) வரதன் வடையைத் தின்றுன். (2) கண்ணன் பசுக்களை மேய்த்தான். (3) பரந்தாமன் பாடத்தைப் படித்தான்.
2. தின்றுன், மேய்த்தான், படித்தான்—இவற்றுக்குரிய வேறு கால வினைமுற்றுகளைச் சொல்.
3. இவற்றை வினையெச்ச. பெயரெச்சங்களாக மாற்று.
4. பேசலாமா, மறக்குலம், மறக்குட்டி, விடவில்லை, தீயவி, கண்ணருவி—பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

5. கண் + ஆடி, சே + அடி, பா + ஆடை.—சேர்த்துப் புணர்ச்சி இலக்கணம் கூறு.

6. தின்றுன், மேய்கிறது, படிப்பாள்—எதிர்மறை கூறு.

7. ஆவணி, வால், தாமரைக்கொடி, மலர், வெண்மை, பள்ளிக்கூடம், வற்றல், போதல், வரவு, தை, மாமன், கால், படி, வீசை, மைல், நீ, நான், அவர்கள்.—இவை என்னென்ன பெயர்ச்சொற்கள் ?

8. நான் கண்ணனுடன் வந்தபோது நீயும் மாமனும் போனீர்கள்.—இதில் உள்ள மூவிடப் பெயர்களைச் சொல்லு.

9. இராமன் சீதையுடனும் நாய்களுடனும் போகையில் ஜனங்கள் நகரத்திற்கு வெளியே வந்தனர்.—இதில் இருக்கும் ஐம்பால் பெயர்களைச் சொல்.

10. நான் முருகனை அழைத்துக்கொண்டு கந்தனேடு வீட்டுக்குப் போனேன்; கந்தன் முருகனில் பெரியன் ; கந்தனது புத்தகம் பெட்டியில் இருந்தது ; நான், 'கந்தா, உன் புத்தகம் எடு' என்றேன்.—இதில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கூறு.

11. கடவுள் வந்தார், கடவுள் நல்லவர், கடவுள் யார் ?—இவற்றில் பயனிலைகள் எவை ? அவை என்ன பயனிலைகள் ?

12. 'மயிலும் வான்கோழியும்'—இதனை நாடகமாக நடித்துக் காட்டு.

13. 'பொற்கைப் பாண்டியன்'—கதையை நாடகமாக நடித்துக் காட்டு.

14. 'ஆதிரை'—கதையை நாடகமாக நடித்துக் காட்டு.

15. 'வீரப் பெண்மணி'—கதையை நாடகமாக நடித்துக் காட்டு.

செய்யுள் பாடம்

I. நீதிச் செய்யுட்கள்

1. நீதி வெண்பா

எங்கே பிறந்தால் என்ன ?

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என் ? (1)

துஷ்டர்க்கு எங்கும் விஷம்

ஈக்கு விடந்தலையில் எய்துமிரும் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். (2)

பிறந்த இடத்திற் பெருமை பெருதவை

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிரும்
கான வரியுகிரும் கற்ருேரும்—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே யத்தே
சிறந்தவிடத் தன்றே சிறப்பு. (3)

சிற்றறிவுடையவரும் முற்றறிவுடையவரும்

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னேசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ ஒலி. (4)

பொருளால் விளையும் துன்பம்

இன்னல் தரும்பொருளை ஈட்டுதலும் துன்பமே;
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே;—அன்ன
தழித்தலுந் துன்பமே; அந்தோ! பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம். (5)

எதையும் யோசித்துச் செய்யவேண்டும்

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர் துயரம் போல். (6)

உத்தமர் இயல்பு

பொன்னும் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (7)

நல்ல நண்பர் இயல்பு

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையு மேன்மைபோல்—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து. (8)

கற்றவரையும் மற்றவரையும் அறியும் வழி

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கை நயத்தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (9)

போலிப் புண்ணியர்

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூர மாமோ கடலுப்பு?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ? புகல். (10)

1. அரும்பதவுரை

1. சவரம் - கவரிமான் மயிர்; பூமருதேன் - பூவில் உள்ள தேன்; அழல் - நெருப்பு; எள்ளார் - இகழமாட்டார்.

2. விடம் - நஞ்சு; எய்தும் - இருக்கும்; இரும் - பெரிய; பைங்கண் - பசுமையான கண்; அரவு - பாம்பு.

3. மருப்பு - கொம்பு; வரி - புலி; உகிர் - நகரம்.

4. சிலுசிலுத்தல் - அறியாது குழறுதல்; கலம் - பாத்திரம்.

5. இன்னல் - துன்பம்; பேணுதல் - போற்றுதல்,

6. கருமம் - காரியம்; தேர்ந்து - யோசித்து; நகுலன் - கீரிப் பிள்ளை; மறைப் பொற்கொடி—பார்ப்பனி.

7. சின்னம் - குறைவு; நலிந்தாலும் - வருந்தினுலும்.

8. வெகுண்டு - கோபித்து; நூல் - கற்கும் சாத்திரம்.

9. ஆக்கை - உடம்பு; கோலம் - தோற்றம்.

10. பொற்பு - அழகு; ஊரும் - மிகுந்த; புல்லியர் - அற்பர்; புகல் - சொல்.

2. கேள்விகள்

1. நல்லோர் பிறப்புக்குத் திருஷ்டாந்தம் மூன்று கூறு.
2. அரவுக்கு விடம் எங்கு இருக்கும்? துர்ச்சனர்க்கு எங்கு இருக்கும்?
3. யானைக் கொம்பும் புலி நகமும் எங்குச் சிறப்புறும்?
4. வெண்கலமும் பொன்கலமும் யார் யார்க்கு உவமையாம்?
5. பொருளைத் தேடுவதில் துன்பம் உண்டு என்பது ஏன்?

6. நகுலன் வரலாறு யாது? மறைப்பொற்கொடி—பொருள் கூறு.
7. பொன்னும் கரும்பும் பாலும் எவர்க்கு நிகர் ? எதனுல் ?
8. பாலும் நீரும் எவ்வுண்மையை விளக்கும் ? எப்படி ?
9. காக்கையும் குயிலும் எந்த உண்மையை விளக்கும் ?
10. புல்லியர் புண்ணியர் ஆகாமை ஏன் ?

---

2. நல்வழி

உடம்பின் இயல்பு

எல்லாப் படியாலும் எண்ணினுல் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினுல் ஆங்கமல நீர்போல்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. (1)

தேடத்தக்க செல்வம்

ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினுமூழ்
கூட்டும் படியின்றிக் கூடாவாம்;—தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர்! கேண்மின்:
தரியாது காணும் தனம். (2)

உழவின் பெருமை

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (3)

வினைப்பயன்

ஆவாரை யாரே அழிப்பர் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். (4)

உடம்பைப் போற்றப் படும்பாடு

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால் (5)
நாழி அரிசிக்கே நாம்.

திருமகள் திருவருள்

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். (6)

பணம் புதைத்தவர் கதை

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்:—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்?
பாவிகாள்! அந்தப் பணம். (7)

ஓரம் சொன்னவர் கெடுதல்

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை. (8)

பாழ் ஆனவை

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. (9)

ஈசன் செயல்

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். (10)

—ஔவையார்.

1. அரும்பதவுரை

1. படி - அளவு, மலி - நிறைந்த, புன்குரம்பை - அற்பக்கூடு, கமலநீர் - தாமரை இலையில் உள்ள நீர்.

2. ஈட்டும் - தேடும், ஊழ் - விதி, தேட்டம் - தேடத்தக்கது, மகிதலம் - பூமி, தனம் - செல்வம், தரியாது - நிலையாது.

3. அரசு - அரசர், வீற்றிருந்த - பெருமையோடு வாழ்ந்த, பணி - தொழில், பழுது - குற்றம், குறைவு.

4. ஆவார் - வாழ்பவர், தவிர்ப்பவர் - தடுப்பவர், ஓவாமல் - ஒழியாமல், ஐயம் - பிச்சை, அம்புவி - அழகிய பூமி.

5. சேவித்து - அடிமைசெய்து, இரந்து - பிச்சை ஏற்று, தெண்ணீர் - தெளிந்த நீர், பாவித்து- வேடம்போட்டு. போவிப்பம்- நடத்துவோம், வளர்ப்போம்.

6. நிலம் பொதியும் - நிலத்தை மறைக்கும், திரு - செல்வம், சிவந்த தாமரையாள் - செந்தாமரை மலரிற் கோயில் கொண்டுள்ள திருமகள் (இலக்குமி).

7. கூடு - உடம்பு, ஆவி - உயிர்.

8. பாதாள மூலி-ஒருவகைப் பூண்டு, சேடன்-பாம்பு, மன்று- சபை, ஓரம் - வழக்கழிவு.

9. நீறு - திருநீறு, உண்டி - உணவு, உடற்பிறப்பு - சகோதரர், மடக்கொடி - இளம் பெண்ணாகிய மனைவி.

10. எனை ஆளும் - என்னை ஆண்டுகொண்ட.

2. கேள்விகள்

1. உடலின் இயல்பு யாது ?
2. தேடத்தகுவது எது ?
3. வயிற்றின் கொடுமை என்ன செய்யும் ?
4. யார் திருவருள் பெறுவர் ?
5. வழக்கழிவு சொன்னவர் என்னுவர் ?
6. பாழாவன எவை ?
7. ஈசன் செயல் எப்படி அறியப்படும் ?

---

3. நன்னெறி

நல்லவர் மனம்

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ ? நன்னுதால் ! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ ? விருப்பு. (1)

கூடிப் பிரியேல்

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் ;—பூக்குழலாய் !
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினுந் திண்மைநிலை போம். (2)

கல்விச் செருக்கு ஆகாது

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனைய செருக்காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (3)

சினம் அடக்கும் குணம்

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு. (4)

அன்பிலார் சிறுமை

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும் ?—நல்லாய் !
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும் ?
விழியிலார்க் கேது விளக்கு ? (5)

கன்றும் கனி உதவும்

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?—பைந்தொடீ !
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. (6)

இனிய சொல்லின் பெருமை

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்(து)
அதிர்வளையாய் ! பொங்கா தழற்கதிரால்; தண்ணென்
கதிர்வரவாற் பொங்கும் கடல். (7)

கற்றவர்முன் கல்லாதவர்

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணில் இலையாம்—எழுத்தறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. (8)

அற்பர் இயல்பு

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும்; செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி? (9)

மன்னனும் கற்றோரும்

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்? (10)

—சிவப்பிரகாச சுவாமிகள்.

1. அரும்பதவுரை

1. மாசு - குற்றம், ஏனையவர் - மற்றவர், இங்கு மாசு உள்ள நெஞ்சுடையார். பிறிது-வேறு, இங்குத் துன்பம் தருவது. நல்லோன்- சாக்கிய நாயனார், சிலை - கல், கருப்பு வில்லோன் - கரும்பு வில் உடைய மன்மதன், மலர் - மலரம்பு.

2. நீக்கம் அறும் இருவர் - பிரியாத நண்பர் இருவர், நீங்கி - மனம் வேறுபட்டுப் பிரிந்து, நொய்து - இளைத்ததாகும், புல்லினும் - சேர்ந்தாலும், திண்மை நிலை - உறுதி நிலை.

3. அனையம் - போல இருக்கிறோம், அடல் - வலிமை, ஏறு - சிங்கம், செருக்கு - கர்வம், விடல் - விடாதே, முனிக்கு அரசு - முனிவர் தலைவராகிய அகத்தியர், பனிக்கடல் - குளிர்ந்த கடல்.

4. உள்ளம் - மனம், காத்தல் - அடக்கல், தடங்கரை - அகன்ற கரை, பேர்த்து விடுத்தல் - இடித்து விடுதல்.

5. அன்பு இங்கு இல்லானுக்கு - இவ்வுலகில் வாழும் உயிர்களிடம் அன்பு இல்லாதவனுக்கு, மொழி - பேசும் திறம்.

6. எந்தை - எங்கள் தந்தை, நல்கூர்ந்தான் - வறியவனானான், இரப்பார் - யாசகர், மைந்தர் - மக்கள், பயன் - பழங்கள், அரம்பை - வாழைமரம்.

7. இருநீர் - கடல், வியன் - பெரிய, அழற் கதிர் - வெங்கதிர் உள்ள சூரியன், தண்ணென் கதிர் - சந்திரன்.

8. எழுத்தறியார் - இலக்கணம் அறியாதார், ஆயும் - ஆராயும், கடவுள் - சிவபெருமான், சுரநீர் - கங்கை, மிகை - பெருக்கு, வெள்ளம்.

9. கீழ் - கீழோர், சேக்கை - படுக்கை, பொழில் - சோலை.

10. பொன் - பொன்னுபரணம், புனையா - அணியா, அணி-ஆபரணம், உறுப்பு - அவயவம்.

2. கேள்விகள்

1. (1) எவர் வன்சொல் இனிது? எவர் இன்சொல் பிறிது? ஏன்?
   (2) நல்லோன் யாவன்? அவன் வரலாறு யாது?
   (3) வில்லோன் யாவன்? அவன் வரலாறு யாது?
2. (1) நெல்லின் உமி - இதற்கு உபமேயம் யாது?
   (2) 'நொய்தாகும்'—எது? ஏன்?
3. படித்தோம் என்று கர்வப்படலாகாது.—ஏன்?
4. எதனைக் 'குணம்' என்க? ஏன்?
5. (1) விளக்கு, முதுநூல் - இவை கூறப்பெற்ற சந்தர்ப்பம் என்ன?
   (2) இல்லான் - எது இல்லான்? அதனல் அவனுக்கு என்ன நஷ்டம்?
6. வாழையின் இயல்பென்ன? இதற்கு உபமேயம் யாது?
7. சூரியன், சந்திரன் - கூறப்பெற்ற சந்தர்ப்பம் என்ன?
8. 'எழுத்தறிவார்' என்று தொடங்கும் செய்யுளில் உள்ள உபமான, உபமேயங்களை விளக்கு.
9. (1) வண்டு, காக்கை - இவற்றின் இயல்பு என்ன?
   (2) இவற்றுள் எதற்கு எது உபமேயம்?
10. (1) 'பொன் அணியும்' என்று தொடங்கும் பாட்டை எழுதி, உபமான, உபமேயங்களை விளக்கு.
    (2) இப்பாட்டுக்குப் பதவுரை கூறு.

(3) இதற்குப் பொழிப்புரை கூறு.
(4) இதற்குக் கருத்துரை சொல்லு

---

4. திரிகடுகம்

நல்லோர் இயல்பு

1. உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினும் சான்ருண்மை குன்ருமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

செல்வம் உடைக்கும் படை

2. தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

மெய்ப்பொருள் அறிவார்

3. வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

அணிகலம் மூன்று

4. கண்ணுக் கணிகலம் கண்ணேட்டம்; காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை ;—நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வி; இம்மூன்றும்
குறியுடையார் கண்ணே உள.

பெருமை பெறும் வழி

5. முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு—வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தல் இம்மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு.

—நல்லாதனர்.

1. அரும்பதவுரை

1. உண்பொழுது - உண்ணுமுன்பு, நீராடி - குளித்து, பால் பற்றி - ஒரு சார்பாக, சாயினும் - செத்தாலும், சான்ருண்மை - இயற்கைப் பெருமை, மானம்; 'தூயம்' என்பார் - 'நாம் சுத்தமுள்ளோம்' என்று சொல்பவர்.

2. வியந்து - பாராட்டி, தருக்கல் - கருவம் கொள்ளல், தாழ்வு - அடங்குதல், கொன்னே - வீணுக, காரணமில்லாமலே; வெகுளி - கோபம், வெஃகும் - விரும்பும்.

3. வைததனே - பிறர் வைத வசவை, கட்டி - வெல்லம்.

4. காமுற்ற - விரும்பிய, நாண் - வெட்கம், கண்ணேட்டம் - இரக்கம், தாக்ஷணியம்.

5. முந்தை - முதலில், இளம் பருவத்திலேயே; எழுத்தின் வரவு - எழுத்திஞல் வரும் கல்வி, வழிபட்டு-வணங்கி, பெருநெறி-பெரியோர் சென்ற வழி, விழுப்பம் - உயர்வு, தூராவாறு-அடைபடாமல் செம்மையாய் இருக்கும் வழி.

2. கேள்விகள்

1. தூயர் தொழில்கள் மூன்று உரைக்க.
2. செல்வம் அழிக்கும் கருவிகள் எவை ?
3. மெய்ப்பொருள் காண வல்லவர் யார் ?
4. குறியுடையார்கண் உள்ள குணங்கள் எவை ?
5. பெருமை பெற வழி கூறு.

5. சதகச் செய்யுள்

உடன்பிறந்தார் இயல்பு

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகம் தம்சுகமெனக்
கொண்டுதாம் தேடுபொருள் அவர்தேடு பொருளவர்
கோதில்புகழ் தம்புகழெனத் [கொள்
தேடுற்ற அவர்நிந்தை தம்நிந்தை தம்தவம்
தீதிலவர் தவமாமெனச்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்
கூருற்ற விரையெடுத் தோருடல் நிறைத்திடும்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதருமமாம்;
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே!
அண்ணலெமத ருமைமதவேள்!
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! (1)

—அறப்பளீசுர சதகம்

அற்பர் பெருமை பெருமை

சிங்கார வனமதில் உதிப்பினும் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகுமோ?
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகுமோ?
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானையின் கன்றாகுமோ?
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர்பெரி யோராவரோ?

சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாளக்கி ராமம்ஆமோ ?
தடமேவு கடல்நீரி லேஉப்பு விளையினும்
சாரசர்க் கரையாகுமோ ?
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞானகுருவே !
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு (2)
மலைமேவு குமரேசனே !

—குமரேச சதகம்

பணத்தின் பெருமை

பணந்தானே அறிவாகும் ; பணந்தானே
வித்தையுமாம் ; பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் ; பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர் ;
பணந்தானே பேசுவிக்கும் தண்டலைநீள்
நெறியாரே! பாரின் மீது
பணந்தானே பந்தியிலே குணந்தானே
குப்பையிலே படுக்குந் தானே. (3)

—தண்டலையார் சதகம்

1. அரும்பதவுரை

1. துயர் - துன்பம், கோது - குற்றம், நிந்தை - பழி, சீவன் - உயிர், சீறு - சீறிவரும், அரவம் - பாம்பு.

2. சிங்கார வனம் - பொழுதுபோக்கும் வனம். தீஞ்சொல் - இனியசொல், புகல் - சொல்லுகிற, திரை - அலை, வாவி-தடாகம், கஞ்சம் - தாமரை, கொட்டி - நீர்ப்பூவில் அற்பமான ஒரு வகை. கானகம் - காடு, அசடர் - அறிவில்லாதவர், சாளக்கிராமம் - பூசைக்குரிய கருமை நிறமுள்ள ஒருவகைக் கல், இது வட நாட்டு ஆறுகளில் உண்டு. சாரம் - சுவை, குறுமுனி - குள்ளமான உருவுடைய அகத்திய முனிவர்.

3. வித்தை - கல்வி, பான்மை - தன்மை, பந்தி - வரிசை, பலர்க்கு முன்வரும் நிலை.

2. கேள்விகள்

1. ஐந்தலை அரவம் எவ்வுண்மையை விளக்கும்?
2. உடன்பிறந்தவர் எங்ஙனம் வாழ்தல் வேண்டும்?
3. 'அசடர் பெரியோர் ஆவரோ' என்ற உண்மையை விளக்க எத்தனை திருஷ்டாந்தங்கள் வந்தன?
4. குடிப்பிறப்பாற் பெருமை இல்லை, அறிவால் பெருமை உண்டு என்பதைப் பற்றி ஒரு வியாசம் எழுது.
5. 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' என்ற பழமொழியைத் தலைப்பாக வைத்து ஒரு வியாசம் எழுது.

II. கதைச் செய்யுட்கள்

1. நண்டின் தந்திரம்

[பஞ்ச தந்திரம்]

மீனென்றையு மேதின் றுடல் மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பால்நண்டுத னைக்கண்டிரை கொள்ள,
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பால்நண்டதை, 'நீஇங்குறை பண்பேதுரை' என்ன, (1)

'என்னென் றுரை செய்வேன்! இனி யானெங்ஙனம் உய்வேன்!
கொன்னுந்திய வலைகாரர்கள் கூடிக் குளம்ஏரி
மன்னுந்தடம் எல்லாமிக வளைந்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன்முதல் சேரப்பிடித் தாரே. (2)

'இந்தக்குளம் நாளைக்கென எண்ணிக்கொடு போனார்;
அந்தப்படி வந்தேபிடித் தவர்காவினில் எடுத்தே
சந்தக்கடை தொறுமீன்மலை தானேஎன விற்பார்!
எந்தப்படி இவர்தப்புவ தெனஎண்ணி இருந்தேன். (3)

‘ அந்தப்பழி காரர்வரு முனமேஒரு பாயம்
சிந்தித்தனன் நான்;அப்படிச் செய்தாலவை உய்யும்;
எந்தப்படி யானும்அழைத் திங்கேவரு வாயேல்,
இந்தக்குளம் விட்டோர்குளம் எய்தும்படி செய்வேன்.’ (4)

என்றேபக ராசன்சொல, இயல்நண்டதை நம்பி,
சென்றேபல மீனோடுரை செயவே,அவை கூடி,
‘ நன்றே ’ என வர, ஒவ்வொரு நடைக்கொன்றுகொண் டேகிக்
கொன்றே,சில தின்றே,சில கொடும்பாறையில் உலர்த்தி, (5)

அலவன் தசை தனைஉண்டிட அதையும்கொடு செல,அந்
நிலமெங்கணும் மீனென்புகள் நிறைகொண்டது கண்டே,
‘ நலதிங்கிது பலமீனையும் நனிதின்றது! நமையும்
கொலவந்தது! நாமும்இது கொலுமுன்கொலு வோமே, (6)

‘நம்மால்வரு பிழையேஇது, நாமும்அந்த மீன்போல்
சும்மா இருந் தனமேல்,கொலும்; இதிலேஒரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினிச் செய்வேம்’என எண்ணி,
அம்மாபகன் கழுத்தைக்கவை அடியால்நெருக் கியதே. (7)

நெருக்குண்டற வீழ்ந்தேபகம் நீங்கிற்றுயிர்; அலவன்
இருக்குந்தலம் ஏகித்தன தினத்தோடிருந் ததுவே.
செருக்கும்பகை பெரிதாகிலும், சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைத்தாலதில் முடியாததும் உண்டோ? (8)

—வீரமார்த்தாண்ட தேவர்

1. அரும்பதவுரை

1. பால் நண்டு - பால்போல வெண்மை நிறமுடைய ஒருவகை நண்டு, மோனம் - மௌனம், கொடு - கொண்டு, அதை - அக் கொக்கை, உறை - தங்கி இருக்கின்ற, பண்பு - செயல்.

2. உய்வேன் - பிழைப்பேன், கொன்றுந்திய-அச்சம் நீங்கிய, வலைகாரர் - செம்படவர், மன்னும் - (நீர்) நிரம்பிய, தடம் - குளம், வளைந்து - சூழ்ந்து, சேர - ஒன்றாக.

3. காவினில் - காவடியில், இவர் - இவரிடமிருந்து.

4. பழிகாரர் - பொல்லாதவர், உய்யும் - பிழைக்கும், எய்தும்படி - அடையும்படி.

5. பகராசன் - கொக்குகட்கு அரசன், இயல் - நற்குணமுள்ள, உரைசெய - சொல்ல, கொடும் - வெப்பம் பொருந்திய.

6. அலவன் - நண்டு, தசை - மாமிசம், நிறைகொண்டது - நிறைந்திருப்பது, நலது - நல்லது, நனி - மிகுதியாக, கொல - கொல்ல.

7. இருந்தனமேல் - இருந்தோமானல், கொலும் - கொல்லும், சூழ்ச்சி - தந்திரம், வகைவருமாறு - ஒழுங்காக, மா - பெரிய, பகன் - கொக்கு, கவை அடி - பிளவுபட்ட கால்.

8. தலம் - இடம், இனத்தோடு - சுற்றத்துடன், செருக்கும் - கர்வப்படும். முருக்கும்படி - அழிக்கும்படி.

2. கேள்விகள்

1. கொக்கு மௌன யோகத்தில் இருந்தது ஏன் ?
2. 'நீ இங்குறை பண்போது? உரை' என்ற நண்டிற்குக் கொக்குக் கூறியது யாது ?
3. அது ஏன் அவ்வாறு கூறியது ?
4. அதை நம்பிய நண்டு யாது செய்தது ?
5. கொக்குச் செய்த நம்பிக்கைத் துரோகம் யாது ?
6. அதை நண்டு எப்படி அறிந்துகொண்டது ?
7. நண்டு கொக்கை எப்படிக் கொன்றது ?
8. இதனல் நீ அறியும் நீதி யாது ?

2. முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

(பஞ்ச தந்திரம்)

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்,
செறியுமோர் காட்டி லேஓர்
சிங்கமுண்(டு); அந்தக் காட்டில்
உறுவிலங்(கு) அனைத்தும் வேட்டை
ஆடிஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி, (1)

“ஆணிளஞ் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினமொன் றாக
ஊண்உனக்(கு) அளிப்போம்” என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய்
அருந்திஅங் கிருக்கும் நாளில், (2)

தனிமுயல் ஒன் றுக் கோர்நாள்,
தன்முறை வருத லோடும்,
“இனிஅது விடாது நம்மை;
எனினும்ஓர் எடுப்பெ டுத்து
வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உயர்ந்தோம் ஆகில்,
நனிவிலங் கனைத்தும் உய்யும்;
நமக்குநற் புகழுண்(டு)” என்றே, (3)

கருதிஅச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி,
"மன்னன்நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை; பிந்தி
வருவதென்? உரைநீ," என்று
மனந்தனில் சினந்து கூற, (4)

"ஐய!நின் பசிவே ளைக்கு
அடியனேன் வந்தேன்; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவிஅங் கொளித்தி ருந்தேன்;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யஉன் பக்கல் வந்தேன்,
சுவாமி!"என்(று) இறைஞ்சி நிற்க, (5)

"சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டாய் ஆகில்,
அங்கதைக் காட்டு வா!"என்(று);
அழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர(வு) அதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்த்த(து);
அதன்நிழல் உருவம் தோன்ற, (6)

தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து,
துன்னுபங் கத்(து)அ முந்தித்
துளங்கியே கலங்கி நெஞ்சம்

இன்னலால் உயிரை நீத்து
இறந்தது(ஆல்); 'உபாயத் தாலே
என்னதான் ஆகாது?' என்று
இசைத்தனன் தேவ சன்மா.

—வீரமார்த்தாண்ட தேவர்

1. அரும்பதவுரை

1. குறு - சிறிய, செறியும் - மரங்கள் அடர்ந்த, உறு - இருந்த, ஊன் - இறைச்சி, கொடு - கொண்டு, விலங்கு - மிருகங்கள்.

2. அடவி - காடு, ஆணை இட்டு - சத்தியம் செய்து.

3. எடுப்பு - முயற்சி, வினை - செயல், நனி - மிகுந்துள்ள, உய்யும் - பிழைக்கும்.

4. மத வேழம் - மதங்கொண்ட யானை, சினந்து - கோபித்து.

5. பைய - மெதுவாக, பருமுழை - பெரிய பொந்து, துய்ய - பரிசுத்தமான, இறைஞ்சி - தொழுது.

6. பங்கமும் - சேறும், புனலும்-நீரும், பாழ்ந்துரவு-பாழுங் கிணறு.

7. சத்துரு - பகைவன், துளங்கி - வருந்தி, இன்னல்-துன்பம், நீத்து - விட்டு, இசைத்தனன் - சொன்னான்.

2. கேள்விகள்

1. சிங்கம் முதலில் என்ன செய்து வந்தது ?
2. விலங்குகள் அதனோடு செய்துகொண்ட ஒப்பந்தம் யாது ?
3. கிழமுயல் தனக்குள் என்ன எண்ணியது ? அது என்ன செய்தது ?
4. சிங்கம் அதனைக்கண்டு கோபத்தோடு என்ன கேட்டது ?
5. அதற்கு முயல் அளித்த பதில் யாது ?

6. முயல் சிங்கத்தை எங்கு அழைத்துச் சென்று எப்படி ஏமாற்றியது ?
7. சிங்கத்தின் கதி யாதாயிற்று ?
8. தேவசன்மா யாது கூறினன் ?
9. நீ இக்கதையால் அறிவது யாது ?

III. பலசுவைச் செய்யுட்கள்

1. தமிழ் நாடு

வயல்வளத்தில் மிகச்சிறந்தே வளம்பெறுநன் னாடு
வள்ளல்களும் புலவர்களும் வாழ்ந்திருந்த நாடு
கயல்வாளை மீன்இனங்கள் களிப்புறுநன் னாடு
கண்மணியிற் சிறந்ததமிழ் காட்சிதரு நாடு
வயல்உழவும் கைத்தொழிலும் வளம்பெறுநன் னாடு
வண்மையுடை மூவேந்தர் வாழ்வுபெற்ற நாடு
மயில்இறகும் மிளகும்பெருங் கடல்கடந்த நாடு
மணமிகுந்த சந்தனமும் மகிழ்ந்தளித்த நாடே. (1)

பறவைகளும் தமிழ்மொழியில் பாட்டிசைக்கும் நாடு
பல்புலவர் இருந்துசங்கப் பாஇசைத்த நாடு
குறத்தியர்நற் றமிழ்மொழியில் குரவையாடு நாடு
குயில்குரலார் கிளிமொழியார் கொஞ்சுதமிழ் நாடு
அறஞ்செறிந்த தமிழரசர் ஆண்டிருந்த நாடு
அடிகள்பலர் அருள்உரைகள் ஆட்சிபெற்ற நாடு
மறம்போற்றி வாள்வீரர் மகிழ்ந்துகாத்த நாடு
மாண்புற்ற **தெய்வத்தமிழ்** மணங்கமழ்நன் னாடே. (2)

—வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.

---

2. சீதக்காதியின் புகழ்

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே. (1)

ஈயாத புல்லர் இருந்தென்ன? போயென்ன? எட்டிமரம்
காயா திருந்தென்ன? காய்த்துப் பலனென்ன? கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் மால்சீதக் காதி ஒருவனுமே. (2)

—படிக்காசுப் புலவர்

3. வேளாளர் பெருமை

வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லாரும் உழுவார்தம் தலைக்கடைக்கே;
கோதைவேல் மன்னவர்தம் குடைவளமும் கொழுவளமே;
ஆதலால், இவர்பெருமை யார்உரைக்க வல்லாரே!

—கம்பர்

4. படைத்தவன் காப்பான்

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ?—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்!
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ஔவையார்.

5. சமையல் வகை

சற்றே துவையலரை; தம்பியொரு பச்சடிவை;
வற்றலே தேனும் வறுத்துவை;—குற்றமில்லை
காயமிட்டுக் கீரைகடை; கம்பமென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி.

—சிவஞான முனிவர்.

---

6. புலவர் வீரம்

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ?—மேதினியில்
கொல்லி மலையுடைய கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்? (1)

மன்னவனும் நீயோ? வானுலகு முன்னுலகோ?
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு? (2)

—கம்பர்.

---

7. அன்பில்லாதவள் இட்ட உணவு

காணக்கண் கூசுதே; கையெடுக்க நாணுதே;
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே;—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ!
அன்பில்லாள் இட்ட அமுது.

—ஒளவையார்.

1. அரும்பதவுரை

1. தமிழ் நாடு

(1) கவின் - அழகு, உறு - பொருந்திய, வண்மை - ஈகை, அளித்த - வெளிநாடுகட்குக் கொடுத்த, பழைய காலத்தில் தமிழ் நாட்டு மயில் இறகு, யானைத் தந்தம், மிளகு, சந்தனக் கட்டைகள் முதலியன அயல் நாடுகட்கு ஏற்றுமதி ஆயின.

(2) சங்கப்பா - சங்க நூல்கள், குரவை - குறிஞ்சி நிலத்துப் பெண்கள் தம்முள் கைகோத்து ஆடும் ஒருவகைக் கூத்து, செறிந்த - நெருங்கிய (மிகுந்த), அடிகள் - துறவிகள் (இளங்கோ அடிகள் முதலியோர்), மறம் - வீரம், மாண்புற்ற - பெருமை பொருந்திய.

2. சீதக்காதியின் புகழ்

சையத் காதர் என்னும் பெயர் 'செய்தக்காதி' என்று மருவி, பிறகு சீதக்காதி என மருவியது. இவர் முஸ்லீம் கனவான். இவர் ஊர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள காயல்பட்டினம். இது கடற்கரையூர். இவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்த வள்ளல்.

(1) கார்தட்டிய - மழை இல்லாது போன, காரியப்பேர் - காரியஸ்தர், தட்டினும் - தடுத்தாலும், தட்டு - முட்டுப்பாடு, மார்தட்டிய - முன்வந்த, துரை - சிறந்தவர், மால் - பெருமை உடையவர்.

(2) புல்லர் - அற்பர், எட்டி மரம் - கசக்கும் காயும் பழமும் உடைய மரம், யாசகம் - பிச்சை, ஈபவன் - கொடுப்பவன்.

3. வேளாளர் பெருமை

வேதநூல் - இருக், எஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள், கலை - அறிவுநூல்கள், ஓதுவார் - படிக்கும் அறிஞர்கள், உழுவார் - வேளாளர், தலைக்கடை - வாயிற்படி, கோதை - மாலை, கொழு - கலப்பையின் நுனியிலுள்ள இரும்பாலான பாகம்.

4. படைத்தவன் காப்பான்

முட்டமுட்ட - மிகவும் தட்டிப்போன, பாரம் - காப்பாற்றும் பொறுப்பு, அவன் - அந்தச் சிவபெருமான், அன்னாய் - தாயே.

5. சமையல் வகை

வற்றல் ஏதேனும் - ஏதாவது ஒரு வற்றலை, காயம் - பெருங்காயம், மிளகு காய் - மிளகாய்.

6. புலவர் வீரம்

(1) காதம் - பத்து மைல், காசினி - உலகம். ஓதக் கடல் - ஒலிக்கின்ற கடல், கொல்லிமலையுடைய கொற்றவா - கொல்லிமலையைத் தன்னகத்தில் கொண்ட சோழநாட்டை யாளும் அரசனே, முனிந்தால் - கோபித்தால், முனிவு - கோபம்.

(2) வானுலகு - தேவலோகம், ஓதினேன் - கற்றேன், படித்தேன், வேந்து - அரசன்.

7. அன்பில்லாதவள் இட்ட உணவு

நாணுதே - அச்சமாயிருக்கிறதே, என்பு - எலும்பு, வீணுக்கு - ஒரு பயனும் இல்லாமல், அமுது - உணவு.

கேள்விகள்

1. (1) தமிழ்நாட்டின் பண்டைச் சிறப்புகள் எவை?
   (2) அதன் இன்றைய சிறப்புகள் எவை?
   (3) மூவேந்தர் யாவர்?
2. (1) 'சீதக்காதி'—இதன் பழைய உருவம் யாது?
   (2) சீதக்காதி வள்ளலின் குணச் சிறப்பு யாது?
   (3) எட்டிமரம் ஏன் குறிக்கப்பட்டது?
3. (1) வேளாளர் சிறப்பு யாது?
   (2) அவர் சிறப்புக்குக் காரணம் என்ன?
4. (1) உயிர்களைக் காப்பது யாருடைய பொறுப்பு?
   (2) இச் செய்யுளில் விளங்கும் நீதி என்ன?
5. (1) சிவஞான முனிவர் அருளிய பாடலில் சொல்லப்படும் சமையல் வகைகள் எவை?
   (2) கீரைக்கு என்ன சேர்த்துக் கடையச் சொல்லுகிறார்?
6. (1) 'காதம் இருபத்து நான்கு'—இது எந்த நாட்டின் பரப்பளவு?
   (2) 'கற்றவரை எந்த அரசரும் விரும்புவர்' என்ற கருத்துள்ள வரி எது?
7. (1) அன்பில்லாதவள் இட்ட உணவு எப்படி இருந்தது?
   (2) இப்பாடலால் நீ அறிவது என்ன?